
வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 276 | பக்கங்கள் : 20





**08** ராஜபக்சாக்கள் மீண்டெழுவது சாத்தியமா?


**10** பல தலைமுறைகளாக அழியாத நினைவுகளுடன் இருந்த பல நினைவுச் சின்னங்கள் அழிக்கப்பட்டன!


**11** ரணில் அரசின் ஜெனிவா பொறி யாருக்கு வைக்கப்படும் இலக்கு?


**16** நீண்ட காலமாக அல்லற்படும் 'அப்காசியா' மக்கள்:

# கூட்டமைப்பு, தமிழரசு தலைமைகள் மாற்றப்பட்டால்தான் விடிவு ஏற்படும்

## தமிழரசின் மூத்த தலைவர் சி.வி.கே. அதிரடிக் கருத்து



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 11

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் தலைமைப் பொறுப்புக்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். காலத்தின் தேவை கருதி இந்த மாற்றங்கள் மிக அவசியமானவை. மக்கள் மத்தியில் கூட்டமைப்பு மீதான விமர்சனம் வலுவாகியுள்ள நிலையில் இந்த மாற்றங்கள் கட்டாயமானவை. மக்களும் அதனை எதிர்பார்க்கின்றார்கள்."

-இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம்.

19

## மொட்டு கட்சி நாமல் கையில்!

கொழும்பு, செப். 11

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு புதிய இளைஞர் உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் பொறுப்புகள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கட்சியின் தலைவர் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் நாமல் ராஜபக்ஷவுக்கு இந்தப் பணிகளை வழங்கியுள்ளனர்.

வரவிருக்கும் தேர்தல் மற்றும் கட்சியின் அமைப்புக்காக அதிக

19

## அரசியல் தீர்வு உறுதி!

### ஜெனிவாவில் கூறியது அரசு

கொழும்பு, செப். 11

தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஓர் ஒழுங்கு முறையில் தீர்வுகளைக் காணும் பணியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையிலான அரசு முன்னெடுக்கும். இலங்கையின் தேசிய இனப் பிரச்னைக்கு நிரந்தர அரசியல் தீர்வை எமது அரசு முன்வைத்தே தீரும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ உறுதியளித்தார்.

ஜெனிவா சென்றுள்ள இலங்கை அரச குழுவிலுள்ள முக்கியஸ்தரான நீதி

19

## ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு புதிய ஆணையாளராக வோல்கர்!

ஜெனிவா, செப். 11

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த தூதரக உயரதிகாரி வோல்கர்டர்க் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளராகப்

19



## புதிதாக பதவியேற்கவுள்ளனர் 12 அமைச்சரவை அமைச்சர்கள்!

கொழும்பு, செப். 11

புதிதாக 12 அமைச்சரவை அமைச்சர்களை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களில் 10 பேர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்தும், எஞ்சிய இருவர் வேறு கட்சிகளிலிருந்தும் நியமிக்கப்பட உள்ளனர்.

நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தன, சி.பி. ரத்நாயக்க, பவித்ரா வன்னியாராச்சி, ஜனக பண்டார தென்னக்கோன், எஸ்.பி.திஸாநாயக்க, விமலவீர திஸாநாயக்க, சரத் வீரசேகர, எஸ்.எம்.சந்திரசேன ஆகியோரை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

19

### பயங்கரவாதச் சட்டத்துக்கு எதிரான

## ஊர்திவழி கையெழுத்துப் பேரணி நேற்று மாவிட்டபுரத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 11

இலங்கை மக்களை வதைக்கும் கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்து பெறும்

19



## இலங்கையில் 1 மில்லியன் விவசாயிகளுக்கு அமெரிக்கா 40 மில்லியன் டொலர் நிதியுதவி!

### கொழும்பு வந்துள்ள சமந்தா பவர் அறிவிப்பு

கொழும்பு, செப். 11

இலங்கையில் உள்ள 1 மில்லியன் விவசாயிகளுக்கு உதவுவதற்காக அமெரிக்க மக்களிடமிருந்து 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளதாக சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க உதவித்திட்டத்தின் நிர்வாகி சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு சமந்தா பவர் நேற்று கொழும்புக்கு வந்து சேர்ந்தார்.

19





## போர்க்குற்றச்சாட்டை ஏற்க நாம் தயாரில்லை

### நீதியமைச்சர் விஜயதாஸ திட்டவட்டம்

ஜெனிவா, செப். 11

"இலங்கை மீது எந்தவொரு தரப்பினரும் போர்க்குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது. அதையும் மீறி எமது நாடு மீது

19

## இலங்கை மீதான கண்காணிப்பை வலுப்படுத்தவேண்டும் ஜெனிவா!

### சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

கொழும்பு, செப். 11

இலங்கை மீதான கண்காணிப்பை வலுப்படுத்துமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை அழைப்பு விடுத்துள்ளது.

எனவே ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான தற்போதைய பொறுப்புக்கூறல் திட்டத்தை வலுப்படுத்துமாறும் அது வலியுறுத்தியுள்ளது.

தற்போதைய

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது!

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. அந்தக் கொடிய சட்டம் நீக்கப்பட்டே ஆகவேண்டும்.

அதனால்தான் பல சர்வதேச தன்னார்வ அமைப்புக்களும் அதனை வலியுறுத்தி வருகின்றன.

ஐரோப்பிய ஒன்றியம் ஜிஎஸ்பி பிளஸ் சலுகையை இலங்கைக்கு வழங்குவதற்கும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்திருக்கின்றது.

அந்தச் சட்டத்தின் கொடுமையை அதிகம் சந்தித்தவர்கள் தமிழ் மக்களே. பல தசாப்தங்களாக தமிழர்களை வாட்டிவதைத்த இந்த சட்டத்தின்கீழ் இன்றும் பலர் பல வருடங்களாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

அதிகம் ஏன், கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரனை படுகொலை செய்ய திட்டமிட்டதாக கூறிக் கைதுசெய்யப்பட்டு இன்றும் பல மாதங்களாக சிலர் சிறையில் இருக்கின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சகோதரர்களும் அந்தச் சட்டத்தை எதிர்கொள்ள நேர்ந்தது. அவர்களும் தமிழர்களைப் போலவே தொடர்ந்து சிறையில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவே, அந்தச் சட்டத்தை திருத்தம்செய்வதற்கு சில திருத்தங்களை கோட்டாபய அரசாங்கம் பாராளுமன்றத்திலும் சமர்ப்பித்திருந்தது. அந்த திருத்தம் முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும் சொல்லப்பட்டது.

இப்படியொரு திருத்தம் கொண்டுவருவதற்காக அரசாங்கம் ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தபோதுதான், நமது கூட்டமைப்பின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரும் மகஜரில் கையெழுத்துப்பெறும் நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர்.

நீர்கொழும்பில் அவ்வாறு கையெழுத்துப் பெறுகின்றபோது பலரும் முண்டியடித்து கையெழுத்துப் போடுகின்ற புகைப்படங்களை அந்த எம்.பி.க்கள் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்திருந்தையும் காணமுடிந்தது.

கடைசியாக மாத்தறையில் அப்படி கையெழுத்துப் பெற்றதாக ஞாபகம். அந்தக் கையெழுத்தைப் பெறும் நடவடிக்கை நடைபெற்ற போது அந்தச் சட்டம் நீக்கப்படும்வரை தமது போராட்டம் ஓயாது என்று அவர்கள் வீர சபதமும் எடுத்துக்கொண்டனர்.

ஆனால் அது நீக்கப்படாமலே, அவர்களின் அந்தப் போராட்டமும் காணாமல் போனது.

கையெழுத்துப் பெறப்பட்ட அந்த கையெழுத்துக்களுடன் கூடிய மகஜர் யாருக்கு அனுப்பப்பட்டது என்பதோ அல்லது அதற்கு என்ன நடந்தது என்பதோ இன்றுவரை பொதுவெளியில் தெரிவிக்கப்படவில்லை.

இப்போது, அந்தச் சட்டம் சிங்கள இனத்தவர்கள் மீது பாயத் தொடங்கியிருக்கின்றது. அரகலய என்ற பெயரில் போராட்டம் நடந்தபோது, அத்துமீறி நடந்துகொண்டார்கள் என்று காரணம் கூறப்பட்டு பலரும் இப்போது கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். அவர்களில் சிலர் மீதும் பயங்கரவாத தடைச்சட்டமே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

அதாவது இன்று அது சிங்கள மக்கள் மீதும் பாயத் தொடங்கியிருக்கின்றது.

அந்த வேளையில் திடீரென்று, நமது தமிழரசுக்கட்சி அதற்கு எதிராக மீண்டும் கையெழுத்துப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றது.

அதுகும் காங்கேசன்துறையிலிருந்து அம்பாந்தோட்டைவரை அந்த போராட்டம் நடக்கவிருக்கின்றது.

சிங்கள மக்கள் இன்று அந்த சட்டத்தால் பாதிக்கப்படத் தொடங்கியிருக்கின்றபோது, இப்படியொரு போராட்டத்தை அம்பாந்தோட்டை வரை நடத்தினால் மிகப்பெரிய கூட்டத்துடன் போராட்டத்தை நடத்தி முடிக்கலாம் என்பது தெரிந்த சங்கதி தான்.

அப்படியொரு மாபெரும் போராட்டத்தை நடத்தி தமிழரசுக் கட்சி நாடளாவிய ரீதியில் தனது நடவடிக்கையை விஸ்தரிப்பது நல்லதுதான். இலங்கை தமிழரசுக்கட்சி என்ற தனது பெயருக்கு இப்போதாவது பொருள் கொடுக்க முற்பட்டிருக்கின்றது.

இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்ட அன்றுதான் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய காணி அபகரிப்பு தொடர்பான செய்தியும், பளையில் இராணுவத்தினருக்கு ஆயிரத்து எண்ணூறு ஏக்கர் காணி வழங்கப்படவிருப்பதான செய்தியும் வந்திருக்கின்றது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீர்க்க உல்லாசப் பயணத் துறையை தூக்கி நிமிர்த்தவேண்டும் என்ற போர்வையில் திருமலை ஆலயக்காணி உல்லாசப் பயணத்துறையை இலக்குவைத்து அபகரிக்கப்படவும், விவசாயத்துறையை தூக்கி நிமிர்த்த என்ற போர்வையில் இராணுவத்தினர் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக என்ற போர்வையில் கொஞ்ச நஞ்சமல்ல ஆயிரத்து எண்ணூறு ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நமது மக்களுக்காக எது முக்கியமானது என்பதை தெரிவு செய்வதில் கூட நமது அரசியல்வாதிகள் வில்லாதி வில்லர்கள்தான் போங்கள்!

- ஊர்க்குருவி

# இந்த அரசாங்கத்தில் ஊழல் தொடர்கிறது

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 12

இந்த அரசாங்கத்தின் கீழ் ஊழல் மோசடிகள் தொடர்கின்றன. சேதனை பசளை இறக்குமதி என்ற போர்வையில் நாடு 7.6 மில்லியன் டொலர்களை இழந்துள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

ஐந்து பேரைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தது 62 ஆயிரத்து 220 ரூபாய் தேவைப்படுவதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர அறிக்கையை மேற்கோள் காட்டிய அவர், ஆனால் இன்று நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மாதாந்தம் ஊதியம் பெறுபவர்களில் 70 விகிதமானோர் 62,000 ரூபாவுக்கும் குறைவான சம்பளமே பெறுகிறார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

வறுமை தொடர்பான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கை நிலைமை மோசமடைந்துள்ள நிலையில் போசாக்குக் குறைபாடு தொடர்பான யுனிசெப் அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என அரசாங்கம் வாதிடுவது சரியானதா என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

(அ)

# நாணய நிதிய உடன்படிக்கை குறித்து சபையில் விவாதம் கோரும் எதிர்க்கட்சி!

கொழும்பு, செப். 11

சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கை தொடர்பில் பாராளுமன்றில் விவாதமொன்றை கோரவுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்துள்ளார்.



எதிர்வரும் நாட்களில் இடம்பெறவுள்ள பாராளுமன்ற கூட்டத்தொடர் தொடர்பான குழுக் கூட்டத்தில் இந்த கோரிக்கை விடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முதலில் இந்த ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# காரைநகர் - ஊர்காவற்றுறை இடையே பாதைச் சேவையை சீராக்கவேண்டும்

## வடக்கு ஆளுநரிடம் மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 11

காரைநகர் - ஊர்காவற்றுறை பாதைச் சேவையை சீராக இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இப்பாதையூடாக போக்குவரத்துச் செய்யும் அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இப்பாதைச் சேவை இடம்பெறாமையால் தாங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்துள்ள இவர்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபை இவ்விடயத்தில் அசமந்தப் போக்கை கடைப்பிடிக்கின்றது எனவும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காரைநகர் மற்றும் வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென் மேற்கு உள்ளிட்ட பல இடங்களில் இருந்து ஊர்காவற்றுறை, வேலணை மற்றும் தீவுப் பிரதேசத்தில் உள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களும், இதேபோன்று மேற்படி தீவகத்தில் இருந்து காரைநகர் மற்றும் இதர பிரதேசங்களில் உள்ள அலுவலகங்களுக்கு செல்லும் அரச உத்தியோகத்தர்களும் மற்றும் பொதுமக்களும் என ஆயிரக்கணக்கானோர் தினமும் இப்பாதை ஊடாகவே பயணத்தை மேற்கொள்கின்றோம். எரிபொருள் இன்மையைக் காரணம் காட்டி கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக பாதைச் சேவை இடம்பெறவில்லை. இக்காலத்தில் தனியார் படகுச் சேவை இடம்பெற்று வருகின்றது. இப்படகு மூலமான பயணம் ஆபத்துக்கள் நிறைந்தது என்பதுடன் எமது மோட்டார் சைக்கிள்களின் மக்காட், கண்ணாடி, சிக்னல் போன்றன அடிக்கடி உடைந்து சேதமடைகின்றன. மேலும் வாகன அடிச் சட்டமும் பாதிக்கப்படுகின்றது. மோட்டார் சைக்கிள்களை ஏற்றி இறக்கும்போது கீழே வீழ்ந்து உதிரிப்பாகங்கள் சேதமடைகின்ற சம்பவங்களும் அவ்வப்போது நிகழ்கின்றன. அத்துடன் இருவழிக் கட்டணமாக தினமும் 200 ரூபா பணம் செலுத்தவேண்டி உள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் எமது வாகனங்களின் உதிரிப்பாகங்களை அடிக்கடி மாற்றுவது என்பதும், தினமும் 200 ரூபா பணம் செலுத்துவது என்பதும் எங்களை கடுமையாக பாதித்துள்ளது. இச்சுமையை எங்களால் சுமக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பாதை விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை தொடர்ந்தும் அசமந்தப் போக்கை கடைப்பிடிக்கின்றது என நாம் உணர்கின்றோம். பயணிகள் சேவையில் ஈடுபடும் இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துகளுக்கு விசேட அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படுவது போன்று பாதைக்கும் எரிபொருள் வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். அத்தியாவசிய சேவையான பாதை ஒன்று இருக்கின்ற நிலையில் நாம் இவ்வாறு வீணான சிரமங்களை எதிர்நோக்குவது வேதனையானது.

மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய இயந்திரமே தங்களிடம் இருப்பதால் மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்ள முடியாத காலங்களில் சேவையை மேற்கொள்ள முடியாமல் உள்ளது என வீதி அபிவிருத்தி அதிகார சபை பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால், பெற்றோலில் இயங்கக்கூடிய இயந்திரம் ஒன்றையும் வைத்திருப்பதன் மூலம் மண்ணெண்ணெய் இல்லாத நேரங்களில் பெற்றோலில் இயக்கி சேவையை மேற்கொள்ள முடியும் என நம்புகின்றோம்.

எனவே, இவ்விடயத்தில் தாங்கள் அதிகூடிய கரிசனை எடுத்து பாதைச் சேவை தடையின்றி சீராக நடைபெற ஏற்பாடு செய்வதன் மூலம் அரச உத்தியோகத்தர்களினதும் பொதுமக்களினதும் வீண் சிரமங்களுக்கும் பொருளாதார இழப்புக்களுக்கும் தீர்வு பெற்றுத்தருமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)






# கௌரவமான அரசியல் தீர்வு கோரி தலைமன்னாரில் நேற்று போராட்டம்!

மன்னார், செப். 11

கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனிப் பொருளில் வடக்கு-கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெறவுள்ள செயல் திட்டத்தின் 41 ஆவது நாள் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று தலைமன்னாரில் இடம்பெற்றது.

வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஒழுங்கமைப்பில் அதன் இணைப்பாளர் சகாயம் திலீபன் தலைமையில் நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தலைமன்னார் கிராமம் பகுதியில் இது நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கிராம மட்ட அமைப்புகள்,விவசாய, மீனவர் சங்கங்கள், பெண்கள்அமைப்புகள்,சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், மன்னார் மெசிடோ மற்றும் பாதிக் கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

குறித்த செயல் திட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களால் 100 நாள் செயற்திட்டத்துக்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டதுடன் வருகை தந்த மக்களுக்கு அரசியல் தீர்வு திட்டம் மற்றும் 13 ஆம் திருத்தச் சட்டத்தின் சாதக பாதக விளைவுகள் தொடர்பாக தெளிவுபடுத்தல் வழங்கப்பட்டது.

அதேநேரம் அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான கருத்துக்களும் உள்வாங்கப்பட்டன. (அ)

# சு.க. அனுமதியின்றி 6 எம்.பிக்கள் இராஜாங்க அமைச்சர்களாகினர்!

## மைத்திரிபால சிறிசேன விசனம்

கொழும்பு, செப்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் எவ்வித அனுமதியுமின்றி இராஜாங்க அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ளதாக, அதன் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள், நேற்று முன் தினம் இராஜாங்க அமைச்சர்களாக பதவியேற்றனர்.

இடைக்கால அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்படுமானால் மாத்திரமே, அரசாங்கத்துக்கு ஆதரவளித்து, பதவிகளை ஏற்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்ததாக கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அந்தத் தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்டு, அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டதை அனுமதிக்க முடியாது. சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தங்களது தனிப்பட்ட இலாபத்தை அடிப்படையாகக்கொண்டு இராஜாங்க அமைச்சுப் பதவிகளை ஏற்றமை குறித்து தாம் வருத்தம் தெரிவிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன குறிப்பிட்டார். (அ)

# எம்பிக்களுக்கான கொடுப்பனவுகளுடன் அமைச்சர்களாகச் செயற்பட இணக்கம்

கொழும்பு, செப். 11

சகல அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும், அமைச்சர்களுக்கான வரப்பிரசாதங்கள் இன்றி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளுடனேயே செயற்படுவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதனால் நாட்டிற்கு எந்த சுமையும் ஏற்படாது. மாறாக தனி ஒரு அமைச்சர் ஒரு துறையை நிர்வகிப்பதைக் காட்டிலும், ஒவ்வொரு துறைக்கும் ஒரு அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் நியமிக்கப்பட்டிருப்பதால், அதனை மேலும் முன்னேற்றுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.

இதனால் பொருளாதார பின்னடைவு ஏற்பட்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் பாரிய நன்மை ஏற்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார். (அ)

# மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சி!

கொழும்பு, செப். 11

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்படி, பிரேண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 8928 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

டப்ளிவ் ரீ. ஐ ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 83.52 அமெரிக்கா டொலராக காணப்படுகின்றது.

அந்த பீப்பாய் ஒன்றின் விலை நேற்று முன்தினம் 81.94 அமெரிக்க டொலராக வீழ்ச்சி யடைந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ

# பாடநூல் அச்சிடும் மூலப்பொருள் இந்திய கடனிலிருந்து இறக்குமதி

கொழும்பு, செப். 11

பாடநூல் அச்சிடுவதற்கு தேவையான மூலப்பொருட்களை இந்திய கடன் உதவியின் கீழ் இறக்குமதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



மேலும் பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளில் 30 வீதம் உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்டு வழங்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# வவுனியாவில் பொலிஸாரின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை

கொழும்பு, செப். 11



வவுனியா பொலிஸாரின் ஏற்பாட்டில் வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் நேற்று நடமாடும் சேவை இடம்பெற்றது.

156 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு மக்க ளுக்கு இலகுவாக சேவைகளை பெற்றுக் கொள்ளும் முகமாக வவுனியா பொலிஸாரின் ஏற்பாட்டில் இந்த நடமாடும் சேவை இடம் பெற்றது.

குறித்த சேவையில் மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தங்களுக்கான சேவைகளைப் பெற்றுச்செல்வதை அவதானிக் கக்கூடியதாக இருந்தது.

இதேவேளை, சிறு குற்றப் பிரிவு முறைப்பாடுகள், தொலைந்த ஆவணங்கள் பற்றிய முறைப்பாடுகள், அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல், இணக்க சபைச் செயற்பாடுகள், கிராம அலுவலரின் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளை உடனடியாக பெற்றுக் கொள்ளக் கூடிய வகை யில் குறித்த நடமாடும் சேவை ஒழுங்கமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி ஜெயக்கொடி, மத்தியஸ்தர் சபையின் உப தலைவர் அமிர்தலிங்கம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தி யோகத்தர்கள், பொலிஸார், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ரயில் பயணச்சீட்டு தட்டுப்பாடு!

கொழும்பு, செப். 11

ரயில் திணைக்களத்தில் பயணச்சீட்டுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

ரயில் நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு ஏற்ப பயணச்சீட்டு வழங்குவதில்லை என பயணிகள் சிலர் தெரிவித்தனர்.

இது குறித்து, ரயில்வே உதவிப் பொது முகாமையாளர் எஸ். பொல்வத்த கூறுகையில், பயணச்சீட்டுகளை அச்சிடத் தேவையான காகிதம் இல்லாததே இதற்குக் காரணம் என்றார். (அ)

# இலங்கையில் ஒருவேளை உணவை பெறமுடியாதுள்ள 57 இலட்சம் பேர்!

## உலக உணவுத்திட்டம் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 11

**இலங்கையில் சுமார் 57 லட்சம் பேர் ஒருவேளை உணவை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் இருப்பதாக உலக உணவுத் திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.**

அத்துடன் அவர்கள் மனிதாபிமான உணவு அவசியத்தின் பின்னணியில் இருந்து வருவதாகவும் உணவுத்திட்டத்தின் அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகையை கொண்டுள்ள இலங்கையில் கடந்த 70 வருடங்களில் ஏற்பட்ட மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் உலக உணவுத்திட்டம் கூறியுள்ளது.

அதேவேளை, பொருளாதாரச் சிரமங்கள் காரணமாக தமது அன்றாட வாழ்க்கையில் உணவு தேவையை பூர்த்தி செய்துகொள்ள முடியாது மிகவும் கஷ்ட நிலைமையை எதிர்நோக்கியுள்ள பல குடும்பங்கள் குறித்து தற்போது ஊடங்க ளில் பரவலாகச் செய்திகள் வெளியாகி வருவதைக் காண முடிகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வயோதிப தாயும் மகளும் பதுளையில் படுகொலை!

### மற்றொரு மகள் படுகாயம்

கொழும்பு, செப். 11

பதுளை, ஹிகுருகமுவ பிரதேசத்தில் வயோதிபப் பெண் ஒருவரும் அவருடைய மகளும் கூரிய ஆயுதத்தால் தாக்கிப் படு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பெண்ணும் அவரது 2 மகள்களும் பிரதேசத்தில் உள்ள தோட்ட வீடு ஒன்றில் வசித்து வந்ததாகவும், அவர்கள் நேற்று காலை தாக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் 83 வயதான தாயும் 55 வயதுடைய மகளும் உயிரிழந்துள்ளதாகவும், வெட்டுக்காயங்களுக்கு உள்ளான 62 வயதுடைய மகள் அபத்தான நிலையில், பதுளை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

கொலைக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை எனவும், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்ய பதுளை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## ரெலோவின் ஊடகப்பேச்சாளர் சுரேந்திரன் ஜெனிவா பயணம்

கொழும்பு, செப். 11

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பிக்க இருக்கும் 51 ஆவது மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் பங்கேற்க ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் நேற்று முன்தினம் ஜெனிவா பயணமாகியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையிடுதல் சம்பந்தமாக பிரதான நாடுகளின் வதிவிடப் பிரதிநிதிகளையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர் தரப்பு ஒருமித்த நிலையில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் யுத்தக் குற்றங்கள் மற்றும் அட்டூழிய குற்றங்களுக்கான நீதிக்காக குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்தவேண்டும் என்று பாதுகாப்புச் சபையை தூண்டும் பிரேரணையை நிறைவேற்ற கோரி அறிக்கை அனுப்பி வைத்துள்ளனர்.

இப்பயணம் அதை ஒட்டியதாக அமைந்துள்ளது என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## பாணின் எடையை குறைத்து 190 ரூபாவுக்கு விற்க ஏற்பாடு



கொழும்பு, செப். 11

சில பேக்கரி உரிமையாளர்கள் 190 ரூபாவுக்கு நிர்ணயிக்கப்பட்ட எடைக்குக் குறைவான பாணை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

சில பேக்கரி உரிமையாளர்கள் ஒரு பாணின் எடையை 300 அல்லது 350 கிராம் வரை குறைத்து அந்த விலைக்கு விற்பனை செய்வதாக அதன் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார். (அ)

## ஜப்பான் செல்கிறார் ரணில்!



கொழும்பு, செப். 11

நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விரைவில் ஜப்பான் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பயணத்தின்போது அவர் பல ஜப்பானிய அரச தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

ஜனாதிபதியின் ஜப்பான் விஜயத்தின் பின்னர் புதிய அமைச்சரவை அமைச்சர்கள் பலர் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அரசாங்க காலத்தில் ஜப்பான் அரசாங்கத்துடனான உறவில் தளர்வு நிலை ஏற்பட்டிருந்த சூழலில் பதவி ஏற்ற காலத்திலிருந்து அந்த உறவை சீர் செய்யும் முனைப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கேகாலையில் விபத்து; மூவர் பரிதாப மரணம்!

கொழும்பு, செப். 11

கேகாலையில் நேற்று முன்தினம் இரவு 10.45 அளவில் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

வான் ஒன்றும் மூன்று மோட்டார் சைக்கிள்களும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு-கண்டி வீதியின் ரன்வல பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வானைச் செலுத்தி சென்றவர், நித்திரை காரணமாக மூன்று மோட்டார் சைக்கிள்களையும் மோதியபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)

## இலங்கையில் தூதரகத்தை மூடுகின்றது நோர்வே அரசு

கொழும்பு, செப். 11

வெளிநாடுகளிலுள்ள தனது இராஜதந்திர அலுவலக வலையமைப்பில் கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்த நோர்வே அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நோர்வே வெளிவிகார அமைச்சினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கு அமைய, ஐரோப்பாவிலும், அதற்கு அப்பால் காணப்படும் இராஜதந்திர அலுவலக வலையமைப்பில் கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்த நோர்வே அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த மீளமைப்புகளின் அங்கமாக, வெளிநாடுகளில் காணப்படும் ஐந்து நோர்வே தூதரகங்களை நிரந்தரமாக மூடிவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில், கொழும்பிலுள்ள நோர்வே தூதரகமும் அடங்கியுள்ளது. கொழும்பில் அமைந்துள்ள நோர்வே தூதரகம், மாலைதீவுகளுக்கும் இராஜதந்திர சேவைகளை வழங்கி வரும் நிலையில், 2023 ஜூலை மாத நிறைவில் இதனை மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள தூதரகத்தை மூடிவிடுவதற்கு தீர்மானித்தபோதிலும், அதனால் நோர்வே மற்றும் இலங்கை இடையே காணப்படும் பரஸ்பர உறவில் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது. இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவான அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு நோர்வே அரசாங்கம் தொடர்ந்தும் தன்னை அர்ப்பணித்துள்ளது. நீண்ட காலமாகத் தொடரும் பரஸ்பர இராஜதந்திர உறவுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதை உறுதி செய்வதற்கு, இலங்கையை உள்வாங்கும் வகையில், பிராந்தியத்தில் காணப்படும் மற்றுமொரு நோர்வே தூதரகத்தில் தலைமை அதிகாரியையும், இராஜதந்திர ஊழியர்களையும் நியமிப்பதற்கு நோர்வே எதிர்பார்த்துள்ளது.

நோர்வே தூதுவர் டீரன யுரன்லி எஸ்கடேல் கருத்துத் தெரிவிக்கையில், “கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தை மூடத் திட்டமிடப்பட்டுள்ள செய்தியை பகிர்ந்து கொள்வதில் கவலை கொள்கின்றேன். மாற்றமடைந்து வரும் புவியியல் அரசியல் மற்றும் நோர்வேயின் ஈடுபாடுகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க நோர்வே வெளிநாட்டு சேவைகள் எவ்வாறு நிறுவப்படவேண்டும் என்பதன் பெறுபேறாக அமைந்திருப்பதுடன், இலங்கையுடன் தொடர்புடையதாக அமைந்திருக்கவில்லை. இலங்கையுடன் எமது நட்பான பரஸ்பர உறவுகளை தொடர்ந்து பேணுவோம். அபிவிருத்திக்கான உதவிகளும் தொடரும்.” என்றார்.

1960 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு நோர்வே உதவிகளை வழங்கி வருகின்ற நிலையில், இலங்கை மத்திய வருமானமீட்டும் நாடு எனும் நிலையை எய்தியிருந்ததைத் தொடர்ந்து, நோர்வேயினால் இலங்கைக்கு வழங்கப்பபடும் உதவிகள் படிப்படியாக குறைவடைந்திருந்தன.

எவ்வாறாயினும், நோர்வேயினால் நீண்ட கால அடிப்படையிலான, தற்போது முன்னெடுக்கப்படும் சில அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. இவற்றில், வட மாகாணத்தில் தொழில் மற்றும் உணவு பாதுகாப்புக்கான ஆதரவும் அடங்குகின்றது. 2021 ஆம் ஆண்டில், இலங்கைக்கு நோர்வே வழங்கியிருந்த மொத்த அபிவிருத்திக்கான உதவிகளின் பெறுமதி 59.7 நோர்வே குரோனர்களாகும். (சுமார் 2150 மில்லியன் ரூபாய்கள்). இதில், 21 மில்லியன் நோர்வே குரோனர்கள் (சுமார் 756 மில்லியன் ரூபாய்) தூதரகத்தினூடாக வழங்கப்பட்டிருந்தது.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையைக் கவனத்தில் கொண்டு, கடந்த மாதம் நோர்வேயினால் 13 மில்லியன் நோர்வே குரோனர்கள் (சுமார் 490 மில்லியன் ரூபாய்) மனிதநேய உதவி ஐக்கிய நாடுகள் அமைப்புகளினூடாக வழங்கப்பட்டிருந்தது.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் மூடப்பட்டதன் பின்னர், பிராந்தியத்திலுள்ள மற்றுமொரு நோர்வே தூதரகத்தினூடாக தூதரக சேவைகள் வழங்கப்படும். ஏற்கனவே நியூ டெல்லி நகரில் வீசா மையம் ஒன்று காணப்படுவதுடன், இலங்கை மற்றும் மாலைதீவுகளிலிருந்து கிடைக்கும் வீசா விண்ணப்பங்களை கையாள்கின்றது. விண்ணப்பதாரிகள், கொழும்பிலுள்ள வி.எவ்.எஸ். அலுவலகத்துக்கு விஜயம் செய்து விஸா முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

1996 ஆம் ஆண்டு கொழும்பில் தனது தூதரகத்தை நோர்வே திறந்திருந்தது. 1976 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தனது அலுவலக மொன்றைக் கொண்டிருந்தது. வரலாற்று ரீதியில், இலங்கையின் சமாதான மற்றும் ஒருமைப்பாட்டு செயன்முறைகளில் நோர்வே முக்கிய பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu
11.09.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அமெரிக்க உதவி நிறுவனத்தின் (USAID) கவனத்திற்கு?

அமெரிக்க உதவி நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான சமந்தா பவர், இலங்கைக்கு விஜயம் செய்திருக்கின்றார். பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் இலங்கையின் நிலைமைகளை ஆராயும் நோக்கிலேயே, பவரின் விஜயம் இடம்பெற்றிருக்கின்றது. இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் பேசியபோது, இந்திய உதவியை பாராட்டியிருந்த பவர், சீனாவை சாடியிருந்தார். சீனாவின் கடனானது, வலிந்து ஏற்படுத்தப்பட்ட கடன் மேலாதிக்கமென்றும் வர்ணித்திருந்தார். சீனாவின் காலூன்றல் தொடர்பில், அமெரிக்க ஆய்வாளர்கள் தொடர்ந்தும் பேசிவருகின்றனர். அண்மையில் அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏயின் தலைவர் கூட, இலங்கையின் பிரச்னையை சீனாவின் தலையீட்டின் விளைவுகளில் ஒன்றென்றே குறிப்பிட்டிருந்தார். இவ்வாறானதொரு பின்னணியில்தான், சமந்தாவின் இலங்கை விஜயம் இடம்பெற்றிருக்கின்றது.

சமந்தா பவர், அமெரிக்காவின் ஜனநாயக கட்சியின் உறுப்பினராவார். பராக் ஒபாமா ஜனாதிபதியாக இருந்த காலத்தில், அவருடன் நெருக்கமாக பணியாற்றிவர்களில் சமந்தா முக்கியமானவர். வெளிவிவகார கொள்கையில் மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்திவரும் சமந்தா, ஒபாமாவின் காலத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராகவும் இருந்தவர். அமெரிக்காவில் மனித உரிமை விடயத்தில் ஒரு ஜனரஞ்சக நட்சத்திரம் என்று வர்ணிக்கப்படுமளவிற்கு, மனித உரிமை விவகாரங்களில் கடும்தொனி குரலாக தொழிற்பட்டவர். இவர் ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராக இருந்த காலத்தில், இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். இலங்கை தொடர்பான ஒபாமா நிர்வாகத்தின் அணுகுமுறைகளை வடிவமைத்தவர்களில் இவரும் ஒருவர்.

எனினும் இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பில், கொழும்பை பொறுப்புக் கூறச் செய்யும் அமெரிக்க முயற்சிகள் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. ஏனெனில் அமெரிக்கா மென்மையான அணுகுமுறைகளையே கடைப்பிடித்துவருகின்றது. யுத்தம் நிறைவுற்று பன்னிரெண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட, பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் எவையும் நிறைவு செய்யப்படவில்லை. எனினும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களோ, இப்போதும் அமெரிக்க தேசிய கொடியை கையிலேந்தியாவாறு தெருக்களில் நின்றுகொண்டிருக்கின்றனர்.

இவற்றுக்கு அப்பால், யுத்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் மீது, மேற்குலகம், குறிப்பாக அமெரிக்கா பிரத்தியேக கவனத்தையும் செலுத்தவில்லை. கடந்த பன்னிரெண்டு வருடங்களில் அமெரிக்க உதவி நிறுவனம் பிரத்தியேக திட்டங்களை வடக்கு கிழக்கில் மேற்கொள்ளவில்லை. திருகோணமலையில் பிராந்திய அலுவலகத்தை கொண்டிருந்த காலத்தில் காண்பித்த ஈடுபாட்டை, யுத்தத்திற்கு பின்னர் காண்பிக்கவில்லை. நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்களை பலவீனப்படுத்தியல் அமெரிக்காவின் அன்றைய பயங்கரவாதம் தொடர்பான வெளிவிவகாரக் கொள்கைக்கும் முக்கிய பங்கிருப்பதாக மேற்குலக ஆய்வாளர்களே சுட்டிக்காட்டியிருக்கின்றனர். அமெரிக்கா இதனை திட்டமிட்டு செய்யாத போதிலும், அமெரிக்காவின் கொள்கையை ராஜபக்ஷக்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டனர்.

சமாதான முன்னெடுப்பில் அனுசரணையாளராக தொழிற்பட்ட நோர்வே, முயற்சிகள் தோல்வியடைந்த பின்னர், பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் பிரத்தியேக கவனத்தை செலுத்தவில்லை. இன்று இலங்கைக்கான தூதரகத்தையே மூடவுள்ளதாக அறிவித்திருக்கின்றது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை கண்டுகொள்ளாமல் மேற்குலகம் நழுவிவிட்டதா? - வெறுமனே உதட்டளவில்தான் விடயங்கள் நோக்கப்படுகின்றனவா என்னும் கேள்வியெழுக்கின்றது.

சமந்தா பவர், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் உதவுவது தொடர்பிலும் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பிக்க வேண்டும். தமிழ்ப் பகுதியில், பிராந்திய அலுவலகம் ஒன்றை நிறுவ வேண்டும். தமிழ் சிவில் சமூக மற்றும் உள்ளூர் அரசு சாரா நிறுவனங்களுக்கு புத்துயிரளிக்க வேண்டும்.

# வெளிநாட்டவர்கள் ஜேர்மனி சென்று தொழில் புரிவதற்கு ‘கிறீன் கார்ட்’!

## டிப்ளோமா அல்லது அனுபவம் 35 வயதுக்குக்குக் கீழ் வாய்ப்பு





*சகல துறைகளிலும் காணப்படுகின்ற பெரும் தொழிலாளர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காகப் பல ஆயிரக்கணக் கான வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்குக் கதவைத் திறக்கிறது ஜேர்மனி. இதற்காகப் புதிய ‘கிறீன் கார்ட்’ (green card) நடைமுறை ஒன்றை அந்த நாட்டின் தொழில் அமைச்சு இந்த வாரம் அறிமுகம் செய்துள்ளது.*

*ஐரோப்பிய ஒன்றியப் பிரஜைகள் அல்லாத தகைமை வாய்ந்த பிற நாடுகளின் தொழிலாளர்களை நாட்டுக்குள் வரவழைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.*

*ஜேர்மனிய மொழியில் "Chancenkarte" எனப்படுகின்ற இந்தக் ‘கிறீன் கார்ட்’ அதன் ஜேர்மன் மொழி அர்த்தத்தில் ‘வாய்ப்பு’ அல்லது ‘சந்தர்ப்பம்’ என்ற கருத்தைக் கொண்டுள்ளது.*

*இலகுவான நான்கு தகைமைகளைக் கொண்டவர்கள் எந்தத் தொழில் வாய்ப்பும் இல்லாவிடினும் விண்ணப்பித்து வீஸா பெற்று நாட்டுக்குள் வந்து பின்னர் பொருத்தமான தொழிலைத் தேடிக் கொள்வதற்குக் கிறீன் கார்ட் உதவும் என்று அதனை ஊடகங்களுக்கு அறிமுகப்படுத்திய ஜேர்மனியின் தொழில் அமைச்சர் ஹூபர்டஸ் ஹெய்ல் (Hubertus Heil) தெரிவித்திருக்கிறார்.*

*விண்ணப்பிக்கத் தகைமையுள்ள தொழிலாளர்களுக்கான நிபந்தனைகள் :*

*1) ஒரு பல்கலைக்கழகப் பட்டம் (degree) அல்லது தொழில்முறைத் தகுதி(professional qualification)*

*2) குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் தொழில்முறை அனுபவம்.*


*3) மொழித் திறன் (Language skill) அல்லது ஜெர்மனியில் முந்தைய வதிவிடம்.*

*4) 35 வயதிற்கு உட்பட்டவர்கள் அதிக எண்ணிக்கையான வெளிநாட்டுத் தொழிலாளர்களை உள்ளீர்ப்பதை நோக்கமாகக் கொண்டு புள்ளிகள் அடிப்படையிலான குடியேற்றத் திட்டம் (points-based immigration system) ஒன்றை ஜேர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சிக் கூட்டணி அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.*

*அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே கிறீன் கார்ட் நடைமுறையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியப் பிரஜைகள் தொழில் தேடி ஜேர்மனிக்குள் வருவதற்கு வாய்ப்பு வசதிகள் உள்ளன. ஆனால் பிற நாடுகளைச் சேர்ந்தவர்கள் வேலை ஒன்றை உறுதி செய்து விண்ணப்பித்தால் மட்டுமே அங்கு வருவதற்கான வீஸாவைப் பெற்றுக் கொள்ள முடியும். புதிதாக அறிமுகமாகின்ற கிறீன் கார்ட் (Chancenkarte) தொழில் தகுதி உள்ள ஒருவர் தொழில் வாய்ப்பு ஒன்றை உத்தரவாதப்படுத்தாமலேயே விண்ணப்பித்து ஜேர்மனிக்குள் நுழைவதை இலகுபடுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்தத் திட்டம் தொடர்பான விவரங்கள் வரும் மாதங்களிலேயே முழுமையாக வெளியாகும்.* •

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# சித்தர்களின் குரல் - ஆர்.எஸ்.மனோகரன் அவர்களின் பகிர்வில் இருந்து

பகிர்வு -46

கணபதி சர்வானந்தா

இந்தியாவிலே நடக்கும் கும்பமேளாவில் நாத்திக நண்பர் ஒருவருக்கு ஏற்பட்ட இளவயது அனுபவம். ஒரு சுவாரஸ்யமான வாசிப்புக்காக– சமயங்களைச் சாடுவதாக எண்ண வேண்டாம். ஒருவன் தன்னை அறிந்து கொண்ட அனு பவத்தை இவ்வாறு பதிவிட்டிருக்கிறான். அதனூடாக ஏதாவது கிடைத்தால் பெற்றுக் கொள்ளுங்கள். பகிர்வு தொடர்கிறது.

ஒருமுறை என்னுடன் பணிபுரியும் ஹிந்தி நண்பன் அலகா பாத்தில் நடைபெறும் கும்பமேளா என்னும் திருவிழா பற்றி என்னிடம் கூறினான். அப்போது எனக்கு வயது 23. புத்தகங்கள் பற்றியும் வாழ்க்கையை பற்றியும் நான் உணராத காலம் அது. என் நண்பன் மிகப்பெரிய பக்திமான். நானோ ஒரு நாத்தீகன். கிறிஸ்தவ சூழலில் பிறந்தவன்.

அந்த விழாவில் பல்லாயிரக்கணக்கான யோகிகள் மற்றும் ரிஷிகள், முனிவர்கள், பக்தர்கள் என எல்லோரும் கலந்து கொள்வார்கள். மூன்று நாட்களும் விழா கோலாகலமாக நடக்கும் என்று கூறி என்னை அங்கு வரும்படி கட்டாயபடுத்தினான் அவன். மறு நாள் ரெயில் வண்டி ஏறி ஒரு வழியாகக் கும்பமேளா நடைபெறும் இடத்துக்குச் சென்றேன். நன்றாகக் குளித்து விட்டு காற் சட்டை அணிந்து கொண்டேன். ஆனால் என் நண்பன் விபூதி பூசிக்கொண்டு பக்தியோடு சாமியாக என் முன் வந்து நின்றான்.

கொஞ்ச நேரத்தில் கும்பமேளா ஆரம்பமாகியது. உள்ளே வந்து விட்டோம்.... எங்கு பார்த்தாலும் நீக்கமற ஒரே சாமியார்கள். உடம்பெல்லாம் சாம்பலையும் சந்தனத்தையும் பூசிக்கொண்டும் தியானம் செய்து கொண்டும் கூட்டம் கூட்டமாய் போய் கொண்டு இருந்தார்கள். பாதிப்பேர் கௌபீனம் கட்டி இருந்தார்கள். கொஞ்சப் பேர் அதுகூட இல்லாமல்..... ஆனால் உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், ஏதோ ஒரு விதத்தில் அந்தச் சூழல் எனக்கு பிடித்திருந்தது.

ஏன் என்று தெரியவில்லை. ஏதோ ஒன்று நடக்க போவதாக என் உள்ளுணர்வு சொல்லிக் கொண்டே இருந்தது. இடையியே அந்தச் சாமியார்கள் கூட்டத்தைப் பார்க்கவா இவ்வளவு தூரம் வந்தோம் என்று சலிப்பும் வந்தது. நான்ஒரு பெரிய மரத்தடியில் இருந்து எல்லோரையும் வேடிக்கை பார்த்து கொண்டு இருந்தேன். திடீரென ஒரு வயதான சன்னியாசி என் அருகில் வந்ததும் தடு மாறிக் கீழே விழுந்தார். நான் சட்டென்று எழுந்து விழுந்த அந்த முதியவரைத் தூக்கிவிட்டு, மூட்டையாகக் கட்டியிருந்த அவரது துணிப்பையை எடுத்துக் கொடுத்தேன். “ஐயா பார்த்து போங்க” என்றேன் தமிழில். உடனே அவர் சற்றும் தாமதிக்காமல் தமிழிலேயே எனக்கு பதிலளித்தார். அதைக் கேட்டதும் நான் வாய்பிளந்து மூச்சற்றவ னாக நின்றேன். காரணம் அவர் தமிழ் பேசியதற்காக அல்ல, என் முழுப் பெயரையும் சரியாகச் சொல்லி நன்றி கூறினார். அதுதான் என் வியப்பிற்குக் காரணம்.

“ஐயா என் பெயர் எப்படி உங்களுக்கு தெரியும்?” என்று கேட்டேன். “எல்லாம் மாயை நீ புரிந்து கொள்ளும் காலம் வரும் காத் திரு” என்றார். அவர்மேல் ஏதோ ஒருவித நம்பிக்கை துளிர்விட ஆரம்பித்தது! நான் அடுத்த கேள்வியைக் கேட்கத் துணிந்தேன். ”

ஐயா என் வருங்காலத்தைப் பற்றி உங்களால் கூற முடியுமா?” என்றேன். “முடியும், ஆனால் அதை இப்போதே தெரிந்து கொண்டால் உன எஞ்சியுள்ள வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக் காது” என்றார் அவர். ஐயா அப்படியானால் என் கடந்த காலம் ஏன் நான் நினைத்த வாறு இல்லாமல் துன்பகரமாகவே சென்றது? – என்று கேட்டேன்.

“உன் ஆசை தான் உன் துன்பத்திற்குக் காரணம். உனது பொறாமை உணர்ச்சியே உன்னைப் பாழாக்கிக் கொண்டதற்கு மூலகாரணம். அடுத்தவரது பொருள் மீதோ அவர்மீதோ பொறாமைப் படாதே. மாறாக அவர்களுக்கு மனதிற்குள்ளேயே வாழ்த்துக் கூறு. பொருள் மீது ஆசை வைப்பது தவறல்ல. பொறாமையுடனான பார்வையையும் எண்ணங்களையும் பிறர் மட்டும் வீசாதே. ” என்றார்.

உடனே எனது உடல் உலுங்கியது. பயத்தால் நடுங்கினேன். அப்படியே சொல்கிறாரே என்று மலைத்தேன். “நான் நிறையத் தவறுகள் செய்ததாக உணர்கிறேன்.” என்றேன்.

“இதுவே கடைசியாக இருக்கட்டும். இனி நல்லவற்றை மட்டுமே உணரத் தொடங்கு. உன்னுடைய வலுவான எண்ணங்களால் எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கப் பழகு. அன்பைக் கற்றுக் கொள். கடவுளை நம்பு” என்றார் அவர். அந்த வார்த்தைகள் என் நெஞ்சில் ஆழமாக ஊடுருவிச் சென்றது.

“பொறாமையுடனான எண்ணமோ அல்லது கடும் கோபத் துடனான எண்ணமோ விஷத்தைப் போன்றது” என்றார்.

என் வாழ்க்கையில் ஒரு புதிரான கேள்விக்கு பதில் அளிக்கச் சிறந்த நபர் இவர்தான் என முடிவு செய்து விட்டு “ ஐயா நான் இறந்த பின்னர் சொர்க்கம் செல்வேனா ? அல்லது நரகம் செல் வேனா? என் உயிர் எவ்வளவு காலம் இந்த பூமியில் வாழும்? எனச் சற்றுப் புன்முறுவலுடன் கேட்டேன். என் மகனே! ஒரு பெரிய நதி ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு ஓடுவதைப் போல எம் ஆத்மா பல நூறு ஆண்டு களாக அழியாமல் இருந்து கொண்டேதான் இருக்கிறது. இந்த பூமியில் பிறந்து வாழ்ந்து இறந்த பின் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கிறது.ஒரு உயிருக்கு பிறப்பும் இறப்பும் மாறி மாறி வருபவை. நாம் பல்வேறு காலங்களில் உலகின் வெவ்வேறு நாடுகளில் பிறந்திருப்போம். அப்படித்தான் நாம் நீண்ட அழிவில்லாத வாழ்க் கையை அடைந்துள்ளோம்” என்றார். அந்த வார்த்தைகளை கேட் டதும் எனக்குள் இருந்த தனியாத தேடல் முடிந்து பெருமகிழ்ச்சி வெள்ளம் படையெடுத்து வந்ததுபோல் ஓர் உணர்வு உண்டாயிற்று.

ஐயா நான் கணாததை நம்பச் சொன்னால் என்னால் எப்படி நம்ப முடியும்? நான் கடவுளை கண்டதேயில்லையே!! மறுபடி யும் கேட்டேன். ஒரு புதிரான கேள்வியை அவரிடமே கேட்டுவிட் டேன். அவர் மீண்டும் புன்முறுவல் பூத்தார். ஆனால் பதில் இல்லை.

நான் அடுத்த நொடியிலேயே யார் கடவுள்?” என்றேன்.

அதற்கு ”நீதான் கடவுள்” என்றார்.

நானா? – நான் சிரித்தேன்.

கையில் மெழுகுவர்த்தியை வைத்து கொண்டு நெருப்பைத் தேடாதே” என்றார். நான் குழம்பினேன். ”அப்படியானால் நானும் என் பெற்றோரும் கடவுள் என வழிபடும் “....” அவர் யார்? என் றேன். அவரும் உன்னையும் என்னையும் போன்ற ஒரு மனிதனா கப் பிறந்து ஞானம் அடைந்தவர்தான். ஞானம் அடைந்தவர்களை மக்கள் கடவுளாக எண்ணுவது இயல்பே. நானும் ஞானம் அடைந்து விட்டேன். அது போல நீயும் அடையலாம். எல்லா மனிதனுக்குள் ளும் இருக்கின்ற அந்த தெய்வீகத் தன்மையே கடவுள்” என்றார். “அப்படியானால் கோவில், தேவாலயம், மசூதி இவையெல்லாம் எதற்கு?” – என்றேன்.

அவையெல்லாம் அறியாமக்களின் ஏற்பாடுகள். சில மத குருக் கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் இடங்கள் இவை. உன் வீட்டில் உனக்காக ஒரு சிறிய அறை உள்ளதா? அதற் குக் கதவு உள்ளதா? யாரும் தொந்தரவு செய்யாத இடமாக அது உள் ளதா? போதும். உள்ளே சென்று மூடிக்கொள். அதுதான் உன் ஆல யம்.” என்றார் நான் அந்த மகா யோகியின் பாதங்களில் வீழ்ந்தேன். வணங்கினேன். என்னைத் தட்டிக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

சில நிமிடங்களில் திரும்பி வந்து என்னைப் பார்த்த எனது நண் பனுக்கு ஒரே ஆச்சரியம்... விழிபிதுங்கி நின்றான். நான் அந்த ஞானி செல்வதையே கண்கொண்டாது பார்த்தபடி கைகூப்பி வணங்கி கொண்டு இருந்தேன்!! என்னை என்னுள் அறியச் செய்தவர் அல்லவா அவர்.

# இந்தவார ராசிபலன் 11.09.2022 - 17.09.2022



செப்ரெம்பர் 11 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 26

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : பிரதமை




நீங்கள் நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். அரசு வழியிலான எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். எதிர்பார்த்த வரவுகள் வந் தாலும் செலவுகள் அதிகரிக்கும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். இறை வழிபாட்டிற்காக ஆலயங் களுக்கு சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் பணிக்கு பாராட்டுகள் கிடைக்கும்.




உங்கள் எண்ணங்கள் நிறைவேறும் வாரம் இது. தொழிலில் முன்னேற்றம், வருமானம் அதிகரிப்பு, விரும்பியதை வாங்கும் நிலை உண்டாகும்.எதிர்பாராத செலவுகளும் அலைச்சலும் ஏற்படும். முயற்சிக்கேற்ற பலன்களை அடைவீர்கள். இதுவரை இருந்து வந்த பிரச்சினைகளை இல்லாமல் செய்வீர்கள். மற்றவர்கள் ஆச்சரியப்படும் வகையில் உங்களுடைய செல்வாக்கு உயரும்.திருமண முயற்சிகள் நிறைவேறும். நினைத் ததை சாதித்து மகிழ்வீர்கள்.




செயல்களில் நீங்கள் எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். வேலையில் இருந்த நெருக்கடிகள் விலகும். ஒரு சிலருக்கு புதிய வேலை அமையும். தடைபட்டிருந்த வேலைகள் ஒவ்வொன்றாய் முடியும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். உங்கள் அனுகு முறையில் மாற்றம் உண்டாகும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றியாகும். ஒரு சிலர் புதிய சொத்து வாங்குவீர்கள்.வரவுகள் அதிகரிக்கும். லாப மான வாரம் இது.




முயற்சிகள் இழுபறியாகும். எதிர்பாராத சங்கடங்களை சந்திப் பீர்கள். முயற்சிகள் பலிதமாகும். செயல்கள் வெற்றியாகும். எதிர் பார்த்த வரவுகள் வந்து உங்கள் நிலையை உயர்த்தும். மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். நீங்கள் எதிர்பார்த்தவற் றில் உங்களுக்கு சாதகமான நிலை உண்டாகும். செல்வாக்கு உயரும். தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர்கள். உங்கள் சுய ஆற்றல் வெளிப்படும்.




முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். அரசு வழி முயற்சிகள் வெற்றியாகும். கவனமும் எச்சரிக் கையும் தேவைப்படும். நெருக்கடிகள் நீங்கும். அரசு வழியில் நீங் கள் மேற்கொள்ளும் முயற்சிகள் சாதகமாகும். எதிர்பார்த்த அனுமதி கிடைக்கும். செயல்களில் தடுமாற்றம் உண்டாகலாம். சிந்தித்து செயல்படுவதும். நிதானத்தைக் கடை பிடிப்பதும் நன்மையை உண்டாக்கும்.




முயற்சிகள் வெற்றியாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நினைத்ததை சாதித்து வேண்டியதை அடைவீர்கள். வீட்டில் சுப நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்புண்டாகும். அரசு வழியிலும் நன்மைகள் ஏற்படும். வீட்டில் திருமணப் பேச்சு எழும். பண வரவும் சரளமாகும். செயல்களில் வேகம் இருக்கும். மற்றவர்கள் மதிப்பிற்கு ஆளாவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். உங்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.




முயற்சிகள் நிறைவேறும் வாரம் இது. வியாபாரத்தில் இருந்த தடைகள், குடும்பத்தில் உண்டான குழப்பம் விலகும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். பொருளாதார நிலை உயரும். புதிய முயற்சிகள் பலிதமாகும். கடன்களை அடைத்து நிம்மதி அடைவீர் கள்.புதிய நண்பர்களிடம் எச்சரிக்கை அவசியம். உங்கள் செயல் களால் குடும்பத்தினர் உங்கள் மீது அதிருப்தி அடைவார்கள்.




உங்களுடைய முயற்சிகள் பலிதமாகும். துணிச்சலுடன் செயல் பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். உறவினர்களால் சில சங்கடங்கள் உண்டாகும். உங்கள் வழியில் சென்று நினைத்ததில் வெற்றி பெறு வீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். பண வரவும் ஆதாயங்களும் உண்டாகும். நிதானமுடன் செயல்பட நன்மைகள் ஏற்படும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். உங்களுடைய செயல்களில் லாபம் காண்பீர்கள்.




செயல்கள் நிறைவேறி எதிர்பார்த்த லாபத்தை அடைவீர்கள். உழைப்பு அதிகரித்தாலும் எதிர்பார்ப்புகள் இழுபறியாகும். உங்கள் ஆசைகளை நிறைவேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். நீங்கள் எண்ணியதை நிறைவேற்றி முடிப்பீர்கள். பணியாளர்கள் வேறு இடங்களுக்கு மாறுதலில் செல்ல வேண்டியதாக இருக்கும். குடும்பத்தினரின் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள்.




குடும்பத்தில் உண்டான சங்கடங்கள் விலகும். உங்கள் மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடந்தேறும். அலைச்சல் அதிகரிக்கும். ஒரு சிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள்.துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். அரசு வழியிலான எதிர் பார்ப்பு நிறைவேறும். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற் றுவீர்கள். உங்கள் எண்ணமும் செயலும் ஒன்றாகும்.





விருப்பங்கள் நிறைவேறும். உங்கள் செயல்களில் குடும்பத்தினர் தலையீடு அதிகரிக்கும். வருமானத்திற்குரிய வழிகள் தெரியும். திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். ஆரோக்கியத்தில் பின்னடைவு ஏற்படும். தொழிலில் இருந்த தடைகள் விலகி பண வரவு தாராளமாகும். பொன் பொருள் வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத் தினரின் ஆதரவு இல்லாமல் போகும். குழப்பங்கள் அதிகரிக்கும்.




எதிர்பாராத செலவுகள் வந்து சேரும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். குடும்பத்தினரால் நெருக்கடிகள் தோன்றும். திருமண வயதினருக்கு வரன் தேடிவரும். ஒரு சிலருக்கு வசிக்கும் இடத்தை மாற்ற வேண்டிய நிலை ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள் வீர்கள். பிள்ளைகளின் திருமணம், புதிய வீடு கட்டுதல் என்று உங்கள் சிந்தனை செல்லும். குடும்பத்தில் நீங்கள் எதிர்பாராத பிரச்சினைகள் தோன்றக்கூடும் என்பதால் கவனம் தேவை. உங்கள் செயல்களில் தெளிவு உண்டாகும்.

# தமிழகத்தில் முக்கிய எதிர்க்கட்சியாகும் பா. ஜ. க.!



## சென்னை மடல்
-பகவான் சிங்-

எம்ஜி ஆர்-ஆல் தொடங்கப்பட்ட அதிமுக, இன்னும் ஒரு மாத காலத்தில் 50 ஆண்டு காலத்தை நிறைவு செய்கிறது. இந்தப் பொன்விழா கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ள நிலையில், தொண்டர்களுக்கு ஒரு குழப்பம் எழுந்துள்ளது. ஈ. பி. எஸ். எனப்படும் முன்னாள் முதல்வர் எடப்பாடி கே. பழனிச்சாமி, அவரது எதிரி, ஓ. பி. எஸ். எனப்படும் ஓ. பன்னீர்செல்வம் ஆகிய இருவரில் யாருடைய கொண்டாட்டங்களில் கலந்துகொள்வது என்பதுதான் அந்தக் குழப்பம். அல்லது, சின்னம்மா என்று அழைக்கப்படும் சசிகலா மற்றும் அவரது சகோதரி மகன் டிடிவி தினகரன் ஆகியோர் ஏற்பாடு செய்யும் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதா? கட்சியின் கட்டுப்பாடு யார் கையில் என்று பல மாதங்களாக நிகழ்ந்த பனிப்போரைத் தொடர்ந்து இப்போது 2021 மே மாதத் தேர்தலில் ஆட்சியை மு. க. ஸ்டாலின் தலைமையிலான திமுகவிடம் தோற்றபிறகு, வெளிப்படையான மோதலாகவே இது உருவாகியுள்ளது. ஓர் அமைச்சரின் அந்தஸ்தைக்கொண்ட சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குக் கட்சி எம். எல். ஏக்களால், ஈ. பி. எஸ். தேர்ந்தெடுக்கப்பட்டதை பகிரங்கமாக எதிர்த்தார் ஓ. பி. எஸ். ஆனால், ஈ. பி. எஸ். இதைக் கண்டுகொள்ளாமல், தனது பிடியை இறுக்கி, ஜூலை மாதம் நடந்த பொதுக்குழுவில் ஓ. பி. எஸ்ஸைக் கட்சியிலிருந்து வெளியேற்றி, கட்சியில் தனது இடத்தை நிலைநிறுத்திக்கொண்டார். இந்தப் பொதுக்குழுவைச் செல்லாக்காசாக்க நீதிமன்றத்தின் கதவுகளை ஓ. பி. எஸ். தட்டியும் முயற்சியில் தோல்வி கண்டுள்ளார். இறுதியாக, சசிகலா கோஷ்டியில் சேர்ந்தால் தனக்கு ஒரு மதிப்பான பதவி கிடைக்குமா என்று பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தகவல்கள் வருகின்றன.

கட்சியில் ஏற்கெனவே நிலவும் குழப்பத்துக்கு இடையில், சின்னம்மா, தான் தான் அ. இ. அ. தி. மு. க.வின் பொதுச் செயலாளர் என்றும், 2017 செப்டம்பரில் நடந்த அ. இ. அ. தி. மு. க. பொதுக்குழுக்கூட்டத்தில் தன்னைப் பதவி நீக்கம் செய்தது செல்லாது என்றும் கூறி வருகிறார். 2016 டிசம்பரில் உயிரிழக்கும்வரை ‘அக்கா’ ஜெயலலிதா வகித்துவந்த பொதுச் செயலாளர் பதவியை அவரது மரணத்துக்குப் பிறகு தனக்கு வழங்குமளவுக்குக் கட்சியைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார் அவர். ஜெயலலிதா காலத்திலிருந்தே சசிகலாவின் பினாமியாகச் செயல்பட்டு வந்த டிடிவி தினகரன், அம்மா மக்கள் முன்னேற்றக்கழகம் என்ற கட்சியைத் தொடங்கியபோதும், ஈ. பி. எஸ். - ஓ. பி. எஸ். சண்டையில் தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்ளும் பேராசையில், அந்தப் புதுக் கட்சியில் எந்தப் பதவியையும் சசிகலா வகிக்கவில்லை. தற்போது, மாநிலம் முழுவதும் பயணம் செய்து, கட்சித் தொண்டர்களிடமும் நிர்வாகிகளிடமும் உரையாற்றி, அவர்களைக் கவர முயற்சி செய்துவருகிறார் அவர். ஆனால், ஈ. பி.

## ‘கனவில் ஒரு 7 உறுப்பினர் தேசிய சபை!’

எஸ். கட்டளையால், பலர் சின்னம்மாவைப் புறக்கணித்து வருகிறார்கள். ‘அ. தி. மு. க-வைப் பழைய நிலைக்குக் கொண்டு வரும்வரை தான் ஓயப்போவதில்லை’ என்ற அவரது கோஷங்கள் ஊடகங்களை மட்டும்தான் கவர்கின்றன.

உட்கட்சிக்குள் நிலவும் பூசலுக்கும் தலைமைப் பதவிக்கான பலமுனைப்போட்டிக்குமிடையில், கட்சியின் ‘உண்மையான தொண்டன்’ குழப்பத்திலும் கோபத்திலும் இருக்கிறான். மே 2026 சட்டசபைத் தேர்தலுக்குள் ‘எங்களின் புரட்சித் தலைவரால்’ உருவாக்கப்பட்டு, ‘அம்மா’வால் வளர்க்கப்பட்டு, பல முறை ஆட்சியைப் பிடித்த தங்களின் கட்சி உடைந்து மறைந்துவிடுமோ என்ற அச்சமும் இருப்பதாக அவர்களில் பலர் ஒப்புக்கொள்கின்றனர். ‘அ. தி. மு. க. என்பது ஒன்றரைக் கோடி தொண்டர்களைக்கொண்ட ஒரு மாபெரும் கட்சி என்றும், தமிழகத்தை நிரந்தரமாக ஆளும் சக்தி என்றும் என்றும் அம்மா அடிக்கடி கூறியதுண்டு. ஆனால், சட்டமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தைக்கூடத் தக்கவைத்துக்கொள்ள முடியுமா என்று இப்போது உறுதியாகத் தெரியவில்லை’ என்று முன்னாள் அ. தி. மு. க அமைச்சர் ஒருவர் என்னிடம் வேதனை தெரிவித்தார்.

இந்த முன்னாள் அமைச்சரின் அச்சம் மிகைப்படுத்தப்பட்டதன்று. அண்மையில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் கூட, அ. தி. மு. க. வின் கோட்டையாக இருந்த ஊரகப் பகுதிகள் பலவற்றில் கிராமப் பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி என அனைத்து இடங்களிலும் தி. மு. க மாபெரும் வெற்றி பெற்றிருப்பதைப் பார்க்கிறோம். சட்டமன்றத்தில் கோபக் கனல் தெறிக்கும் முகத்துடன், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் தி. மு. கவைப் பார்த்து விரல் நீட்டி, உலகின் எந்த சக்தியாலும் தனது கட்சியை ஒருநாளும் தோற்கடிக்க முடியாது என்று ஜெயலலிதா கர்ஜித்ததை, பத்திரிகையாளர் இருக்கைகளிலிருந்து நாங்கள் பலமுறை பார்த்திருக்கிறோம்.

“மக்கள் சேவைக்கென்றே தனது வாழ்நாளை அர்ப்பணித்த ஒரு தலைவியின் தலைமையில் வெற்றி நடைபோடும் ஒரு மக்கள் இயக்கம்தான் அ. தி. மு. க.. எனக்கென்று குடும்பம் கிடையாது. தமிழக மக்களே எனது குடும்பம். எனது காலத்திற்குப் பிறகும் பல நூற்றாண்டுகளுக்கு அ. தி. மு. க மக்கள் சேவையைத் தொடரும்” - 2016இல், தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியைப் பிடிப்பதற்கு 4 மாதங்களுக்கு முன்னால் ஜனவரியில், சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய எழுச்சி மிக்க உரை இது.

தன் மீதும் தனது கட்சியின் 1.6 கோடி தொண்டர்கள் மீதும் அவருக்கு அபரிமிதமான நம்பிக்கை இருந்தது. அதன் அடிப்படையில்தான் 2014 நாடாளுமன்றத் தேர்தலில் பாரதப் பிரதமர் பதவிமீதுகூட ஒரு கண் வைத்திருந்தார். தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது மக்களிடையே அவர் அடிக்கடி எழுப்பிய ஒரு கேள்வி, ‘உங்கள் வாக்கு தில்லியின் மோடிக்கா, இந்தத் தமிழக லேடிக்கா?’ என்பதுதான். கூட்டமும் உற்சாகமாக, “லேடிக்கு” என்று பதிலளிக்கும். இறுதியில்

## கொந்தளிக்கப்போகிறது ஜெயலலிதா ஆத்மா?

‘நன்றி, வணக்கம்’ என்று உறுதியான நம்பிக்கையுடன் சொல்லித் தனது உரையை நிறைவு செய்வார். அந்தத் தேர்தலில், தமிழகத்தின் 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 37 இடங்களை அ. தி. மு. க வென்றது. பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 2 இடங்களும், காந்தி குடும்பத்தினரின் காங்கிரஸ் கூட்டணியில் இருந்த திமுக முழுத் தோல்வியும் அடைந்தன. இருப்பினும், அவரது மறைவுக்குச் சில மாதங்களுக்குள்ளாகவே, சசிகலா - ஓ. பி. எஸ் - ஈ. பி. எஸ் மோதலால் கட்சி வீழ்ச்சியடையத் தொடங்கி, தனது மாபெரும் வாக்கு வங்கியைக் கணிசமாக இழந்தும் விட்டது.

முந்தைய நாடாளுமன்றத் தேர்தல்களில் உயர்தட்டு மக்கள், பிராமணர்கள், உயர் சாதியினர் போன்ற பாஜக ஆதரவாளர்கள்கூட அ. தி. மு. க-வுக்குத்தான் வாக்களித்தனர். காரணம், திராவிட மண்ணில், பாஜக வெற்றியடையாது என்பதை உணர்ந்து, தங்களது வாக்குகள் வீணாகக்கூடாதே என்ற ஆதங்கத்தில் அவர்கள் அ. தி. மு. க. வுக்கு வாக்களித்தனர். மேலும், பெரியாரின் கடவுள் விரோதப் போக்கைக் கைக்கொண்ட கருணாநிதியின் தி. மு. க. வுடன் ஒப்பிடும்போது, வெளிப்படையாகக் கோவில்களுக்குச் சென்று தன்னை ஒரு இந்துவாகத் துணிந்து வெளிப்படுத்திக்கொண்ட ஜெயலலிதாவின் செயலும் இதற்கு ஒரு காரணம். ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அ. தி. மு. க உட்கட்சிப் பூசல்களால் வெறுப்படைந்த இந்துக்கள் பலரின் வாக்குகளும் பாஜகவுக்கு எதிர்வரும் தேர்தல்களில் சேரக்கூடும்.

ஆகையால், தி. மு. க. வை எதிர்க்கும் முக்கிய எதிர்க்கட்சியாகவும் பாஜக உருவாகிவருகிறது. 234 உறுப்பினர்கொண்ட தமிழக சட்டமன்றத்தில், திராவிட மண்ணில் தீண்டத்தகாத கட்சியாகப் பார்க்கப்பட்டு வந்த காவிக் கட்சி, கடந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், இதுவரை இல்லாத அளவில் 4 இடங்களில் வெற்றி பெற்றுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது. இப்போது கட்சியின் மாநிலத் தலைவராக, காவல் துறை முன்னாள் உயர் அதிகாரி அண்ணாமலை நியமிக்கப்பட்டிருக்கிறார். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் கணிசமான இடங்களில் தன் கட்சி வெல்லும் என்றும், 2026 மே மாத தமிழகச் சட்டசபைத் தேர்தலில் நாம் ஆட்சியைப் பிடிப்போம் என்றும் அடிக்கடி அண்ணாமலை கூறிவருகிறார். ஸ்டாலின் ஆட்சியில் நடக்கும் குளறுபடிகள் குறித்து இவர் உரக்கப் பேசிவருவது பாஜகவுக்குப் பலனளிக்கலாம். முதல்வருக்கு அண்ணாமலை ஒரு சிம்ம சொப்பனமாக இருக்கிறார் என்பது உண்மை. எம். ஜி.

ஆர் - ஜெயலலிதா காலத்தில் பிரதான எதிரியாகச் செயல்பட்ட அ. தி. மு. க.வின் இடத்தை இப்போது பாஜக பிடித்துள்ளது. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் திமுக எதிர்ப்பில் தலைமை தாங்குவது அ. தி. மு. கவாக இருக்காது என்றும், பாஜக, தன்னுடன் பா. ம. க, விஜயகாந்தின் தே. மு. தி. க, தமிழ் மாநில காங்கிரஸ், புதிய தமிழகம் ஆகிய கட்சிகளை இணைத்து இதில் போட்டியிடும் என்றும் அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. இந்தக் கூட்டணியில் ஒருவேளை, டிடிவி தினகரன் தனது அ. ம. மு. க-வையும் இணைக்கலாம். அதில் ஓ. பி. எஸ்ஸும் இணையலாம். அந்தச் சூழலில், தனித்து விடப்படும் அ. தி. மு. க. (ஈபிஎஸ்), பாஜகவின் நிபந்தனைகளுக்குட்பட்டு, அதே கூட்டணியில் இணைவதைத் தவிர வேறு வழி இல்லாமல் போகலாம். தமிழகத்தின் தன்னிகரில்லாத் தலைமையாகத் தன்னை எப்போதுமே முன்னிறுத்தி, நரேந்திர மோடியையும் பாஜகவையும் சாடியும் அவமானப் படுத்தியும் வந்த ஜெயலலிதாவின் ஆத்மா இதனால் நிச்சயம் கோபத்தில் கொந்தளிக்கும்.

ஞாயிறு காலை உணவை நீங்கள் சுவைப்பதற்கு முன், ஒரு சுவையான செய்திக்காக உங்களுக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்புகிறேன். இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக - அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் பாராளுமன்ற சபாநாயகர் தலைமையிலான 37 உறுப்பினர் கொண்ட தேசிய சபை ஒன்று உருவாக்கப்படுகிறது. புதனன்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நடந்த கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் இந்த சபைக்கு ஒப்புதல் தெரிவித்ததாக கொழும்பு ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆச்சரியப்படத்தக்க வகையில், அடுத்த நாளே, அதிபர் ரணில் விக்ரமசிங்க அமைச்சரவையை விரிவாக்கி, ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஷஷீந்திரா உட்பட, 37 இராஜாங்க அமைச்சர்களை நியமித்தார். இவர்களில் பெரும்பாலானோர் அமைச்சரவைக்குப் புதியவர்கள் அல்ல. கோட்டாபய ஆட்சியில் அங்கம் வகித்த மொட்டு கட்சியினர்தான் இவர்கள். நாட்டின் நிதிச் சுமையை அதிகரித்தாலும், தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்ள ரணில் எடுத்த இந்த அதீதமான நடவடிக்கை பெரும் சர்ச்சைக்கும் கேள்விக்கும் உள்ளானது.

தேசிய சபையில் 37 உறுப்பினர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர்கள் 37 பேர். இரண்டு எண்ணிக்கையும் 37 என்றிருக்கிறதே என்பதுதான் என் குழப்பம். ஒருவேளை இரண்டு 37களையும் சேர்த்து, அத்துடன் இப்போதுள்ள மற்ற அமைச்சர்களையும், இதர பதவிகளில் அமர்ந்துள்ள எம். பி. க்களையும் கூட்டிப் பார்க்கும்போது, கஜானா காலியாக உள்ள இலங்கை, இவர்களின் ஊதியம் மற்றும் இதர செலவுகளையும் எப்படித்தான் சமாளிக்கப்போகிறதோ? அரசாங்கமும் அமைச்சர்களும் செய்யவேண்டிய அதே வேலையை - அதாவது, நாட்டின் நெருக்கடிகளைத் தீர்ப்பதையே தானும் செய்வதானால், இந்த தேசிய சபை தனது எல்லைகளையும் உத்திகளையும் எப்படி வரையறை செய்துகொள்ளப்போகிறது? இப்படியொரு சபை அமைப்பதை அரசியல் சாசனம் அநுமதிக்கிறதா? இல்லையென்றால் சட்ட திருத்தம் கொண்டுவரப்படுமா? இதுபோன்ற பல கேள்விகள் என் மனதைக் குடைய, வெள்ளியன்று இரவு சோர்வுடன் உறங்கச் சென்றேன்.

மறுநாள் காலை மிகவும் அமைதியாக, மகிழ்ச்சியாகக் கண் விழித்தேன். என் ஜன்னலின் வெளியே கேட்கும் பறவைகளின் பாடலும், தோட்டத்தில் மலர்ந்த மலர்களின் அழகும் நறுமணமும் சற்றே கூடியிருப்பதாகத் தோன்ற, நான் உற்சாகமடைந்தேன். உண்மையில், நான் கடந்த இரவு கண்ட கனவே இதற்குக் காரணம். அந்தக் கனவில் ஓர் உடோபியா. எனக்கு இன்னொரு வீடாக இருக்கும் இந்தத்தீவு தேசம், தனது நெருக்கடி நிலையிலிருந்து மீண்டு வருவது போன்ற கனவு. 37 உறுப்பினர் கொண்ட தேசிய கௌன்சில், 7 உறுப்பினர் சபையாக குறைக்கப்படுவதாகவும், ஒவ்வொரு முக்கிய அமைப்பும் ஒவ்வோர் உறுப்பினரை சபையில் பங்குபெறச் செய்வதாகவும் கனவு.

உதாரணமாக, அரசு தரப்பில் ஒரே ஓர் உறுப்பினர், எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து ஓர் உறுப்பினர், வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து தலா ஒரு தமிழ்ப் பிரதிநிதி, ஓர் இஸ்லாமிய பிரதிநிதி, ஒரு கிறிஸ்தவப் பிரதிநிதி, தவிர, ஒரு காலிமுக போராட்டக் குழுப் பிரதிநிதி. சபாநாயகர் இதற்குத் தலைமை வகிக்க, ஜனாதிபதியும், பிரதமரும் தத்தம் பதவிகளின் காரணமாக இதில் உறுப்பினராகிறார்கள். ஒரு நாளைக்கோ அல்லது இரண்டு நாட்களுக்கு ஒரு முறையோ இந்த சபை, குறைந்தது இரண்டு மணிநேரம் கூடும். அதி முக்கியமான முடிவுகள் அமைதியாக எடுக்கப்படும். இப்படி நீள்கிறது அந்தக் கனவு. கனவு என்றாலே அதில் சில நகைச்சுவையும் இருக்கத்தானே செய்யும்? என் கனவும் அதுபோலத்தான். சபை உறுப்பினர்கள் அனைவரும், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சுயநலமின்றி உழைப்பதாகத் தங்களுக்குள்ளும் தங்கள் குடும்பங்களுக்கும் கடவுளர்களுக்கும், உறுதியளிக்கின்றனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# ராஜபக்சாக்கள் மீண்டெழுவது சாத்தியமா?



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

மக்கள் கிளர்ச்சியையடுத்து இலங்கையை விட்டு வெளியேறி ஜனாதிபதி பதவியை துறந்த கோட்டாபய ராஜபக்ச 50 நாட்களுக்கு பிறகு (செப்.2) நாடு திரும்பி கொழும்பில் பொலிசாரினதும் இராணுவ கமாண்டோக்களினதும் கடுமையான பாதுகாப்புடன் கூடிய அரசாங்க பங்களாவில் வசித்துவருகிறார். அவரது குடும்பத்தவர்களும் அரசியல்வாதிகளும் நெருக்கமான ஆதரவாளர்களும் அவரை சந்தித்து வருகிறார்கள்.

முதலில் மாலைதீவுக்கும் பிறகு சிங்கப்பூருக்கும் தாய்லாந்துக்கும் சென்ற கோட்டாபயவுக்கு அந்த நாடுகள் அசௌகரியத்துடனான விருந்தோம்பலை செய்ததால் சொந்த நாட்டுக்கு திரும்புவதே சிறந்தது என்று அவர் தீர்மானித்தார் போலும். உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டு மக்களை பயமின்ற வாழவைத்ததாக எப்போதும் பெருமையுடன் உரிமைகோரும் அவர் இறுதியில் தனக்கு பாதுகாப்பில்லை என்று அஞ்சி நாட்டில் இருந்து வெளியேறவேண்டியிருந்தது ஒரு விசித்திரம். கிளர்ச்சி செய்த மக்கள் அவரை பதவியில் இருந்து விலகி வீட்டுக்கு போ என்று கேட்டார்களே தவிர, நாட்டை விட்டு வெளியேறும்படி கேட்கவில்லை.

கோட்டாபயவுக்கு முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஓய்வுகாலத்தில் வழங்கப்படுகின்ற சிறப்பு வசதிகளை அரசாங்கம் செய்துகொடுப்பது குறித்து அவர் நாடு திரும்பப்போகிறார் என்ற செய்தி வெளியானவுடன் சர்ச்சைகள் கிளப்பப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது.

முதலில் சர்ச்சையைக் கிளப்பியவர் ஒரு காலத்தில் ராஜபக்சாக்களுக்கு நெருக்கமானவராக இருந்த முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா. அரசாங்க ஊழியர் ஒருவர் ஓய்வுபெற வேண்டிய வயதுக்கு முன்னதாக சேவையில் இருந்து விலகினால் பல வசதிகளை இழப்பது போன்றே கோட்டாபயவின் விவகாரத்தையும் நோக்கவேண்டும். ஏனென்றால் அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து இடைநடுவில் விலகினார் என்பது சில்வாவின் வாதம்.

கோட்டாபயவைப் போன்று எந்தவொரு முன்னாள் ஜனாதிபதியும் பதவிக்காலத்தின் இடைநடுவில் பதவியைத் துறந்ததில்லை. அதேவேளை, முன்னாள் ஜனாதிபதிகளில் எவரையும் பதவியில் இருந்து விலகக் கோரி நாட்டுமக்கள் கிளர்ச்சி செய்ததுமில்லை. அவரே இடைக்காலத்தில் பதவியைத் துறக்க நிர்ப்பந்திக்கப்பட்ட இலங்கையின் முதல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி. அந்த காரணங்கள் எல்லாம் அவருக்கு அரசாங்க செலவில் சிறப்பு வசதிகள் செய்துகொடுக்கப்படுவதற்கு தடையாக இருக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படுகின்ற சகல வசதிகளையும் அவருக்கும் செய்துகொடுக்க அரசாங்கம் சட்டரீதியாக கட்டுப்பட்டிருக்கிறது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக அறிவித்தார்.

சிறப்பு வசதிகளை கோட்டாபயவுக்கு அரசாங்கம் செய்துகொடுத்திருப்பது சட்டரீதியானது,ஆனால் தார்மீக ரீதியில் கேள்விக்குரியது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகிறார்.

"ஜனாதிபதி பதவியில் இருந்து கோட்டாபய உதந்த முறையில் ஓய்வுபெறவில்லை. இரு வருடங்களும் 7 மாதங்களும் பதவியில் இருந்த பிறகு மக்கள் கிளர்ச்சியை அடுத்து ஜூலை 13 அவர் நாட்டை விட்டு தப்பியோடினார். பதவிக்காலத்தை முழுமையாக பூர்த்தி செய்யாமல் அரசாங்கத்திடமிருந்து சகல சிறப்பு வசதிகளையும் பெறுவது சரியானதுதானா என்பதை அவர் மனச்சாட்சிப்படி தன்னைத்தானே கேட்கவேண்டும். பதவிக்காலத்தை முழுமையாக பூர்த்தி செய்யத்தவறும் ஜனாதிபதிகள் ஓய்வூதியத்துக்கும் அரசாங்கத்தின் சிறப்பு வசதிகளுக்கும் உரித்துடையவர்களா இல்லையா என்பதை ஜனாதிபதிகள் உரித்துக்கள் சட்டம் தெளிவாக வரையறுக்கவில்லை " என்று கடந்தவாரம் செய்தியாளர்கள் மகாநாட்டில் கிரியெல்ல கூறினார்.



**மற்றைய கட்சிகளுடன் சேர்ந்து ஜனாதிபதி அரசாங்கம் ஒன்றை அமைத்து மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் கண்டால் வரலாறு ராஜபக்சாக்களுக்கு உரிய இடத்தைக் காட்டும்.**

முன்னாள் ஜனாதிபதிகளில் தற்போது ஓய்வூதியத்தையும் அரசாங்க வாசஸ்தலம் மற்றும் பாதுகாப்பு உட்பட சிறப்பு வசதிகளை அனுபவிப்பவர்கள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகிய மூவருமே. முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் விதவை மனைவி ஹேமாவும் அத்தகைய வசதிகளை அனுபவித்துவருகிறார். தனக்கு முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் கிடைக்கவேண்டிய வசதிகள் பலவற்றை ராஜபக்சாக்கள் குறைத்தார்கள் என்று திருமதி குமாரதுங்க சில தினங்களுக்கு முன்னரும் கூட குற்றஞ்சாட்டியிருந்தார். அது வேறு விடயம்.

மகிந்தவும் சிறிசேனவும் ஜனாதிபதி பதவிகளில் இருந்து ஓய்வுபெற்றாலும் அரசியலில் இருந்து ஓய்வு பெறவில்லை. அவர்கள் தேர்தல்களில் போட்டியிட்டு மீண்டும் பாராளுமன்றத்துக்கு வந்திருக்கிறார்கள். முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய அரசாங்க வசதிகளை அவர்கள் அனுபவிப்பதுடன் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சிறப்புரிமைகளையும் வசதிகளையும் அனுபவித்துவருகிறார்கள். உண்மையில் ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு மீண்டும் அரசியலில் ஈடுபடாமல் ஒதுங்கியிருப்பவர்களுக்கே அரசாங்க வசதிகளை வழங்குவது பொருத்தமானது. மீண்டும் அவர்கள் அரசியலில் ஈடுபட்டு சிறப்புரிமைகளுடன் கூடிய பதவிகளை வகிப்பார்களானால் அந்த வசதிகளை வழங்காதிருப்பதற்கு சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவது அவசியமாகும்.

அண்மையில் அநுராதபுரத்துக்கு சென்ற ஜனாதிபதி விக்கிரமசிங்க மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் அரசாங்க அலுவலர்களைப் பார்த்து பொறுப்புடன் கடமையைச் செய்யுங்கள், அல்லது வீட்டுக்கு சென்றுவிடுங்கள், சும்மா சம்பளம் தரமுடியாது என்று கண்டிப்பான தொனியில் கூறினார். அவரால் முன்னாள் ஜனாதிபதிகளில் இன்னமும் அரசியலில் தொடருகின்றவர்களைப் பார்த்து, "மீண்டும் அரசியலுக்கு வராமல் இருந்தால் மாத்திரமே முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய வசதிகளை அரசாங்கத்தினால் வழங்க முடியும்" என்று கூறமுடியுமா? அவ்வாறு கேட்பதற்கு சட்டம் இடந்தரவில்லை என்றால் ஜனாதிபதி உரித்துக்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரவேண்டும் என்றாவது அவர் பேசுவாரா?

இங்கு தான் சிங்கள சினிமா நடிகரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்க "அவர்கள் எல்லோரும் கூட்டாளிகள் தம்பி " என்ற பிரபலமான வார்த்தையை நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. இது இவ்வாறிருக்க, கோட்டாபய மீண்டும் அரசியலுக்கு வருவாரா இல்லையா என்பது பேசுபொருளாக இருக்கிறது.

அவர் கடந்த மாதம் தாய்லாந்தில் தங்கியிருந்த வேளையில் கூட, நாடு திரும்பும் பட்சத்தில் அவரை சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் மூலமாக பாராளுமன்றத்துக்கு கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்படுவதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அவர் பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கு வசதியாக தனது பதவியை துறக்கத் தயாராயிருப்பதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சீதா அரம்பேபொல கூறினார். கோட்டாபய நாடுதிரும்பிய பின்னரும் இந்த உறுப்பினர் முன்னாள் ஜனாதிபதி மீண்டும் அரசியலுக்கு வரவிரும்பினால் அவருக்காக தனது பதவியைத் துறப்பதற்கு முன்வருவதாக கடந்தவாரமும் கூறியிருந்தார்.

ஆனால், கோட்டாபய வெளிநாட்டில் இருந்த வேளையிலும் சரி, நாடு திரும்பிய பின்னராயினும் சரி இதுவரையில் அரசியலில் மீண்டும் ஈடுபடுவதில் நாட்டம் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி எதும் கூறவில்லை. அவர் ஒரு மர்மமான மௌனத்தை கடைப்பிடித்து வருகிறார். அதேவேளை, அமெரிக்க குடியுரிமையை மீண்டும் பெறுவதற்கான விண்ணப்பத்தை செய்யும் பொறுப்புக்களை அங்குள்ள சட்டநிறுவனம் ஒன்றிடம் அவர் ஒப்படைத்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின.

ஆனால், அவரை பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்து பிரதமராக்க வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக் குழுவில் செல்வாக்குமிக்க ஒரு பிரிவினர் முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக செய்திகள் வருகின்றன.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக் குழுவில் இருந்து பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும தலைமையில் வெளியேறி தற்போது சபையில் எதிரணி பக்கத்தில் இருக்கும் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் சன்ன ஜெயசு மன கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தற்போ தைய பிரதமரை அகற்றி விட்டு புதிய பிரதமர் ஒருவரை நியமிப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அதற்கு தங்கள் தரப்பின் ஒத்துழைப்பு கோரப்பட்ட போது தாங்கள் மறுத்துவிட்டதாகவும் கூறியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.



அதேவேளை, நான்கு மாத கால மக்கள் கிளர்ச்சி யின் போது பதவிகளில் இருந்து விலகி ஒதுங்கியிருந்த ராஜபக்சாக்கள் தங்களை மீள அணி திரட்டிக் கொண்டு மீண்டும் தீவிர அரசியலுக்கு வருவதற்கு தயாராகிறார்கள்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# ராஜபக்சாக்கள் ...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களின் குடும்ப அரசியலுக் கென்றே உருவாக்கப்பட்ட பொதுஜன பெரமுனவை மறுசீரமைப்பது மற்றும் கட்சியின் மகாநாட்டை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து அவர்கள் பேசுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ராஜபக்சாக்கள் முக்கிய பதவிகளில் இல்லாவிட்டாலும் தங்களது கட்சியின் பாராளுமன்றப் பெரும்பான்மையை பயன்படுத்தி ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் போக்கை தீர்மானிப்பவர்களாக விளங்குகிறார்கள் என்பது எதிரணியின் பரவலான குற்றச்சாட்டாகும். மகிந்த ராஜபக்ச தனது 77 வது பிறந்த தினத்துக்கு (நவம்பர் 18) மீண்டும் தீவிரமாக அரசியலில் இறங்கப் போகிறார் என்று செய்திகள் வெளியாகின்றன. கடந்த மாதம் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் அரசியலில் இருந்து தொடரப்போவதாகவும் பொருத்தமான தருணம் வரும்போதே ஓய்வு பெறப் போவதாகவும் கூறியிருந்தார்.

ராஜபக்சாக்கள் தோற்கடிக்கப்படவும் இல்லை, விரட்டியடிக்கப்படவும் இல்லை. சுயமாகவே அவர்கள் பதவிகளில் இருந்து விலகினார்கள். அவர்களைப் பற்றி கீழ்த்தரமாக விமர்சிக்கவேண்டாம். உள்நாட்டு, வெளிநாட்டு சதிமுயற்சிகளின் மூலம் ராஜபக்சாக்களின் அரசியலுக்கு முடிவுகட்ட முடியாது. அவர்கள் மீண்டெழுவார்கள். அவர்களின் திறமையும் அருமையும் வாக்களித்த மக்களுக்கு நன்றாக தெரியும். பொதுஜன பெரமுனவின் கைகள் மீண்டும் ஓங்கும். தேர்தல் நடந்தால் அதில் அவர்கள் வெற்றிபெறுவார்கள். எதிரணியினர் மீண்டும் தோற்கடிக்கப்படுவார்கள் என்று மகிந்த கடந்த வாரம் கூறியிருந்தார்.

அதேவேளை, கோட்டாபய நாட்டை விட்டு தப்பியோடவும் இல்லை, விரட்டியடிக்கப்படவும் இல்லை. சில தரப்புகளின் சதி முயற்சியின் விளைவாக நாட்டில் தோன்றிய கொந்தளிப்பை தணிப்பதற்காகவே அவர் நாட்டில் இருந்து வெளியேறினார். அமைதி திரும்பியதை அடுத்து அவர் நாடு திரும்பியிருக்கிறார். அரசியலில் ஈடுபடவிரும்பினால் பொதுஜன பெரமுன ஊடாக அதைச் செய்யலாம். அது குறித்து தீர்மானிப்பது அவரைப்பொறுத்தது என்று முன்னாள் நிதியமைச்சரும் அந்த கட்சியின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ச கூறியிருக்கிறார்.

ராஜபக்சாக்களை பொறுத்தவரை தங்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையையும் உள்நாட்டு, வெளிநாட்டு சதி என்று கூறுவது அவர்களது சுபாவம். தங்களது தவறான ஆட்சிமுறையின் விளைவாக பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி தோன்றியது என்பதை அவர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை. நாட்டு மக்கள் ராஜபக்சாக்களுக்கு கடமைப்பட்டவர்கள் என்ற ஒரு விசித்திரமான எண்ணத்தை அவர்கள் வளர்த்திருக்கிறார்கள். விடுதலை புலிகளை தோற்கடித்து உள்நாட்டுப்போரை முடிவுக்கு கொண்டுவந்ததற்காக சிங்கள மக்கள் என்றென்றைக்கும் தங்களை ஆதரிப்பார்கள் என்ற ஒரு தவறான எண்ணம் அவர்களிடம் வேரூன்றியிருந்தது.

அதனால், அதே சிங்கள மக்கள் தவறான தங்களது ஆட்சிமுறைக்கு எதிராக கொந்தளித்ததை ஜீரணிக்க முடியாதவர்களாக ராஜபக்சாக்கள் இருக்கிறார்கள். அதனால் இலங்கையின் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்கள் செய்த கிளர்ச்சியை தற்செயலானது என்ற நினைப்பில் தங்களது மீழெழுச்சி குறித்து அவர்கள் பேசுகிறார்கள்.

2015 ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பிறகு நான்கு வருடங்களில் மீண்டும் முன்னரைவிடவும் கூடுதல் மக்கள் ஆதரவுடன் ஆட்சியதிகாரத்துக்கு ராஜபக்சாக்கள் வரக்கூடியதாக இருந்த நிலைவரத்துக்கும் நாட்டை வங்கு ரோத்து நிலைக்கு கொண்டுவந்த ராஜபக்சாக்கள் சகலரும் கூண்டோடு அரசியலில் இருந்து வெளியேறவேண்டும் என்று கோரிய மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான தற்போதைய நிலைவரமும் வேறு பட்டவை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். முன்னென்றும் இல்லாத மக்கள் கிளர்ச்சிக்கு பின்ரான இலங்கை அரசியலில் முன்னரைப் போன்று எதுவும் இருக்கமுடியாது. இருக்கவும் கூடாது.




இலங்கை அரசியல் கடந்த காலத்திலும் சில உயர்வர்க்க குடும்பங்களின் ஆதிக்கத்தில் இருந்திருக்கிறது. ஆனால், மகிந்த ராஜபக்ச அதிகாரத்துக்கு வந்த பிறகு அவரது குடும்பம் அரசியலிலும் ஆட்சிமுறையிலும் அருவருக்கத்தக்க முறையில் மட்டுமீறிய ஆதிக்கத்தை செலுத்தியதைப் போன்று அந்த குடும்பங்கள் செய்ததில்லை. ராஜபக்சாக்களுக்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்தது போன்று அந்த குடும்பங்களுக்கு எதிராக ஒருபோதும் செய்ததில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அரச நிருவாகத்தில் எதேச்சாதிகாரம் படிப்படியாக அதிகரித்து வந்திருக்கிறது. ஆனால், ராஜபக்சாக்கள் ஜனாதிபதியாக வந்த பிறகுதான் எதேச்சாதி காரம் உச்ச அளவுக்குப் போனது. மட்டு மீறிய அதிகாரங்களை தங்களிடம் குவித்து வைத்திருப்பது ஏதோ தங்கள் பிறப்புரிமை என்ற நினைப்பில் அவர்கள் நடந்து கொண்டார்கள். ஆட்சிமுறை தொடர்பான தீர்மானங்களை சகோதரர்கள் மாத்திரமே கூடி மேற்கொண்டார்கள்.

ஆட்சிமுறையின் கெடுதியான போக் குகள் சகலவற்றையும் -- உயர்மட்டத்தில் ஊழல் மோசடி,பொதுச்சொத்துக்கள் சூறையாடல், அதிகார துஷ்பிரயோகம், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, பொறுப்புக்கூறலை அலட்சியம் செய் தல், பேரினவாத அரசியலை தீவிரமாக முன்னெடுத்து சிறுபான்மை இனங்களின் இருப்பை ஆபத்துக்குள்ளாக்குவது -- உருவகிப்பவர்களாக ராஜபக்சாக்கள் விளங்குகிறார்கள்.

இலங்கையின் தற்போதைய படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு மனித உரிமைமீறல்களினதும் பொருளாதாரக் குற்றங்களினதும் நீண்ட வரலாறு முக்கிய காரணம் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பாச்லீ கடந்தவாரம் வெளியிட்ட தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறார். நாட்டின் பொருளாதார நெருக்கடியையும் உரிமை மீறல்களையும் தொடர்புபடுத்தி ஐ.நா.மட்டத்தில் அறிக்கை வந்திருப்பது இதுவே முதற்தடவையாகும். இது விடயத்தில் முன்னைய ஆட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது என்ற போதிலும், இந்த நூற்றாண்டின் இதுவரையான இரு தசாப்தங்களில் கூடுதல் காலப்பகுதியில் அதிகாரத்தில் இருந்த ராஜபக்சாக்களுக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது.

2005 தொடக்கம் இதுவரையான 17 வருடங்களில் இடையில் ஒரு நான்கு வருடங்களை தவிர எஞ்சிய காலப்பகுதி முழுவதும் ராஜபக்சாக்களே அதிகாரத்தில் இருந்திருக்கிறார்கள். 2005 -- 2015, 2019 -- 21 கட்டங்களில் அதாவது 11வருடங்கள் மகிந்த ராஜபக்சவே நிதியமைச்சராக பதவி வகித்தார். பசில் ராஜபக்ச பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பதவி வகித்தது மாத்திரமல்ல, கோட்டாபய ஆட்சியில் இறுதியாக நிதியமைச்சராகவும் இருந்தார். அதனால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததற்கு காரணமான தவறான பொருளாதார முகாமைத்துவத்துக்கு ராஜபக்சாக்களே பெரும் பொறுப்பு.

இவ்வாறாக சகல முனைகளிலும் நாட்டை படுமோசமான நிலைக்கு கொண்டுவந்துவிட்டு தங்களுக்கு இருக்கின்ற பொறுப்புக்கூறல் கடப்பாட்டை அலட்சியம் செய்துகொண்டு மீண்டும் அரசியலில் தீவிரமாக இறங்கி அவர்கள் எதைச் சாதிக்கப்போகிறார்கள்? இந்த இலட்சணத்தில் இடைநடுவில் பதவியை விட்டு ஓடிய கோட்டாபயவையும் மீண்டும் அரசியலுக்கு கொண்டு



வருவது குறித்து பேசுகிறார்கள்.

தனது மூத்த புதல்வன் நாமலின் எதிர்கால அரசியல் வாய்ப்புக்களை தனது காலத்தில் உறுதிசெய்வதில் மகிந்த அக்கறை கொண்டிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நாட்டு மக்களின் பிரச்சினை அதுவல்லவே.

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி திருமதி குமாரதுங்கு இந்தியாவின் முக்கிய ஆங்கில தினசரிகளில் ஒன்றா "த இந்து" வுக்கு வழங்கிய மிக நீண்டதொரு நேர்காணலின்போது அதன் கொழும்பு செய்தியாளர் மீரா சிறினிவாசன், "ராஜபக்சாக்களின் ஆட்டம் முடிந்து விட்டதா அல்லது எதிரணிக் கட்சிகள் பலவீனமாக இருப்பதால் அவர்கள் மீண்டெழுவதற்கான சாத்தியப்பாடுகள் இருக்கின்றனவா?" என்று அவரிடம் கேட்டார்.

அதற்கு பதிலளித்த அவர் சகல சாத்தியப்பாடுகளும் இருக்கின்றன. ஆனால், ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் பொதுஜன பெரமுனவும் சேர்ந்த ஒரு அரசாங்கம் அல்ல, மற்றைய கட்சிகளு டன் சேர்ந்து ஜனாதிபதி அரசாங்கம் ஒன்றை அமைத்து மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் கண்டால் வரலாறு ராஜபக்சாக்களுக்கு உரிய இடத்தைக் காட்டும் என்று குறிப்பிட்டார்.

உண்மையில் இன்று அரசியல் ரீதியில் தனிமைப்படுத்தப் பட வேண்டியவர்கள் நாட்டை அதல பாதாளத்திற்குள் தள்ளிவிட்ட ராஜபக்சாக்களே. அதைச் செய்வதற்கு எதிரணி கட்சிகள் ஒரு தந்திரோபாய நடவடிக்கையாகவேனும் அரசாங்கம் ஒன்றை அமைக்க முன்வரக்கூடிய சாத்தியம் இல்லை. சகல எதிரணி கட்சிகளுமே தனித்தனியாக கூட்டணிகளை அமைப் பதில் நாட்டம் காட்டுகின்றன. அடுத்த தேர்தல்களுக்கு அவை தயாராகின்றனவே தவிர உடனடியாக கையாள வேண்டிய பிரச்சினைகளைப் பற்றி கவலைப்படுவதாக இல்லை.

இதை ராஜபக்சாக்கள் தங்களுக்கு அனுகூலமாக பயன்படுத்துகிறார்கள். சர்வகட்சி அரசாங்கம் அமைக்கும் முயற்சிகள் பயனளிக்காமல் போயிருக்கும் நிலையில் பொதுஜன பெரமுனவின் ஆதிக்கத்திலான அரசாங்கம் மீண்டும் வலுப்பெறுவதை காணக்கூடியதாக இருக்கிறது. கடந்தவாரம் நியமிக்கப்பட்ட 37 இராஜாங்க அமைச்சர்களில் பெரும்பாலானவர்கள் பொதுஜன பெரமுன உறுப்பினர்களே. ஒரு ராஜபக்சவும் அதில் அடங்குகிறார். இவர்கள் எல்லோரும் கோட்டாபய அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சர்களாக பதவி வகித்தவர்களே. பொதுஜன பெரமுனவினால் தெரிவுசெய்யப்பட்ட ஐக்கிய தேசிய கட்சி ஜனாதிபதியின் கீழ் பழைய ராஜபக்ச ஆட்சியே தொடருகிறது.

அமைச்சரவையும் விரைவில் விரிவாக்கப்படவிருப்பதாக அரசாங்க வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அந்த விரிவாக்கத்தின்போது ராஜபக்சாக்கள் மீண்டும் அமைச்சர்களாகக் கூடிய சாத்தியம் இருக்கிறது. தங்களது மீட்சிக்கான பாதையை இதன் மூலமாக உறுதிசெய்வது அவர்களுக்கு சுலபம்.

ஆனால், நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதே முக்கியமானது. ராஜபக்சாக்கள் நினைப்பது போன்று புதிய தேர்தல் ஒன்றில் மக்கள் அவர்களுக்கு வாக்களித்து மீண்டும் செல்வாக்கான ஒரு நிலைக்கு அவர்களை கொண்டுவரப்போவதில்லை. ராஜபக் சாக்களின் எதிர்பார்ப்புகள் இலங்கை மக்களின் விவேகத்தை நிந்தனை செய்வதாக அமைந்திருக்கின்றன. மக்கள் கிளர்ச்சி அடங்கிப்போயிருந்தாலும், அதன் மூலமாக நாட்டு மக்கள் மத்தியில் தவறான ஆட்சிமுறைக்கும் குடும்ப ஆதிக்க அரசியலுக்கும் எதிராக மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் பிரக்ஞை குறித்து ராஜபக்சாக்கள் தப்புக்கணக்கு போடுகிறார்கள்.

இறுதியாக, ராஜபக்சாக்கள் நாட்டுக்கு செய்த நாசத்தை மணிச்சுருக்கமாக சொல்வதற்கு கடந்த வாரம் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் பிரபல அரசியல் ஆய்வாளரும் சட்டத்தர ணியுமான கிஷாலி பின்ரோ ஜெயவர்தன தனது பத்தியில் பயன்படுத்திய முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சிலின் கூற்றொன்றை தவிர பொருத்தமானது வேறு எதுவும் இருக்க முடியாது.

இரண்டாவது உலகப்போரின்போது ஒரு கட்டத்தில் ஜேர்மன் விமானப் படைக்கு பிரிட்டிஷ் விமானப்படை வீரர்கள் ஏற்படுத்திய இழப்பை பாராட்டியபோது சேர்ச்சில் பின்வருமாறு கூறினாராம்.

"பிரிட்டனின் வரலாற்றில் முன்னர் ஒருபோதுமே சொற்ப எண்ணிக்கையான வீரர்கள் குறுகிய ஒரு காலப்பகுதியில் பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு மாபெரும் அழிவை இது போன்று ஏற்படுத்தியதில்லை ."

# பல தலைமுறைகளாக அழியாத நினைவுகளுடன் இருந்த பல நினைவுச் சின்னங்கள் அழிக்கப்பட்டன!

## ரணிலின் வீடு தாக்கப்பட்டபோது அருகில் இருந்த அவரது சகோதரர் வீடும் தாக்குதலுக்குள்ளானது!!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீக்கிரையாக்கப்பட்ட விடயம் வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள் அப்போது பிரதமராக இருந்த ரணிலின் வீட்டை தாக்கி சூறையாடியதுடன், அவரது நூல்நிலையத்திற்கும் தீ வைத்திருந்தனர். அது அவரது அரசியலுக்கு எதிரானவர்களால் நடாத்தப்பட்ட ஒன்று. ஆனால் விக்கிரமசிங்க குடும்பத்தின் பூர்வீகக் காணியில் ரணிலின் வீடு மாத்திரமல்ல அவரது சகோதரர்களின் வீடுகளும் இருந்தன. அவர்கள் எவருமே அரசியலில் இல்லை. ஆனாலும் அவர்களில் முக்கியமான ஒரு சகோரதரின் வீடும் தாக்குதலுக்குள்ளானது.




தனது வீடு தாக்குதலுக்குள்ளான வருத்தத்தில் இன்றுவரை இருந்துகொண்டிருக்கும் ஜனாதிபதி ரணிலின் சகோதரர் சன்ன விக்கிரமசிங்க உடனான நேர்காணலின் போது அவர் பல்வேறு விடயங்களை மனந்திறந்து உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்தியிருந்தார்.

எஸ்மண்ட் விக்ரமசிங்க மற்றும் நளினி விஜயவர்தன ஆகியோர் தங்கள் பிள்ளைகள் சகிதம் வாழ்ந்த அரசியல் மற்றும் கலாச்சார பாரம்பரியம் மிக்க குறித்த வீடு சன்ன விக்கிரமசிங்கவிற்கே சொந்தமாகின்றது. அண்மையில், அரசியல் குண்டர்கள் குழுவொன்று ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டை எரித்த போது, இந்த வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

அவருடைய தாய் மற்றும் தந்தையின் நினைவுச் சின்னங்கள் மற்றும் மதிப்பு மிக்க ஆவணங்களும் இதன் போது அழிக்கப்பட்டுள்ளன. அவர்களின் தங்க ஆபரணங்கள் கடவுச்சீட்டுக்கள் என்பனவும் கூட அழிக்கப்பட்டுள்ளன. வீட்டின் மேல் தளத்திற்கு செல்ல இருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்த வளர்ப்பு நாயின் துணிச்சலால் படிக்கட்டில் ஏற அஞ்சி பின்வாங்கினர். பல தலைமுறைகளாக அழியாத நினைவுகளுடன் இந்நாட்டின் அரசியலில் தனித்துத்தை பறைசாற்றிய கதைத் தொகுப்பின் மையமாக விளங்கிய வீட்டின் இன்றைய நிலை இதுவாகும்.

ஹெலினா விஜயவர்தனவின் மகளான நளினிக்கு கொள்ளுப்பிட்டியில் விஜயவர்தன குடும்பத்திற்கு சொந்தமான இரண்டு ஏக்கர் காணியில் 80 பேர்ச்சஸ் காணி வழங்கப்பட்டது.

அதுவே இந்த வீட்டினுடைய ஆரம்பமாக அமைந்தது. குறித்த காணியில் நளினியும் அவரடைய கணவரான எஸ்மண்டும், தங்கள் குழந்தைகள் சகிதம் வாழ்வதற்காக அதன் ஒரு பகுதியில் வீடொன்றை கட்டினார்கள். அந்த வீடு 5 அறைகளைக் கொண்ட இரண்டு மாடி வீடாக நிர்மாணிக்கப்பட்டது. மேலும் எஸ்மண்ட் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டு விருந்தினர்களுக்காக மற்றுமொரு அறை நிர்மாணிக்கப்பட்டது. பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரான எர்டினோ பிரபு அங்கு வந்து தங்கி இருந்து விட்டு சென்றமையை தொடர்ந்து அந்த அறை குறித்த பெயரால் அழைக்கப்பட்டது. அப்போது அவர் பிரிட்டனில் பிரபலமான பிரமுகராக இருந்தார். சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசியல்வாதிகள் மற்றும் பத்திரிகைத் துறையுடன் தொடர்புடைய சர்வதேச நாடுகளை சேர்ந்த பலர் அந்த வீட்டிற்கு வந்து சென்றுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் யு தாந்த்இங்கு வந்து விருந்து ஒன்றில் கலந்து கொண்டுள்ளார். இந்திய உயர்ஸ்தானிகர் ஜே.என். தீட்சித் மற்றும் இந்தியவெளியுறவுச் செயலர் ரொமேஷ் பண்டாரி உள்ளிட்டோர் இந்த வீட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

ஜே.சி. ஜேன் என்ற டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழின் தலைவரும் எஸ்மண்ட் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடுவதற்காக இங்கு வருகை தந்துள்ளார். இவர் பத்திரிகைத்தறையில் புகர்பெற்ற சர்வதேச இதழியலாளராவார் .

மார்ச் 1965 இல், டட்லியின் ஏழு கூட்டணி அரசாங்கம் நடைமுறைக்கு வந்து, இந்த வீட்டில் நடந்த விவாதங்களின் விளைவாக முடிவுக்கு வந்தது.

கூட்டணி ஆட்சி அமைக்க எம்.பி.க்களாக இருந்த எம்.பி. ராஜரத்தினம், டட்லி சேனாநாயக்க, பிலிப் குணவர்தன போன்றோரும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் கூட இங்கு வருகை தந்துள்ளார்.

இந்த விவாதம் இடம் பெற்ற மேசை வீட்டில் மிகவும் பாாதுகாப்பாக வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களினால் தாக்கப்பட்டுள்ளமையினால் குறித்த வரலாற்றுச் சின்னம் அழிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கங்களை அமைப்பதற்கும் கவிழ்ப்பதற்கும் புகலிடமாக இருந்த இந்த நிலம் அரசியல் நினைவுகளின் கொத்தும் நினைவுச்சின்னமாகவும் திகழ்ந்தது. எஸ்மண்ட் விக்ரமசிங்கே அப்போது சேர் ஜோன் கொத்தலாவல பிரதமரின் மூத்த ஆலோசகராகவும் இருந்துள்ளார். சேர் ஜான் ஒரு முறை ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டிற்கு எஸ்மண்டுடன் சென்றும் உள்ளார்.

"எனது தந்தை அறையில் உறங்கிக் கொண்டிருந்த போதே குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அது தந்தையின் அறையை நோக்கி வீசப்பட்டது, ஆனால் அது அறைக்குள் நுழையவில்லை. அது கீழே விழுந்து வெடித்துள்ளது. அதன் பிறகு எங்கள் வீட்டை மீண்டும் சேதப்படுத்தியது போராட்டக்காரர்கள்தான்."

அவரடைய தந்தையின் அரசியல் செயல்பாடுகளில் மிகுந்த விருப்பம் இருந்தாலும், தாயின் உள்ளத்தில் உள்ள கலாச்சார பந்தங்களின் தொகுப்பைப் பற்றி இப்படி ஒரு கதையை சன்ன விக்ரமசிங்க வெளிப்படுத்தினார்.

"அந்த நாட்களில் எங்கள் வீடு அரசியல்வாதிகள் மற்றும் கலைஞர்களால் நிறைந்திருந்திருக்கும். பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர, தயானந்த குணவர்தன, பன்னி பாரத, ஹென்றி ஜயசேன, குணசேன கலப்பிட்டி, பசில் மிஹிரபன்ன, டிரிலிசியா குணவர்தன, மார்க் அன்டனி ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வருவார்கள்.

அருந்ததி ராய் எமது தாயின் அழைப்பின் பேரில் எங்கள் வீட்டிற்கு வந்த போது அவர் கையெழுத்திட்டு, புக்கர் விருது பெற்ற இந்தியாவின் அதிகம் விற்பனையான "The god of small things" என்னும் புத்தகமும் அந்த வீட்டில் இருந்தது.

இலங்கையில் இசைத்துறை சரித்திரத்தில் ஜெயமங்கலப் பாடல்களை இணைத்த முதல் நபராக நளனி விக்கிரமசிங்க திகழ்கின்றார். மனமே, சிங்கபாகு, மூடு புட்டு, நரிபெனா போன்ற மேடை நாடகப் பாடல்கள் கூட இவரது இசை ஸ்டுடியோவில் பதிவு செய்யப்பட்டன.

"அரசியல் மற்றும் கலைத் துறைகளைச் சேர்ந்த விருந்தினர்கள் அடிக்கடி வீட்டிற்கு வருவதால் தொழில்நுட்பக் கல்லூரி உணவகத்திலிருந்து உணவு கொண்டுவரப்பட்டது. அந்த நேரத்தில், சுமார் 70 தொடக்கம் 80 குளிர்பானப் போத்தல்கள் கொண்டு வரப்படும். எமக்கு அந்த குளிர்பானங்களை அருந்த மிகவும் பிடிக்கும்.

எங்கள் தோட்டத்தில் பல தென்னை மரங்கள் இருந்தன. அதனால், மிளகாய், உப்பு தூள் சேர்த்து செய்த உணவுப்பொருட்கள் வீட்டில் எப்போதும் இருக்கும். கோட்டாங்காய் மரம் இருந்ததால் அதனை உண்பதற்கு எமக்கு மிகவும் பிடிக்கும்.

டட்லி சேனாநாயக்கவுக்குப் பிறகு எஸ்மன்ட் ஜே.ஆர். ஆட்சியை கொண்டு வர ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தனர். எஸ்மண்ட் விக்கிரமசிங்கவின் பங்களிப்பில் ஜேர்னல் உள்ளிட்ட இரண்டு செய்தித்தாழ்களும் வெளிவந்தமை பிரதான அம்சமாகும்.

நளனி விக்கிரமசிங்கவும் ஜேர்னல் பத்திரிகைக்கு ஆங்கில கவிதைகளை எழுதியுள்ளார். அவற்றில் பெரும்பாலானவை அடிப்படை அரசியல் பொருள்கொண்ட கவிதைகளாக இருந்தன. அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும் பாலான கொள்கை அறிக்கைகள் எஸ்மண்டால் தயாரிக்கப்பட்டவையாகும். கலா நிதி சரத் அமுனுகம யுனெஸ்கோவில் இருந்த காலத்தில் எஸ்மண்டுடன் பல சேவைகளை இணைந்து ஆற்றியுள்ளார்.

அதேபோன்று , பேராசிரியர் ரால்ப் பல்கெர்ன்ஸூம் எஸ்மண்டுடன் உடன் நெருக்கமாகப் பணியாற்றியுள்ளார். காந்தி குடும்பத்துடனான அவரது நெருங்கிய உறவு பின்னர் திம்பு பேச்சுவார்த்தையில் அவருக்கு பெரிதும் உதவியது. இதன் காரணமாக ஜே.ஆர் ஜயவர்தன காலத்தில் திம்பு பேச்சுவார்த்தையில் அரசாங்கப் பிரதிநிதியாக எஸ்மன்ட் விக்கிரமசிங்கவும் பங்குகொண்டார். அங்கு சென்றிருந்த சமயத்திலேயே அவருக்கு முதல் மாரடைப்பு ஏற்பட்டது.

"தந்தையின் பிறந்த தினத்தன்று எங்கள் வீட்டுக்கு வந்த ஜே.ஆர். மேலும் பிரேமதாசவுடனான கலந்துரையாடலின் விளைவாகவே தந்தை பேச்சுவார்த்தைக்காக திம்புவுக்குச் சென்றார். அந்த பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு லலித் அத்துலத் முதலியும் காமினி திசாநாயக்கவும் கூட வருகை தந்திருந்தனர்.

எங்கள் குடும்பத்தில் அனைவருக்கும் சொந்த தொழில்கள் இருந்தன. அந்த வர்த்தக நிலையங்கள் அனைத்தும் சிங்களப் பெயர்களைக் கொண்டிருந்தன. மணமே, சிங்கபாஹூ, போன்ற நாடகப் பாடல்கள் என்பன நளனியின் தாயார் தொடங்கிய இயக்கத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டன. திறந்த பொருளாதாரக்கொள்கையின் வருகையினால் அந்த தொழில் பின்னடைவை சந்தித்தது. வர்ணா என்ற அச்சுத் தொழில் அவருடைய பெயரின் கீழ் இயங்குவதாக கூறினார். இந்த ஒவ்வொரு வணிகத்தின் காலமும் 60 ஆண்டுகளைக் கடந்ததாகும்.

"நாங்கள் அனைவரும் காதல் திருமணம் செய்து கொண்டோம். ஆனால் பொருத்தம் பார்க்கப்பட்டு முறைப்படியே திருமணம் நிறைவேற்றப்பட்டது. நான் உயர் கல்வியை இங்கிலாந்தில் கற்றேன். வீட்டில் இருந்து செலவுக்கு பணம் அனுப்பினார்கள். ஆனால் நண்பர்கள் பணம் சம்பாதிப்பதற்காக தொழில்களில் ஈடுபட்டனர். அதன் காரணமாக அவர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு ஒரு பவுண்டு கிடைத்தது.

அதனால் நானும் ஒரு வேலை செய்து உழைக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆகவே நான் கென்டக்கியில் பகுதி நேர வேலை செய்து பணம் உழைத்து, எனது முதல் காரை வாங்கினேன். பெற்றோரிடமிருந்து பெற்ற உத்வேகத்தால், விக்கிரமசிங்கவின் பிள்ளைகள் மதத்தின் மீது மிகுந்த மதிப்பை கொண்டவர்களாக இருந்தனர்.

கொள்ளுப்பிட்டி வழுகாராமய விகாரையின் நன்கொடையாளர் சபையின் தலைவராகவும் விஜயவர்தன பரம்பரையின் உரிமையிலான சேடவத்தை விகாரையின் நன்கொடையாளர் சபையின் செயலாளராகவும் சன்ன விக்ரமசிங்க பதவி வகித்துள்ளார். உங்கள் மூத்த சகோதரர் நாட்டின் ஜனாதிபதி. உங்களுக்கு பதவி வழங்கப்பட்டால் என்ன செய்வீர்கள்? என நாம் அவரிடம் வினவிய போது அவர் புன்னகையுடன் பதிலளித்தார்.

"அவர் எனக்கு பதவிகளை வழங்குவது மில்லை. அவ்வாறு வழங்கினாலும் நான் அதனை ஏற்கவும் போவதில்லை" என்றார். எதையும் செய்வதற்குத் தேவையான நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும் என்பதே அவருடைய கருத்தாக அமைந்திருந்தது.

இவ்வாறாகவே மீளப்பெற முடியாத ஒரு அரசியல் வரலாற்றை, போராட்டக்காரர்கள் என்னும் பெயரில் புகுந்த குழுவினர் மண்ணோடு மண்ணாகி விட்டுள்ளனர்.

**தமிழில்: விதுஷா**
**(நன்றி -அருண)**

•சகோதரன் எனக்கு பதவியை வழங்கப்போவதும் இல்லை நான் அதனை ஏற்றுக்கொள்ள போவதும் இல்லை.

•எல்லோரும் காதல் திருமணம் செய்து கொண்டாலும், அனைத்து திருமணமும் முறைப்படியே இடம்பெற்றது.

•தந்தையின் மீது குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டாலும் அதனை தொடர்ந்து போராட்டக்காரர்களாலேயே எம்முடைய இந்த வீடு தாக்கப்பட்டுள்ளது.

•இந்த வீட்டைக் கட்ட தேவையான காணி என்னுடைய தாய்க்கு அவரது தாயாருடைய தரப்பால் வழங்கப்பட்டுள்ளது.

# ரணில் அரசின் ஜெனிவா பொறி யாருக்கு வைக்கப்படும் இலக்கு?

பனங்காட்டான்

செப்டம்பர் மாதம் என்பது இலங்கையைப் பொறுத்தளவில் இப்போது ஜெனிவா காலமென்தாகி விட்டது. இலங்கை மீதான தீர்மானங்கள் வருவதும் விவாதங்கள் இடம்பெறுவதும் காலநீடிப்பு பெறுவதும் தொடர்கதையாகி விட்டது.

முள்ளிவாய்க்கால் மனித உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்ட இலங்கை அரசின் மீதான 46ம் இலக்க தீர்மானத்துக்கு வழங்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்து விட்டது. இந்த மாதம் 12ம் திகதி முதல் அக்டோபர் 7ம் திகதி வரையான அமர்வில் 51வது தீர்மானத்தை நிறைவேற்ற பிரித்தானிய தலைமையிலான ஏழு அனுசரணை நாடுகளும் முன்வந்துள்ளன.

இதற்கு முன்னோடியாக, மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் அறிக்கை இலங்கையின் சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகளை விலாவாரியாக விபரித்து வெளிவந்துள்ளது. இந்த விடயத்துக்குள் செல்வதற்கு முன்னர் இலங்கையைப் பொறுத்தளவில் செப்டம்பர் மாதத்தின் முக்கியத்துவத்தைப் பார்க்க வேண்டும்.

முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன செப்டம்பர் 17ல் பிறந்தவர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் பிரதமருமான எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க இதே மாதத்தில் 26ம் திகதி அகால மரணத்தைத் தழுவியவர். 1946ம் ஆண்டு செப்டம்பர் ஆறாம் திகதியில் ஐக்கிய தேசிய கட்சி உருவாக்கப்பட்டது.

இதன் 76வது வருட கொண்டாட்டம் பெருநிகழ்வாக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சில நாட்களுக்கு முன்னர் கொண்டாடப்பட்டது. கட்சி உருவாகும்போது மூன்று வயதுச் சிறுவனாக இருந்த ரணில் விக்கிரமசிங்க இப்போது கட்சித் தலைவர் என்பதோடு ஜனாதிபதி பதவியும் வகிப்பதால் இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். ரணில் தமது தலைமை உரையில் நாடு சந்தித்துள்ள அத்தனை விடயங்களையும் சுட்டிக்காட்டினார். ஆனால் ஏனோ தெரியாது ஜெனிவாவைப் பற்றி எதுவுமே கூறாது சாதுரியமாக நழுவி விட்டார்.

அதேசமயம் தம்மை ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதிகளுள் நான்காவதாகத் தெரிவானவர் என்று பெருமையோடு குறிப்பிட்டார். ஆவண நோக்கம் கருதி இது பற்றிச் சற்று விரிவாகப் பார்க்க வேண்டும். 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி பெரும்பான்மையில் வென்றதையடுத்து அதன் தலைவரான ஜே.ஆர். ஜெயவர்த்தன முதன்முறையாக தமது 71வது வயதில் பிரதமரானார். அடுத்த சில மாதங்களில் புதிய அரசியலமைப்பை உருவாக்கி, தேர்தலின்றி முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக 1978 பெப்ரவரியில் பதவியேற்றார். பின்னர் 1982ல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலேயே மக்களால் தெரிவான ஜனாதிபதியானார்.

1988ல் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் வெற்றி பெற்ற ஆர்.பிரேமதாச ஜனாதிபதியானார். ஆனால் 1993 மே தினத்தன்று அகால மரணமானதையடுத்து, அவ்வேளை பிரதமராகவிருந்த டி.பி.விஜேதுங்க அரசியலமைப்பு சட்டத்துக்கமைய ஜனாதிபதியானார். இந்த வருடம் கோதபாய ராஜபக்ச ஜனாதிபதி பதவியிலிருந்து விலக நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்களிப்பின் மூலம் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். இந்த வகையில் ஐக்கிய தேசிய கட்சியின் நான்கு ஜனாதிபதிகளில் இருவர் மட்டுமே நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பது கவனிக்கப்பட வேண்டியது.

அரசியல்வாதிகளிடம் பொதுவான பண்பு ஒன்று உண்டு. தேவையை ஒட்டி வசதி கருதி மறந்துவிடுவது. ரணிலும் அதே பாணியில்தான் பல விடயங்களை இப்பொழுது கையாள ஆரம்பித்திருக்கிறார். இந்த மாதம் சர்வதேச ஞாபகமறதி மாதமாகும். இதனால் தானோ என்னவோ ரணிலுக்கும் ஞாபகமறதி (டிமென்சியா) ஆரம்பித்திருக்கிறது போலும். இல்லை யென்றால் ஜெனிவா விடயத்தில் முன்னுக் குப்பின் முரணாக அவர் செயற்பட வேண் டிய தேவையில்லை.

சில நாட்களுக்கு முன்னர் மனித உரிமை ஆணை யாளர் இலங்கை தொடர்பாக விடுத்த அறிக்கை இலங்கை தொடர்ந்து கடைப்பிடித்து வரும் மறுப்புகளை சுட்டிக்காட்டுவதோடு, தாமதமின்றி செயற்படுத்த வேண்டியவைகளையும் சுட்டியுள்ளது. இலங்கை தனது அரசியல் வாழ்வில் முக்கியமான கட்டத்தில் இருப்பதாகவும், இதனால் இங்கு வாழும் சமூகங்கள் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களின் உரிமைகளும் பாதிக்கப்படுவதாக குறிப்பிடும் இந்த அறிக்கை இது விடயத்தில் நிலையான முன்னேற்றங்களுக்கு வலியுறுத்துகிறது.



இராணுவ மயமாக்கல் நோக்கிய நகர்வை இலங்கை அரசு தொடர்ந்தும் மேற்கொள்வதை இந்த அறிக்கை இறுக்கமாகக் குறிப்பிட்டுள்ளது. அரசாங்கத்தின் அதியுயர் மட்டங்களில் போர்க் குற்றங்களில் நம்பத் தகுந்த முறையில் சில ராணுவ அதிகாரிகளுக்கு தீவிரமாக ஊக்குவிப்பு வழங்கப்பட்டுள்ளதையும், தேசிய மட்டத்தில் பொறுப்புக் கூறலுக்கான முன்னேற்றம் எதுவுமே இல்லாது காணப்படும் நிலையையும் ஆணையாளர் தமது அறிக்கையில் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

கடந்த காலங்களிலும் ஜெனிவா அமர்வுகளில் இவ்வாறான தீர்மானங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. ஒவ்வொரு தடவையும் சாக்குப் போக்கு சொல்லியும், காலத்தை இழுத்தடித்தும் வந்த இலங்கை அரச தரப்பு இறுதியில் இலங்கையின் இறையாண்மை, அரசியலமைப்பு போன்றவைகளை வலிந்திழுத்து அதற்கு மாறாக எதனையும் செய்ய முடியாதென்பதை செயல் வடிவில் காட்டி வந்துள்ளது.

இதனால் தற்போதைய ஆணையாளரின் அறிக்கை நம்பகமான உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நிறுவ வேண்டுமென்பதையும், நிலைமாறு கால மற்றும் பொறுப்புக் கூறல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட மூலோபாயத்தைத் தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளது.

**ஜெனிவா விவகாரத்தில் ரணில் எடுக்கும் முன்னுக்குப்பின் முரணான முடிவு இரட்டை முகம் கொண்டது. பிரதமராக இருக்கும்போது வழங்கிய இணை அனுசரணையை இன்று அவர் மறுதலிக்கும் பின்னணி என்ன? ஜெனிவா கடுமையான தீர்மானத்தை நிறைவேற்றி நடவடிக்கை எடுக்குமானால் அது யாரைத் தண்டிக்கும் என்பது தெரியாதவரல்ல ரணில். தமது பதவியைத் தக்க வைக்க சரியான உத்தியை அவர் பயன்படுத்துகிறாரா?**

46:1 இலக்கத் தீர்மானத்தின் கீழ் இலங்கையின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனிக்குமாறு கடந்த அமர்வின்போது மனித உரிமைகள் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்திருந்தது நினைவிருக்கலாம். இப்போது அதற்கு மேல் ஒருபடி சென்று இலங்கையின் போர்க்குற்றம் மீதான சர்வதேச விசாரணைக்கு உலக நாடுகள் ஆதரவு வழங்குமாறு கோரியுள்ளார்.

46:1 தீர்மானம் செயற்படாது முடிவுக்கு வந்து 51வது தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டிய சூழ்நிலையில் முன்வைக்கப்பட்டுள்ள இக்கருத்து இன்றைய நிலைமையில் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

46:1 தீர்மானத்தை கோதபாய அரசு முழுமையாக நிராகரித்தது போன்று, இப்போது ரணில் அரசும் அதே வழியில் நிராகரித் துள்ளது. அரசாங்கத்தின் இந்த முடிவை வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் அலி சப்றி வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் இவரும், நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்சவும் நேரடியாக இலங்கை அரசின் பிரதிநிதிகளாக ஜெனிவா அமர்வில் பிரசன்னமாகின்றனர்.

46:1 இலக்கத் தீர்மானம் மைத்திரி-ரணில் இணைந்த நல்லாட்சிக் காலத்தில் அமெரிக்காவால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அப்போது மைத்திரி-ரணில் அரசு இதனை முழுமையாக ஏற்று இணை அனுசரணை வழங்கியிருந்தது. சர்வதேச கலப்பு நீதிப் பொறிமுறை, பொறுப்புக் கூறல் போன்ற முக்கிய அம்சங்கள் இத்தீர்மானத்துள் அடங்குவன. இணை அனுசரணை வழங்கிய போதிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்களிப்போடு ஜெனிவாவில் கால நீடிப்பை பெற்று வந்த நல்லாட்சி அரசு கலைந்ததோடு அதனைக் கவனத்தில் கொள்ள எவரும் முன்வரவில்லை.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுது இணை அனுசரணை வழங்கிய அரசில் பிரதமராகவிருந்த ரணில், இன்று இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருக்கிறார். ஆனால், அன்று ஏற்றுக் கொண்டவைகளை இன்று நிராகரிக்கிறார். இதனால் அவரின் இரட்டை முகம் அல்லது இரட்டை வேடம் அம்பலமாகிவிட்டதென்ற குரல்கள் தமிழர் தரப்பிலிருந்து ஓங்கி ஒலிக்கின்றன.

ஜெனிவா தீர்மானத்தை ரணில் ஆதரிக்கிறார் என்றும், இலங்கை ராணுவத்தை காட்டிக் கொடுத்து விடுவார் என்றும் எதிர்பார்த்த சிங்கள தரப்புக் குரல்கள், ரணிலின் குத்துக்கரணத்தால் நசுக்கப்பட்டு விட்டது.

அவரின் இந்த முன்னுக்குப்பின் முரணான போக்கு புதிதானதல்ல. ஜே.ஆரின் வாரிசு என்பதால் இவ்வாறான குள்ளநரிப் போக்கு அவருக்கு இருக்குமென்பதில் ஐயமில்லை. இந்தப் பின்னணியில் ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதை ரணில் அரசு எதிர்க்கிறது என்றால் - அதற்கு இரண்டு காரணங்கள் இருக்க முடியும். இதனை எதிர்ப்பதன் வாயிலாக பொதுஜன பெரமுனவின் ஆதரவை தக்க வைக்கலாமென அவர் நினைக்கக்கூடும். அதே சமயம் தமது எதிர்ப்பாளர்களின் வாயை மூடவும் அவர் இதனை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தலாம். எனினும், முன்னரிலும் பார்க்க கடுமையான வாசகங்களுடன் ஒரு தீர்மானம் புதிதாக நிறைவேற்றப்படுவதை அவரால் நிறுத்த முடியாது.

இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளக் கூடியதென எதிர்பார்க்கப்படும் ஒரு தீர்மா னம் ஜெனிவா அமர்வில் நிறைவேற்றப்படுமானால் அது யாரைக் குறி வைப்பதாக இருக்கும்? நிச்சயமாக ரணிலை அல்ல. போரை முடிவுக்குக் கொண்டு வந்ததாகக் கூறி கொண்டாடியவர்களையும், மனித உரிமைகளை மீறி படுகொலைகளை மேற்கொண்டவர்களையுமே அது குறி வைக்கும். நிச்சயமாக ராஜபக்சக்களையும், அவர்களோடு இணைந்து போர்க்குற்றம் புரிந்த ராணுவ அதிகாரிகளையும்தான் போர்க்குற்ற விசாரணைக்குள் தள்ளும். நாற்பத்தைந்து வருட அரசியல் அனுபவசாலியான ரணிலுக்கு இது புரியாததல்ல.



இவர் நினைப்பதுபோல் ஜெனிவா செயற்பாடுகள் தொடருமானால் ஜனாதிபதி பதவியை தொடர்ந்து வகிக்கவும், தமது ஐக்கிய தேசிய கட்சியை கட்டி எழுப்பவும் இது உதவுமென ரணில் நம்புவதுபோலத் தெரிகிறது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ராஜிவ் காந்தியுடன் இலங்கை-இந்திய ஒப்பந்தம் செய்தது விடுதலைப் புலிகளோடு இந்தியாவை போரிட வைத்து, தம்மால் முடியாது போன காரியத்தை இந்தியா ஊடாக செயற்படுத்தவே என்பது காலஞ்சென்ற பின்னர் தெரியவந்த உண்மை. அந்தப் பாதையையே ரணிலும் ஜெனிவாவில் பயன்படுத்துகிறார் போலும்.

ஜெனிவாவை மையப்படுத்தி ரணில் வைக்கும் இலக்கு யாருக்கான பொறி என்பதைக் கண்டறிய மனித உரிமைகள் பேரவை தனது பயணத்தைத் தொடர வேண்டும்.

# வதந்திக்கு முற்றுப்புள்ளி!



இயக்குநர் விக்னேஷ் சிவனைக் கரம்பிடித்த நாளிலிருந்து, “நயன்தாரா நடிப்புக்கு முழுக்குப் போடப் போகிறார்” என்கிற செய்தி பரபரப்பாகிவருகிறது. ஆனால், இரண்டு கதைகளை கேட்டு சம்மதம் தெரிவித்திருக் கிறாராம் நயன்தாரா.

அத்துடன், விக்னேஷ் சிவன் இயக்கத்தில் மீண்டும் ஒரு படத்தில் நடிப்பதற்கும் நயன் தாரா திட்டமிட்டுள்ளாராராம். இதனால், அவர் நடிப்புக்கு முழுக்குப் போடப் போகிறார் என்ற செய்தி வதந்தி என்பது உறுதியாகி விட்டது.

# பழங்குடி பெண்ணாக சாய்!

அல்லு அர்ஜூன் நடிப்பில் செம்மர கடத்தலை மையமாக வைத்து தெலுங்கில் உருவாகி மாபெரும் வெற்றி பெற்ற திரைப்படம் புஷ்பா. இந்தப் படத்தின் வெற்றிக்கு பிறகு இரண்டாம் பாகமும் உருவாகி வருகிறது.

இந்த படத்தில் அல்லு அர்ஜூனுடன் ராஷ்மிகா மந்தனா, பஹத் பாசில் ஆகியோர் நடித்து வருகிறார்கள். இந்நிலையில் இந்த படத்தின் இரண்டாம் பாகத்தில் நடிகை சாய் பல்லவி இணைந்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. மேலும் சாய்பல்லவி இப்படத்தில் பழங்குடி பெண்ணாக மிக முக்கிய கதாபாத்திரதத்தில் நடிக்கவுள்ளார்.




# வரலாற்று கதையில் சூர்யா

சிறுத்தை சிவா இயக்கத்தில் சூர்யா, திஷா பதானி நடிக்கும் சூர்யாவின் 42 ஆவது படத்தின் வடிவமைப்பு படம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் படம் முப்பரிமாண தொழில் நுட்பத்தில் 10 மொழிகளில் உருவாகவுள்ளது.

சரித்திர கதை அம்சம் கொண்ட இந்த படத்தில் அரத்தர், வெண்காட்டார், முக்காட்டார், மண்டாங்கர், பெருமரத்தார் ஆகிய பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. வடிவமைப்பு படத்தை வைத்து பார்க்கும் போது இந்தத் திரைப்படம் மிகப்பெரிய தொழில்நுட்பத்துடன் பிரம்மாண்ட நிதிச் செலவில் உருவாக இருப்பது தெரிகிறது. இந்த படத்துக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். தற்போது இப் படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

# விடுதலையில் ரஜினி - கமல்



வெற்றிமாறன் இயக்கத்தில் விஜய் சேதுபதி, சூரி உள்பட பலரது நடிப்பில் இரண்டு பாகங்களாக உருவாகி வரும் படம் விடுதலை. அண்மையில் வெளியான முதல்பார்வையில், சூரி பொலிஸாகவும், விஜய் சேதுபதி கைதியாகவும் தோன்றும் காட்சி இருந்தது.

இந்தப் படத்தில், இளையராஜா இசையமைக்கும் இந்த படத்துக்காக முதன் முறையாக அவரது இசையில் தனுஷ் ஒரு பாடல் பின்னணி பாடி இருக்கிறார். அவரை தொடர்ந்து ரஜினி, கமல் ஆகிய இருவரும் இணைந்து ஒரு பாடல் பின்னணி பாடியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இதனால், இந்தப் படத்துக்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.



# மிரட்ட வருகிறார் சமந்தா

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகையாக வலம் வருபவர் சமந்தா. இவர் தமிழ், தெலுங்கில் பல படங்களில் தற்போது நடித்து வருகிறார். தற்போது இவர் நடிப்பில் “யசோதா” என்ற இந்தியளவிலான திரைப்படம் தயாராகி உள்ளது. இந்தத் திரைப்படத்தை இயக்குநர்கள் ஹரி - ஹரிஷ் இயக்கியுள்ளனர். இது, விரைவில் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இதைத்தொடர்ந்து, இயக்குனர் அமர் கௌசிக் இயக்கத்தில் ஆயுஷ்மான் குரானாவுக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார். இந்த படத்தின் மூலம் சமந்தா ஹிந்தியில் அறிமுகமாகிறார். இந்த படத்தில் இவர் இளவரசியாகவும் பேயாகவும் இரண்டு கதாபாத்திரங்களில் நடிக்கவுள்ளார்.







**திரைப்படம் - கணம்**
**இயக்கம் - ஸ்ரீ கார்த்திக்**
**இசை - ஜேக்ஸ் பிஜாய்**
**நடிப்பு - ஷர்வா, அமலா, சதீஷ், ரமேஷ் திலக், நாசர், ரிது வர்மா**

அறிவியல் புனைவுக் கதைகள் தமிழ் சினிமாவில் அதிகம் வருவதில்லை. எப்போதோ ஒரு முறைதான் வரும். அப்படிப்பட்ட படங்களுக்கு மிகப் பெரும் செலவு தேவைப்படும். ஆனாலும், அப்படியிருந்தும் குறைந்த செலவில் சில படங்கள் வந்துள்ளன.

“ரைம் மிஷின், ரைம் டிராவல்“ எனப்படும் கடந்த காலம் மற்றும் எதிர்காலத்துக்கு செல்லும் அதீத கற்பனை கதைகளும் அறிவியல்பூர்வ படங்களில்தான் அடங்கும். இதற்கு முன்பு “இன்று நேற்று நாளை, 24“ ஆகிய படங்கள் வந்துள்ளன. அந்த வரிசையில் தற்போது வெளிவந்துள்ள படம் “கணம்“.

ஓர் அறிவியில் புனைவுக் கதையில் ஓர் அம்மாவின் பாசத்தை இந்த அளவுக்கு இணைத்து இரசனையுடனும், நெகிழ்ச்சியுடனும் சொல்ல முடியுமா என வியக்க வைத்திருக்கிறார் இயக்குநர் ஸ்ரீ கார்த்தி. அவருடைய அறிமுகப் படத்திலேயே இப்படி ஒரு சோதனையான முயற்சியில் தைரியமாக இறங்கி வெற்றியும் பெற்றிருக்கிறார். அம்மாவை இழந்தவர்களுக்கு, அதிலும் சிறு வயதிலேயே அம்மாவை இழந்தவர்களுக்கு அந்த வலி என்றும் தீராத ஒன்று. அம்மாவை மீண்டும் பார்க்க மாட்டோமா, அம்மா மீண்டும் நமக்கு வந்து அன்பைப் பொழிய மாட்டாரா என்று ஏங்க வைக்கும். அந்த வலி இயக்குநர் ஸ்ரீ கார்த்திக்குக்கும் அதிகமாக இருந்திருக்கிறது. அதனால்தான் இப்படி ஒரு நெகிழ்வான படத்தை அவரால் கொடுக்க முடிந்துள்ளது.

சிறு வயதிலேயே அம்மாவை இழந்தவர் ஷர்வா. சிறு வயது நண்பர்கள் சதீஷ், ரமேஷ் திலக் ஆகியோருடன் ஒன்றாக அறையில் இருக்கிறார். இசைக் கலைஞராக வேண்டும் என்பது அவரின் இலட்சியம். இந்த சூழ்நிலையில் ரைம் மிஷின் பற்றி ஆராய்ச்சி செய்துள்ள விஞ்ஞானியான நாசரை சந்திக்க வேண்டிய சூழல் வருகிறது. அம்மா ஏக்கத்தில் இருக்கும் ஷர்வா நாசர் கண்டுபிடித்துள்ள ரைம் மிஷின் மூலம் தனது அம்மா இறந்த 1998ஆம் ஆண்டிற்குச் சென்று விபத்தில் இறந்த அம்மா அமலாவிவின் மரணத்தைத் தடுக்க முயற்சிக்கிறார். அவருடன் நண்பர்கள் சதீஷ், ரமேஷ் திலக்கும் அந்த கடந்த காலத்துக்குப் பயணிக்கிறார்கள். அம்மாவின் விபத்தை ஷர்வா தடுத்தாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

ரைம் மிஷின் கதைகளுக்கான திரைக்கதை மிகவும் முக்கியம். ரசிகர்களை எந்த விதத்திலும் குழப்பத்தில் ஆழ்த்தக்கூடாது. இந்தப் படத்தில் மிகத் தெளிவான திரைக்கதையை எழுதியிருக்கிறார் ஸ்ரீகார்த்திக். 2019லிருந்து இளைஞர்களாக இருக்கும் ஷர்வா, சதீஷ் ரமேஷ் திலக் 1998க்குச் செல்ல, 1998இல் சிறுவர்களாக இருக்கும் அவர்கள் 2019க்குள் எதிர்பாராமல் வர எந்த குழப்பமும் இல்லாமல் நகர்கிறது படம்.

“எங்கேயும் எப்போதும்“ படத்துக்குப் பின் நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஷர்வா தனது இயல்பான நடிப்பால் கவர்கிறார். அம்மா இல்லாத ஏக்கத்திலிருந்து கடந்த காலத்தில் அம்மாவை சந்திக்கச் சென்று அவரைப் பார்த்ததும் அவருக்கு ஏற்படும் அந்த உணர்வு நம்மையும் தொற்றிக் கொள்ளும். எப்படியாவது அம்மாவை மரணத்திலிருந்து காப்பாற்றிவிட வேண்டும் என்று துடிக்கிறார். உணர்வுகளின் குவியலால் இருக்கும் படத்தில் அவரது நடிப்பு தூணாக இருந்து படத்தைத் தாங்குகிறது.

30 வருடங்களுக்குப் பிறகு தமிழில் மீண்டும் நடிக்க வந்துள்ளார் அமலா. 90 களின் இளைஞர்களுக்கு அமலாவை அம்மா கதாபாத்திரத்தில் பார்ப்பதற்கு கொஞ் சம் வருத்தமாக இருக்கிறது என்பது திரையரங்குகளில் தெரிகிறது. ஆனாலும், அந்தக் காலத்தில் இருந்து இந்தக் காலம் வரையிலும் அவருடைய அந்த அன்புச் சிரிப்பு மட்டும் மாறவேயில்லை. ஷர்வாவின் ஜோடியாக சில காட்சிகளில் வந்தாலும் முக்கியத்துவமான காட்சிக ளில் இருக்கிறார் நாயகி ரிது வர்மா. சதீஷ், ரமேஷ் திலக் இருவரும் நகைச்சுவைக் காகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களை வைத்து இன்னும் நகைச்சுவையை சேர்த்திருக்கலாம். ஆனால், இயக்குநர் பாசமே போதும் என நினைத்திருக்கிறார். விஞ்ஞானியாக நாசர், அமலாவின் கணவராக ரவி ராகவேந்தர். சிறு வயது ஷர்வா, சதீஷ், ரமேஷ் கதாபாத்திரங்களில் நடித்துள்ள மாஸ்டர் ஜெய், ஹிதேஷ், நித்யா ஆகியோரும் பொருத்தமான தேர்வு.

ஜேக்ஸ் பிஜாய் பின்னணி இசையில் அம்மா பாச உணர்களை தன் இசையால் மேலும் கடத்துகிறார். சுஜித் சாரங் ஒளிப்பதிவு, ஸ்ரீஜித் சாரங் படத்தொகுப்பு இயக்குநருக்கு பலமாகக் கை கொடுத்திருக்கிறது. இடைவேளை வரை சில காட்சிகளின் நீளம் அதிகம். இடைவேளைக்குப் பின்பு படம் விறுவிறுப்பாக நகர்கிறது. ஒரு மாறுபட்ட படத்தைப் பார்க்கும் திருப்தி ரசிகர்களுக்குக் கிடைக்கும்.




## அடுத்த கட்ட பாய்ச்சலுக்கு தயாராகும்

# இலங்கை சிங்கங்கள்!

நிலவன்

பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கி நாடு இருண்டு கிடக்கிறது என்றால், கடந்த சில ஆண்டுகளாக கிரிக்கெட் அணியின் இருப்பே இருண்டுதான் கிடக்கின்றது.

ஐந்து முறை ஆசியக் கிண்ணத்தை இலங்கை அணி வென்றிருந்தது. மூன்று இருபது - 20 உலகக் கிண்ணங்களில் இறுதிப் போட்டிகளில் விளையாடியதுடன் ஒருமுறை கிண்ணத்தையும் வென்றிருந்தது.

பொதுவாக இலங்கை அணியின் ஆட்டமுறைமை அதிசயமானது. எதிரணியை தாக்கும் பாணி விபரீதமானது. கரணம் தப்பினால் மரணம் என்பதாக, அணியின் தாக்குதல் முறைமையே இலங்கை அணியை தோல்விக்கும் வழிவகுத்து விட்டிருக்கின்றது. ஒழுக்கமான அணி என்ற பெயரை கிரிக்கெட் உலகில் தொடர்ந்தும் தக்கவைத்திருந்தது.

ஆனால், கடந்த 2016ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற பின்னர் இலங்கை அணி மிக இருண்ட காலத்துக்குள் இருந்தது. விளையாடிய 16 இருபது - 20 போட்டிகளில் 13ஐ இழந்தது. கொரோனா தொற்றுப் பரவலைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டு விளையாடிய எந்த இருபது - 20 போட்டியிலும் இலங்கை வெற்றிபெறவில்லை.

2020இன் பின்னர், இந்தியாவுடன் அதிக போட்டிகளில் பங்கேற்ற இலங்கை அணி தொடர்ச்சியாக வெள்ளையடிப்பு செய்யப்பட்டதே சமீபத்தைய வரலாறாகத் தொடர்ந்தது.

கட்டுக்கோப்பான - சவால் மிக்க அணி என்று பெயர் எடுத்திருந்த இலங்கை அணி அண்மைக்காலங்களில் வெறுமனே பெயருக்கே விளையாடி வந்தது. அணியில் மட்டுமின்றி இலங்கை கிரிக்கெட் சபையின் நிலைமையும்கூட இதுதான். ஆனால், கடந்த 18 மாதங்களில் இந்தியாவுக்கு எதிரான போட்டிகளில் செய்யாத சாதனையை இம்முறை ஆசியக் கிண்ணத்தில் படைத்திருக்கிறது இலங்கை அணி. இலங்கையின் ரசிகர்களாலேயே இந்த




வெற்றியை நம்ப முடியவில்லை. இலங்கை அணி ஆசியக் கிண்ணத் தொடரில் பெற்றது போன்ற வலுவான அணிகளுக்கு எதிராக நிலைத் தன்மையான வெற்றிகளை இலங்கை அணி பெற்று நீண்டகாலமாகி விட்டது.

துடுப்பாட்ட வரிசையில் வலுவாக இருந்த காலத்தில் துரத்தியது போன்று பெரிய இலக்குகளை விரட்டி வெற்றி பெற்றுள்ளது இலங்கை அணி. இந்த ஆசியக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக 184 ஓட்டங்கள், ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக 176 ஓட்டங்களை அடித்து வென்றுள்ளது இலங்கை அணி.

இதில், சார்ஜா மைதானத்தில் முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் பெற்ற 174 ஓட்டங்கள் என்பது மைதான சாதனை ஓட்டம் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

பொதுவாக 90களில் நடந்த போட்டிகளில் இலங்கை அணி இந்திய அணியை முக்கிய தொடர்களில் வெளியேற்றிவிடுவது வழமை. இவ்வாறான ஒரு நிலைமை இப்போதும் எழுந்தது. கிரிக்கெட் உலகில் இன்று இந்தியாதான் வலுவான நாடு. ஐ. பி. எல். என்ற மிகப்பெரிய தொடர் அதன் பலத்தின் உச்சம். இன்று கிரிக்கெட் உலகின் யானை என்று மதிக்கப்படும் இந்திய அணியை இலங்கை என்ற எறும்புகளின் படை வீழ்த்தி விட்டது என்றே கூறலாம்.

ஆசியக் கிண்ணம் இம்முறை இலங்கை அணியின் புதிய நாயகர்களை இனங்காட்டியிருக்கிறது எனலாம். இதில்,




முக்கியமானவர் பதும் நிஸங்க, இந்தியாவுக்கு எதிரான போட்டியில் 37 பந்துகளில் 52 ஓட்டங்களை எடுத்த இவர், நேற்று முன்தினம் இரவு நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியிலும் 48 பந்துகளில் 55 ஓட்டங்களை குவித்து இலங்கை அணிக்கு பலம் சேர்த்திருந்தார். அத்துடன், இலங்கை ரசிகர்களின் நம்பிக்கை நாயகராகவும் உயர்ந்துள்ளார்.

இவர்போன்றே, நடுவரிசை துடுப்பாட்டத்தில் பலமான - நம்பிக்கையான வீரராக பானுக ராஜபக்ஷ மாறியுள்ளார். இந்தியாவுக்கு எதிரான போட்டியில் 24, பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 25 ஓட்டங்களை அவர் குவித்திருந்தாலும், விக்கெட்களை தொடர்ச்சியாக இழக்காமல் தற்காத்து ஆடும் அவர் இலங்கை அணியின் முக்கியமான தூணாக மாறியுள்ளார்.

இதேபோன்று மற்றொரு தொடக்க வீரரான குசல் மெண்டிஸ் ஆரம்பத் துடுப்பாட்டத்தில் தவிர்க்க முடியாத வீரராகியுள்ளார். இந்தியாவுக்கு எதிரான போட்டியில் இவர் ஓட்டங்களை குவிக்கத் தவறிய போதிலும், கடந்த போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு எதிராக அவர் சேர்த்த 57 ஓட்டங்களை சேர்த்திருந்தார்.

இந்நிலை யில், இன்று நடக்கும் பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் அவர் இன்னும் அதிக முக்கியத்துவம் பெறுகிறார். ஆப்கான் (36 ஓட்டங்கள்), பங்களாதேஷ் (60) அணிகளுக்கு




எதிராக குஷல் மெண் டிஸை தவிர்க்க முடியாத வீரராக மாற் றியுள்ளன.

இந்தத் திறமையான வீரர்களை எல்லாம் ஒன்றிணைத்து தலைமைத்துவத்தில் முத்திரை பதித்துள்ளார் தசூன் சானக. அதுமட்டுமல்ல, இந்த ஆண்டு இருபது - 20 போட்டிகளில் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சானக தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

தசூன் சானகவை பொறுத்தவரை வியூகமான வீரர் - வெற்றிகரமான தலைவர் என்று யாரும் சொல்லிவிடப் போவதில்லை. ஆனால், கடந்த சில ஆண்டுகளில் இல்லாத - பல ஆண்டுகளுக்கு முன்னைய இலங்கை அணி போன்று துடிப்பும் - ஆக்ரோஷமும் மிகுந்த அணியாக மாற்றி வருகிறார் என்பதே உண்மை.

சுருங்கச் சொல்லின் இலங்கை அணி மீண்டும் தனது நாயகர்களை கண்டறிய ஆரம்பித்துள்ளது.

இன்று நடக்கும் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்று ஆசியக் கிண்ணத்தை கைப்பற்றுமா அல்லது இல்லையா என்பது இன்றிரவு தெரிந்துவிடும். ஆனால், இதில் எது நடந்தாலும் இலங்கை அணி தனது அடுத்த கட்ட பாய்ச்சலுக்கு தன்னை தயார்படுத்தி விட்டது என்பதே உண்மை.

ஈழநாடு



# அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் பிறந்ததினத்தை நினைவுகூரும் மாணவர்கள்

குரு அரவிந்தன்



புலம்பெயர் மடல்

அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், காங்கேசந்துறை குருவீதியை வதிவிடமாகவும் கொண்டவர். 1957 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் விலங்கியலுக்கான பட்டதாரியான இவர் மகாஜனாக் கல்லூரியில் உயர்தர வகுப்பு விலங்கியல் ஆசிரியராகவும், அதன் பின் 1976 ஆம் ஆண்டு தொடக்கம் கல்லூரி அதிபராகவும் இணைந்து கடமையாற்றினார். இவரது காலத்தில் கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டுத் துறையிலும் கல்லூரி புகழ் பெற்றிருந்தது. இதைவிட ஏழாலை மத்திய மகாவித்தியாலயத்திலும், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும் அதிபராகக் கடமையாற்றியிருந்தார். அதன் பின் சிறிது காலம் நைஜீரியாவில் கடமையாற்றினார். அங்கிருந்து 1987 ஆம் ஆண்டு கனடா வந்தார். 1991 ஆம் ஆண்டு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் ஒன்ராறியோ கல்விச் சபைகளில் கற்பிப்பதற்கு முன்னின்று பாடுபட்டார்.

இவர் பல நூல்களை வெளியிட்டு இருந்தாலும், கடைசியாக இவர் ஆக்கியளித்த ‘எம்மை வாழ வைத்தவர்கள், ‘மரம் மாந்தர் மிருகம்’ என்ற நூல்கள் பலராலும் இன்றும் பேசப்படுகின்றன. 1995 ஆம் ஆண்டு இவரது மணிவிழாவின் போது, ‘ஒரு அதிபரின் கூரிய பார்வை’ என்ற நூலும், 1998 இல் ‘பெற்றோர் பிள்ளைகள் உளவியல்’இ 2000 ஆண்டு மாறன் மணிக் கதைகள், 2008 ஆம் ஆண்டு மாறன் மணிக்கதைகள்-2, மனம் எங்கே போகிறது, திறவு கோல், ஆகிய நூல்களும் வெளியிடப்பட்டன. ரொறன்ரோ கல்விச் சபையின் பல்கலாச்சார ஆலோசகராகவும், புலம் பெயர்ந்த சமூகத்திற்கு முக்கியமான ஆலோசகராக இருந்து நல்வழிப்படுத்திய அவர், கனடா பழைய மாணவர்சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவராய், தலைவராய், ஆலோசகராய் இருந்து வழிநடத்தினார். மகாஜனக்கல்லூரியின் மிகப் பெறுமதி மிக்க 100 ஆண்டு சிறப்புமலர் வெளியிடுவதில் சர்வதேச இணைப்பாளராக இருந்து சிறப்பாகச் செயற்பட்டார். 24-12-2014 ஆம் ஆண்டு எம்மை விட்டுப் பிரிந்த அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் நினைவாக கனடாவில் ரொறன்ரோ மல்வேன் பூங்காவில் ‘நினைவு மரம்’ ஒன்று அவரது மாணவர்களாலும், நண்பர்களாலும் நடப்பட்டிருக்கின்றது. அவரிடம் கல்விகற்ற மாணவர்களும், நண்பர்களும் ஒவ்வொருவருடமும் இந்த நினைவு மரத்தடியில் அவரது பிறந்த தினமான செப்ரெம்பர் 4 ஆம் திகதி ஒன்றுகூடிக் கலந்துரையாடி நினைவுகூருவார்கள். அந்தவகையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை 4-9-2022 அன்று மாணவர்கள், மன்றக்காப்பாளர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள் ஒன்றுகூடினார்கள்.



அந்த நிகழ்வில் பல கல்விமான்களையும், வைத்தியக் கலாநிதிகளையும் எங்கள் சமூகத்துக்கு உருவாக்கித் தந்த பெருமை அதிபர் பொ. கனகசபாபதி அவர்களைச் சாரும் என்று பழைய மாணவர் சங்கத் தலைவர் சி. புவனச்சந்திரா தனது உரையில் குறிப்பிட்டார். திரு. குமார் புனிதவேல், எழுத்தாளர் குரு அரவிந்தன், காப்பாளர்களான நா.சாந்திநாதன், க.ஜெயேந்திரன், செ.சுப்ரமணியம் மற்றும் அதிபரின் மகள் மணிமொழி ஆகியோரும் உரையாற்றினார்கள். சங்கச் செயலாளர் ந. தனபால் நன்றியுரை வழங்கினார். குளிரையும் பொருட்படுத்தாது வருகை தந்த எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

அதிபர் பொ.கனகசபாபதி அவர்களின் பெயரில் உள்ள நம்பிக்கைநிதியில் இருந்து விலங்கியலில் அதிக புள்ளிகள் எடுத்து பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் இலங்கையைச் சேர்ந்த, நிதி தேவைப்படும் தமிழ் மொழி மாணவர்களுக்கும், மகாஜனக்கல்லூரி மாணவருக்கும் நிதி உதவி செய்யவும் முன்மொழியப்பட்டது. இது பற்றி நிர்வாகசபையினர் அதிபரின் குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து இறுதி முடிவெடுத்த பின் விபரங்களை அறியத்தருவார்கள்.

---

## வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**ஆ. கோபாலசிங்கம், காரைதீவு, அம்பாறை.**

**கேள்வி:**

இது சிங்கள பௌத்த நாடு என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இங்கு பழைய பௌத்த தூபிகளைப் பராமரிக்க எவருடைய அனுமதியையும் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது என்றும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர கொக்கரிக்கிறாரே. அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**வியுக்தியார்:**

கொஞ்ச நாட்களாக அமைதியாக இருந்த அவர் இப்போது மீண்டும் கொக்கரிக்கத் தொடங்கியிருக்கிறார். அது வேறு ஒன்றுமல்ல, தமது வாக்கு வங்கியில் எங்கே விமல்- கம்பன்பில கோஷ்டி கைவைத்துவிடுவார்களோ என்ற பயம் அவரது கட்சிக்கு வந்துவிட்டதோ தெரியவில்லை. அதுதான் அவரை இப்படி மீண்டும் பேசச் சொல்லியிருப்பார்களோ என்னவோ?

---

**க. சதீஸ்குமார், நெல்லியடி, கரவெட்டி**

**கேள்வி:**

வன்னி பிரதேசம், கிழக்கு மாகாணம் மற்றும் மலையக பகுதிகளை சேர்ந்த பொருளாதார ரீதியில் பின் தங்கிய உயர்தர விஞ்ஞான பிரிவில் கல்வி கற்க யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வாய்பை ஏற்படுத்தியுள்ளது. இப்படி ஒவ்வொரு பாடசாலைகளும் முன்வந்தால் நல்லதுதானே. அப்படி செய்வார்களா?

**வியுக்தியார்:**

நல்ல முயற்சிதான். அது என்ன வன்னி, கிழக்கு, மலையகம் என்பதுதான் புரியவில்லை. அதிகம் ஏன் யாழ்ப்பாண மாவட்டத்திலும் கூட தீவுப்பகுதி போன்ற இடங்களில் பல பெற்றோருக்கு தமது பிள்ளைகளை இந்துக்கல்லூாரியில் படிப்பிக்கவேண்டும் என்ற கனவு இருக்கின்றதே. ஹாட்லிக் கல்லூரியில் கல்விகற்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு எத்தனை பேர் வடமராட்சியிலேயே இருப்பார்கள்.

முதலில் வசதி குறைந்த குடும்பங்களிலிருந்து மாணவர்களை தெரிவு செய்து இதுபோன்று கல்விகற்பிக்க ஒவ்வொரு கல்லூரிகளும் முன்வந்தால் நல்லதுதான்.

---

**எஸ். லம்பேர்ட், மன்னார்.**

**கேள்வி:**

கொழும்பில் கடந்த வாரம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டுவிழாவில் தமிழிலும் தேசிய கீதம் பாடப்பட்டது என்ற செய்தியை பார்த்தேன். அதுபோல எல்லாவிடயங்களிலும் நல்லறவை வளர்ப்பது நல்லது என்று ஐக்கிய தேசியக்கட்சி நினைக்கும் என்று நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:**

அந்தச் செய்தி வெளிவந்த அதே நாளில்தான் திருகோணமலையில் பாடல்பெற்ற திருத்தலமான கோணேஸ்வரர் ஆலய காணியை அபகரிக்க தொல்பொருள் திணைக்களம் முயற்சி செய்கின்றது என்கின்ற செய்தியும் வந்ததே கவனிக்கவில்லையா? தேசிய கீதத்தை தமிழில் பாடுவது நல்லதுதான் அதற்காக அப்படிப் பாடினால் மாத்திரம் இனங்களுக்கிடையே நல்லறவு வந்துவிடப்போவதில்லை.

---

**எம்.லிங்கேஸ்வரன், புதுார், மட்டக்களப்பு**

**கேள்வி:**

இலங்கையில் சர்வதேச சட்டத்தின் கீழ் இழைக்கப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கும், விசாரணை செய்வதற்கும் உலகளாவிய ரீதியில் உள்ள வழிகளைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறல் முயற்சிகளில் ஏனைய நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் என்று ஐநா மனிதஉரிமை பேரவையின் ஆணையாளர் தனது அறிக்கையில் தெரிவித்திருப்பது தமிழர்களின் போராட்டங்களுக்கு கிடைத்த வெற்றி தானே?

**வியுக்தியார்:**

நிச்சயமாக வெற்றிதான். ஆனால் அவர்கூட இந்த விசாரணைகளை செய்வதற்கு உலகளாவிய ரீதியில் உள்ள வழிகளை பயன்படுத்தி விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியிருப்பதை கவனித்தீர்களா? உடனே எமது தலைவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யவேண்டும் என்று கூறத் தொடங்கியிருக்னின்றனர். உண்மைதான். ஆனால் அதற்கு ஐநா பாதுகாப்புச்சபைதான் தீர்மானம் நிறைவேற்றவேண்டும். அப்படியொரு தீர்மானம் வந்தால் சீனா போன்ற நாடுகள் தமது வீட்டோவை பயன்படுத்தி அதனை தடுத்துவிடும் என்பதும் தெரிந்தது தான். அதுதான் ஆணையாளர் அந்த அறிக்கையில் உலகளாவிய ரீதியில் உள்ள வழிகளை பயன்படுதத் வேண்டும் என்கிறார். அதாவது உறுப்பு நாடுகள் தத் தமது நாடுகளிலேயே குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராக விசாரணை செய்யலாம் என்கிறாரோ? அதனை வலியுறுத்த நமது தலைவர்கள் முயற்சி செய்யவேண்டும்.



# துறப்பு

-இளங்கோவன் முத்தையா

கல் கட்டிடடத்தின் சுவரை ஒட்டி இருசக்கர வாகனத்தை நிறுத்தியபோது இரண்டு செக்யூரிட்டிகள் வேகமாக ஓடிவந்தார்கள். "சார், இங்க நிறுத்தக்கூடாது, வெளிய பார்க்கிங்ல போய் நிறுத்துங்க" என்றார் ஒருவர். என் மனைவி வண்டியிலிருந்து இறங்கி, "பேஷண்ட் இல்ல, டாக்டர் ரவிச்சந்திரனோட கெஸ்ட், அவர்தான் வண்டிய இங்க நிறுத்திட்டு வரச்சொன்னாரு" என்றாள் நிதானமான குரலில். இந்த மாதிரியான இடங்களில், அதிகாரத்துக்கான, அலட்சிய முக பாவத்தை வெளிப்படுத்துவது அவளுக்கு இயல்பாகவே வருகிறது என்பதை மீண்டும் உணர்ந்தேன். அதே அலட்சியத்துடன் என் பக்கம் திரும்பி, "நான் முன்னாடி போறேன், நீங்க வண்டிய நிறுத்திட்டு வாங்க" என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்தாள்.

"சார், யாராவது ஒரு டாக்டர் பேரைச் சொல்லி நீங்க நிப்பாட்டீட்டு போயிருவீங்க, இது ஆம்புலன்ஸ் வந்து நிக்கற எடம், டீன் பார்த்தாருன்னா எங்களத்தான் திட்டுவாரு" என்றார் செக்யூரிட்டி.

எங்கு நிற்கிறேன் என்பதையே அப்போது தான் கவனித்தேன். அவசர சிகிச்சைப் பிரிவின் வாசல் அது. யோசிப்பதற்குள் ஆம்புலன்ஸ் ஒன்று சைரன் ஒலியோடு வந்துநின்றது. ஆண் செவிலியர்கள் இரண்டு பேர் கட்டிடத்திற்குள்ளிருந்து ஓடி வந்து ஆம்புலன்ஸின் கதவைத் திறந்து உள்ளே ஸ்ட்ரெச்சரில் படுத்திருந்த நபரை இறக்குவதில் மும்முரமானார்கள். செக்யூரிட்டி என்னைப் பார்த்தார். அந்தப் பார்வையில் இருந்தது இறைஞ்சுதலா, எரிச்சலா என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த மாதிரி ஒரு முக பாவத்தை வரிந்துகொள்வது அவருக்கும் இயல்பாகக் கைகூடி வந்திருக்கும் என்று சட்டென்று தோன்றியது.

"நான் வெளிய நிறுத்திக்கிறேன்" என்றபடி வண்டியைத் திருப்பி, சாலையில் இறக்கினேன். அடுத்த நுழைவாயிலில் இருந்த வாகனக் காப்பகத்தின் வாசலிலேயே "ஒரு எடம்கூட இல்ல" என்று கறாராகச் சொல்லி என்னைத் திருப்பி அனுப்பினார் ஒரு பெரியவர்.

"உள்ளேயும் நிறுத்தக்கூடாது, பார்க்கிங்லையும் இடமில்லைன்னா, வேற எங்கதான் வண்டிய நிறுத்தறது?" என்று குரலை லேசாக உயர்த்தினேன்.

அவர் எனக்குப் பதில் சொல்வதைத் தவிர்த்து விட்டு எனக்குப் பின்னால் வந்த இன்னொருவரிடம், "ஒரு எடம்கூட இல்ல" என்ற அதே வசனத்தைச் சொல்லித் திருப்பி அனுப்ப ஆரம்பித்தார். வேறு வழியில்லாமல் மருத்துவமனையின் சுற்றுச்சுவரை ஒட்டிச்சென்ற சாலையில் வண்டியை மெல்ல உருட்டிக்கொண்டே போனேன். சுவரையொட்டி நூற்றுக் கணக்கான இருசக்கர வாகனங்கள் நின்றுகொண்டிருந்தன. மூத்திர வாடையும், மருந்து வாடையும் நாசியைத் துளைத்தது. வெயில் அதைச் சகிக்க முடியாத அளவுக்குத் துர்நாற்றமாக மாற்றியிருந்தது. சற்று தூரம் தள்ளி வண்டியை நிறுத்தினேன்.

"நானா, மார்ச்சுவரி பக்கத்துலதான், வெளிய நிக்கறேன், இன்னும் பாடிய கொடுக்கல, நேரமாகும் போல, எரிச்சலா இருக்கு, பேசாம கௌம்பலாமானு பாக்கறேன்" என்று ஒரு ஆள் சத்தமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அனேகமாக நான் பைக்கை நிறுத்திய சுவரின் மறுபுறம் பிணவறை இருக்கக்கூடும். ஏற்கெனவே தெரிந்ததுதான், ஆனாலும் அந்த ஆள் 'மார்ச்சுவரி' என்று சொன்னதும் என்னுடல் மெல்ல தன்னிச்சையாகக் கூசியது.

அங்கிருந்து மெல்ல நடந்தேன். என்னுடைய தோள் பையை மனைவியிடம் கொடுத்துவிட்டு வந்திருக்கலாம் என்று தோன்றியது. இப்போது அதைத் தூக்கிக் கொண்டு நடப்பதற்கு வேறு எரிச்சலாக இருந்தது. கட்டிடத்தின் வாசலில் காதுகளில் தண்டட்டி அணிந்திருந்த கிராமத்துப் பெண்கள் கூட்டத்திலிருந்து திடீரென ஒரு பெண் பெருங்குரலெடுத்து அழ ஆரம்பிக்க, மற்றவர்கள் அந்தப் பெண்ணைச் சூழ்ந்து கொண்டு தேற்ற ஆரம்பித்தார்கள்.

கறுப்புக் கடப்பா கற்கள் பாவப்பட்ட கட்டிடத்துக்குள் உள்ளே நுழைந்ததும் உடல் முழுக்கக் குளிர்ச்சி பரவியது. வெளியிலிருந்த வெக்கை, கசகசப்பு, தூசி, பெண்களின் அழுகுரல், வாகன இரைச்சல் மொத்தத்தையும் வாசலிலிருந்த ஒற்றைக் கண்ணாடிக் கதவு தடுத்து நிறுத்தியிருந்தது. என் முகத்தில் மாட்டியிருந்த மாஸ்க்கையும் தாண்டி ப்ளீச்சிங் பவுடர், பினாயில், இன்னபிற மருந்துகள் கலந்த வீச்சம் முகத்தில் அறைந்தது. வெளியே இருந்த மூத்திர வாடை உள்ளே இல்லை. நேரே நடந்து, இடது புறம் திரும்பியவுடன் டாக்டர் ரவிச்சந்திரனின் பெயர் பொறித்த பலகையைப் பார்த்தேன். அதற்குக் கீழே இருந்த நாற்காலி ஒன்றில் என் மனைவி அமர்ந்திருந்தாள். அந்த இடத்தில் மட்டும் மருந்து வாடை சற்று மட்டுப்பட்டு ரூம் ஃபிரஷ்னரின் எலுமிச்சை வாசனை கூடுதலாகச் சேர்ந்திருந்தது.

"எங்கங்க போனீங்க, இவ்ளோ நேரம் ஆச்சு?"

"அது ஆம்புலன்ஸ் நிக்கற இடம், அதனால வண்டிய வெளியே போய் நிப்பாட்டிட்டு வர்றேன்."

"எங்க?"

"மார்ச்சுவரி பக்கத்துல."

"திரும்பிப் போகும்போது நான் வரமாட்டேன், நீங்களே போய் எடுத்துட்டு வாங்க" என்று அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே டாக்டர் ரவிச்சந்திரன் வெளியே வந்தார். என் மனைவியைப் பார்த்து 'வாங்க' என்பதைப் போலத் தலையை மட்டும் அசைத்தார். என் மனைவி என்னைக் காட்டி "என் ஹஸ் பெண்ட்" என்றாள். "ஹலோ சார்" என்றார், நான் பதிலுக்குச் சொல்வதற்குள் "வாங்க" என்றபடி முன்னால் நடந்து போனார்.

அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் சற்று முன்னேயிருந்த காத்திருப்போர் அறைக்கருகில் போனதும் என் மனைவி என்னிடம் "ஏங்க, நீங்க உள்ள வர்றதுன்னா வாங்க, இல்லன்னா வெளிய இங்க வெய்ட்டிங் ரூம்ல இருந்தாலும் சரி" என்றாள்.

"நான் இங்கேயே இருக்கேன், கொஞ்சம் மெயில் பாக்கணும்" என்றேன்.

"ஹாஃப் அன் ஹவர் ப்ளீஸ்.." என்றாள். அப்போது என்னை வேலை வாங்கும்போது காட்டும் லேசான கெஞ்சல் முகபாவத்தைக் காட்டினாள்.

ரொம்பவே சுத்தமாகவும், சற்றே பெரிதாகவும் இருந்த அந்த அறையில், என்னோடு சேர்த்து ஏழெட்டு பேர் இருந்தார்கள். ஐசியூவுக்குள்ளிருந்து வரும் ஒரு தகவலுக்காக யுகங்களாகக் காத்திருக்கும் அசதி அவர்களது கண்களில் தெரிந்தது. மின்விசிறிகள் கடனே என்று ஓடிக்கொண்டிருந்தன. நான் ஒரு மின்விசிறியிலிருந்து காற்று வருகிறதா என்று பார்த்துவிட்டு, அதற்குக் கீழே வரிசையாக இருந்த நாற்காலிகளில் ஒன்றின் மீதமர்ந்தேன்.

என்னுடைய மடிக்கணினியைத் திறந்து, இணைய இணைப்பைக் கொடுத்து, அலுவலக மின்னஞ்சலைத் திறந்தேன். வழக்கமான தினசரி அறிக்கைகளை அனுப்ப வேண்டியதிருந்தது. அவற்றை அனுப்பிய பிறகு, திரையில் வந்து குவிந்த வெவ்வேறு தளங்களின் அறிவிப்புகளைப் பின்தொடர்ந்து போய்ப் பார்த்துக்கொண்டிருந்தேன். எதிலும் மனம் ஒட்டவில்லை. மடிக்கணினியை அணைத்து, பையில் வைத்துவிட்டு, அங்கிருந்தவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த அறை வழியாக அவ்வப்போது ஆட்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். ஐசியூவுக்குள்ளிருந்து ஒரு அம்மாவைக் கைத்தாங்கலாகவும், இன்னொரு சிறு பெண்ணை ஸ்ட்ரெச்சரில் வைத்தும் வெளியே அழைத்துப் போனார்கள்.

இலேசாகக் கண்ணயர்ந்திருந்தேன். "நிக்காதீங்க, தயவுசெய்து சேர்ல உட்காருங்க, நான் உள்ள போயி ட்யூட்டி டாக்டர வரச்சொல்றேன்" என்ற சத்தமான குரல் கேட்டு, நிகழ் உலகுக்குத் திரும்பினேன். ஒரு பெண் செவிலியர், ஓட்டமும் நடையுமாக அறையிலிருந்து ஐசியூக்குள் நுழைந்தார். நின்று கொண்டிருந்த சுடிதார் அணிந்த இளம் பெண்ணொருத்தி மெதுவாக நாற்காலியில் அமர்ந்தாள். அந்தப் பெண்ணுடைய சுடிதாரைப் பிடித்துக்கொண்டே, தலையில் கௌபாய் தொப்பி வைத்த, ஐந்து அல்லது ஆறு வயதுடைய சிறுவனும் அவளுக்கடுத்த நாற்காலியில் அமர்ந்துகொண்டான். அந்தப் பெண் நுனி நாற்காலியில் அமர்ந்துகொண்டு தன் கை கால்களை ஆராய ஆரம்பித்தாள். அவளது சுடிதாரின் இடுப்புப் பாகம் அருகே கந்தலாகக் கிழிந்திருந்தது. முழங்கைக்கு மேலே நன்றாகச் சிராய்த்து, மேற்தோல் வழன்று, ரத்தம் துளிர்க்க ஆரம்பித்திருந்தது. கால் பாதங்களுக்கு மேலேயும் நன்றாகச் சிராய்த்திருந்தது. காலுக்குக் கீழே அவளது செருப்பு நைந்து பிய்ந்து போய்க் கிடந்தது.

அந்தச் சிறுவன் மெல்ல எழுந்து வரிசையாக இருந்த நாற்காலி ஒன்றின் மேல் ஏறி நின்று தரையில் குதித்தான். பிறகு மேலும் இரண்டு மூன்று முறை அதே நாற்காலி மேலேறிக் குதித்து விட்டு, அடுத்த வரிசை நாற்காலி ஒன்றில் ஏறிக் குதிக்க ஆரம்பித்தான். பிறகு ஒவ்வொரு நாற்காலியாக ஏறி அதையே செய்தான்.

அவனைக் கவனித்த அந்தப் பெண், "அஜய், சேர் மேல ஏறிக் குதிக்கக் கூடாது, இங்க வா" என்று ஈனஸ்வரத்தில் சிலமுறை அழைத்தாள். அவளது வார்த்தைகளுக்கு அவன் கட்டுப்படவே இல்லை. அவளது குரலில் எரிச்சல் இருந்தது. அந்தச் சிறுவன் முதல் வரிசையை முடித்து விட்டு இரண்டாம் வரிசை நாற்காலிகளில் ஏறிக் குதிக்க ஆரம்பித்திருந்தான்.

இன்னொரு செவிலி வேக நடையில் வந்து அந்தப் பெண்ணிடம், "எங்க விழுந்தீங்க?" என்று கேட்டாள்.

"இங்கதான், ஜிஹெச் வாசல்லை வச்சு, ஒருத்தன் பைக்க ரேஸ் மாதிரி ஓட்டிட்டு வந்து இடிச்சுட்டு, திரும்பிப் பார்க்காம போயிட்டான்."

"எங்கங்க அடிபட்டிருக்கு?"

"கைல, கால்ல, இடுப்புகிட்ட இன்னும் எங்கெங்கேன்னு தெரியல, வண்டி சறுக்கிட்டே பத்தடி தூரத்துக்கு வந்திருச்சு" என்றபடி சோகையாகச் சிரிக்க முயன்றாள். பிறகு தனது இடுப்பருகே கிழிந்திருந்த சுடிதாரைப் பார்த்து "ஓ ஷிட்..." என்றபடியே அதில் ஒட்டியிருந்த மண்ணையும் தூசியையும் தட்டிவிட்டாள். செவிலி, "யாருக்காவது போன் பண்ணி இங்க வரச்சொல்லணும்னா சொல்லுங்க" என்றாள். சுடிதார் பெண்ணின் கண்களில் லேசான பயம் தெரிந்தது. "அவுங்க அப்பா, காலைலதான் வெளியூர் போனாங்க, இப்ப ட்ராவல் பண்ணிட்டு இருப்பாங்க, இப்ப சொன்னா திட்டுவாரு, அப்புறம் சொல்லிக்கலாம்" என்றாள்.

பிறகு, "அஜய் இங்க வா" என்று அந்தச் சிறுவனை அழைத்தாள். அவன் மறுப்பாகத் தலையசைத்து விட்டு இன்னொரு நாற்காலியில் ஏறினான். அவள் தனது கைப்பையைத் திறந்து மொபைல் போனை எடுத்து "கேம்ஸ் விளையாடறியா?" என்றவுடன் ஓடிவந்து அவளது கையிலிருந்த அலைபேசியைக் கிட்டத்தட்ட வெடுக்கென்று பிடுங்கி, சுற்றும் முற்றும் பார்த்தான். பிறகு என்னருகே காலியாக இருந்த நாற்காலியைத் தேடி வந்து அமர்ந்து, அலைபேசியைத் திறந்து ஏதோ ஒரு விளையாட்டை விளையாட ஆரம்பித்தான். துப்பாக்கிக் குண்டுகள் சுடும் சத்தம் மட்டும் எனக்குக் கேட்டது.

முதல் செவிலி வந்து சுடிதார்ப் பெண்ணின் புறங்கையில் வழிய ஆரம்பித்திருந்த ரத்தத்தையும், மண் தூசியையும் துடைத்துச் சுத்தம் செய்ய ஆரம்பித்தபடியே, "வேற எங்கேயாவது அடிபட்டிருக்கா?" என்றாள்.

"தலைல வலிக்கற மாதிரி இருக்கு" என்றவுடன், செவிலி லேசாகச் சந்தேக பாவனை காட்டினாள். "எங்க காட்டுங்க.." என்றபடி, சுடிதார் பெண்ணை அமர வைத்துவிட்டு அவளது தலைமுடியை ஒதுக்கி ஆராய்ந்தாள்.

செவிலி, காயங்களைத் துடைத்துக்கொண்டிருந்த முதல் செவிலியைப் பார்த்த அதே நொடி, அவளும் நிமிர்ந்து பார்த்தாள். ஒருவித நம்பிக்கையற்ற தொனியை அவர்கள் பார்வைகள் பரிமாறிக்கொண்டன. "என்ன இன்னும் டாக்டர காணோம்? எமர்ஜென்ஸி வார்டுக்கு வந்தாலும் ஆடி அசைஞ்சுதான் வருவாங்க" என்று கொஞ்சம் சத்தமாகவே சொல்லிவிட்டு உள்நோக்கி நடந்தாள்.

சுடிதார்ப் பெண் "அஜய், போனைக் கொடு, டாடிக்கு போன் பண்ணணும்" என்றாள். இப்போது அவளது குரல் கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போலிருந்தது. சிறுவன் உதட்டைப் பிதுக்கி 'ஊஹூம்' என்று தலையசைத்துவிட்டு விளையாட்டைத் தொடர்ந்தான். நான் அவன் என்ன விளையாடுகிறான் என்று பார்த்தேன். ஒரு கார்ட்டூன் கேரக்டர் ஒவ்வொருவராக அடித்து, உதைத்து வீழ்த்தியபடியே முன்னேறிப் போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு எதிரியும் செத்து விழும்போது தங்க நாணயங்களாக மாறிகொண்டிருந்தார்கள். ஒரு பெரிய தடியன் கேரக்டரை ரொம்ப நேரம் போராடி வீழ்த்தியவுடன் பெரியதொரு பண மூட்டை வந்தது. அதைக் கார்ட்டூன் கேரக்டர் தூக்கியவுடன் "ஊஹூ" என்று உடலைக் குறுக்கிக் கொண்டு சிரித்தது.

(மிகுதி அடுத்த வாரம் தொடரும்)

# நீண்ட காலமாக அல்லற்படும் 'அப்காசியா' மக்கள்:

## ஆதிக்க ஆக்கிரமிப்பு தொடரும் ஜோர்ஜீயா! உண்மையில் நேசக்கரம் நீட்டுகிறதா ரஷ்யா!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



அப்காசியா தனித்தன்மை வாய்ந்த கலாச்சாரம் மற்றும் பண்டைய வரலாறு கொண்ட ஒரு அற்புதமான நாடு. இந்த பகுதியில் வசிக்கும் மக்கள், தங்கள் தாயகத்திற்கு "இயற்கையின் நிலம்" என்றே பொருள் கூறுவர்.

அப்காசியா (Abkhazia) என்பது கோகேசியா மலைகளில் உள்ள ஒரு பகுதியாகும். அப்காசியா என்பது வடமேற்கு ஜார்ஜியாவில், பாரிய காகசஸ் மலைகளுக்கு தெற்கே, கருங்கடலின் கிழக்கு கடற்கரையில் உள்ள ஒரு ஐ.நா நடைமுறையில் அங்கீகரிக்கப்படாத குடியரசு ஆகும். முன்பு இது ஜோர்ஜியாவின் ஒரு அதிகார பூர்வ பகுதியாக தன்னாட்சியுள்ள குடியரசாக இருந்தது.

ரஷ்ய அரசு ஆகஸ்ட் 26, 2008 இல் இக்குடியரசையும், தெற்கு ஒசேத்தியாவையும் தனிநாடுகளாக அங்கீகரித்து அறிவித்தது. ஐநாவின் வேறு எந்த வீட்டோ உறுப்பு நாடுகளும் இதுவரையில் இதனை அங்கீகரிக்கவில்லை.

வடக்கு எல்லையில் ரஷ்யா உள்ளது. இது 8,660 சதுர கிலோமீட்டர் (3,340 சதுர மைல்) பரப்பளவைக் கொண்டுள்ளது மற்றும் சுமார் 240,000 மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. இதன் தலைநகரம் சுகுமி. தன்னாட்சி குடியரசான அப்காசிய அரசை முறையாக ரஷ்யா, வெனிசுலா, நிகரகுவா, நாவுரு மற்றும் சிரியா ஆகிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.




**அப்காசியா 1992 தனிநாடாக பிரகடனம்:**

1980களின் இறுதியில் சோவியத் யூனியன் சிதைவடையத் தொடங்கியபோது, ஜோர்ஜியாவின் சுதந்திரத்தை நோக்கிய நகர்வுகள் தொடர்பாக அப்காஸ் மற்றும் ஜார்ஜியர்களிடையே இனப் பதட்டங்கள் வளர்ந்தன. பல அப்காஸ்கள் இதை எதிர்த்தனர்,

ஒரு சுதந்திர ஜார்ஜியா தங்கள் சுயாட்சியை அகற்ற வழிவகுக்கும் என்று பயந்து, அதற்கு பதிலாக அப்காசியாவை ஒரு தனி குடியரசாக நிறுவ வாதிட்டனர். கொர்பச்சேவின் பெரெஸ்ட்ரோயிகாவின் தொடக்கத்துடன், அப்காஸ் தேசியவாதிகளின் நிகழ்ச்சி நிரல் மிகவும் தீவிரமானதாகவும் பிரத்தியேகமாகவும் மாறி வலுப்பெற்றது.

1988 ஆம் ஆண்டில், அப்காசியாவின் தன்னாட்சி குடியரசின் அரசு அந்தஸ்தை மறுசீரமைக்குமாறு ஜோர்ஜியா கேட்கத் தொடங்கினர். ஏனெனில் அப்காசியாவை மற்றொரு குடியரசாக சமர்ப்பிப்பது அவர்களின் வளர்ச்சிக்கு போதுமான உத்தரவாதங்களை அளிக்கவில்லை என்று கருதப்பட்டது.

**சர்வஜன வாக்கெடுப்பில் அப்காசியா:**

மார்ச் 1990 இல், ஜோர்ஜியா சுதந்திர இறையாண்மையை அறிவித்தது, 1921 முதல் சோவியத் அரசாங்கத்தால் நிறுவப்பட்ட ஒப்பந்தங்களை ஒருதலைப்பட்சமாக ரத்துசெய்து அதன் மூலம் சுதந்திரத்தை அறிவித்தது.

அப்காசியாவின் மக்கள்தொகையில் 52.3 வீதம் (கிட்டத்தட்ட அனைத்து ஜார்ஜிய இனத்தவர் அல்லாத மக்கள்) வாக்கெடுப்பில் பங்கேற்று தன்னாட்சி குடியரசை பாதுகாக்க பெரும் பெரும்பான்மையுடன் (98.6) வாக்களித்தனர்.

1991இல் முன்னாள் சோவியத் வெளியுறவு மந்திரியும் உலகளவில் பிரபல்யமான சோவியத் ஒன்றிய ராஜதந்தி எட்வார்ட் ஷெவர்ட்நாட்ஸே ஜோர்ஜியா நாட்டின் தலைவரானார்.

ஜார்ஜியாவிலிருந்து அப்காசியா விலகியதும், ரஷ்ய ஒருங்கிணைப்பைக் கோரும் அப்காசியன் இயக்கத்தால் ஜூலை 1989 இல் சுகுமியில் ஒரு மோதல் வெடித்தது. ஜார்ஜிய இராணுவம் சுகுமி மீது படையெடுத்து போர் தீவிரமடைந்தது. நீண்ட கால் போரின்பின் ரஷ்யாவிற்கும் ஜார்ஜியாவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் பின்னர், ஜூலை 1993 இல் ஜார்ஜியா, அப்காசியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளால் போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஜோர்ஜியாவிற்கும் அப்காசியாவிற்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானதன் பின்னர் ஐ.நா. பாதுகாப்புக் குழு அப்காசியாவில் ரஷ்ய இராணுவத்தை ஒரு அமைதிகாப்பாளராக நிறுத்துவதை அங்கீகரித்தது. அதே ஆண்டு நவம்பரில் அப்காசியா ஒரு புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டு, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்து, சுதந்திரத்தை அறிவித்து.

அப்காசிய மக்கள் 1992 ஆம் ஆண்டில் ஜோர்ஜியாவிடம் இருந்து தம்மை தனி நாடாக அறிவித்தனர். இதனை அடுத்து 1992 முதல் 1993 வரை இரு நாடுகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் ஜோர்ஜியா தோல்வியடைந்தது என்றே கருதலாம்.

**ஐநாவின் போர் நிறுத்த உடன்பாடு:**

1994 இல் ஐநாவின் ஆதரவில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது. ஐநாவின் கண்காணிப்பில், ரஷ்யா தலைமையிலான அமைதிப் படையினர் தலைநகர் சுகுமியில் நிலை கொண்டனர். எனினும் இது தொடர்பாக ரஷ்யாவுக்கும் ஜோர்ஜியாவுக்கும் இடையில் முறுகல் நிலை நீண்ட காலமாக தொடர்ந்தது.

சூலை 2006 இல் ஜோர்ஜியா அப்காசியாவின் "கடோரி கோர்ஜ்" பகுதியில் வலிந்த இராணுவத் தாக்குதலை நடத்தியிருந்தது. ஆயினும் ஆகஸ்ட் 2008 இல் அப்காசியப் படைகள் கடோரி ஏரியின் பெரும் பகுதிகளை மீளக் கைப்பற்றியது.

**அப்காசிய அரச வரலாறு:**

அப்காசிய அரச ராஜ்யத்தின் முனைப்பான காலம் எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது. பின் ஒன்பதாம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் அது ஜோர்ஜியா பகுதியாக மாறியது. பதின்மூன்றாம் நூற்றாண்டில், அப்காசியாவை மங்கோலிய- தத்தார்கள் கைப்பற்றி வென்றார்கள். பதினாறாம் நூற்றாண்டு முதல் துருக்கியர்களால் ஆளப்பட்டு பின் அப்காசியா ரஷ்யாவின் ஒரு பகுதியாக இணைந்தது.




ஜோர்ஜியாவில் அக்டோபர் புரட்சியின் வாசம் 1917களில் உணரப்பட்டது. 25.02.1921, ஜார்ஜியாவில் போல்ஷ்விக் ஆட்சி நடத்தப்பட்டது. அதற்கு முன்பே அப்காசியா மார்ச் 1921 இல் சோவியத்தில் இணைந்ததாக அறிவித்தனர்.

**ஜோர்ஜிய-அப்காசியன் மோதல்:**

தற்போதை ஜோர்ஜியாவிற்கு அப்காசியா மீது கட்டுப்பாடு இல்லை என்றாலும், ஜோர்ஜிய அரசாங்கமும் பெரும்பாலான ஐக்கிய நாடுகள் சபை உறுப்பு நாடுகளும் அப்காசியாவை , ஜோர்ஜீயாவின் ஒரு பகுதியை சட்டப்பூர்வமாகக் கருதுகின்றன.

ஆயினும் ரஷ்ய அரசியலமைப்பு இப்பகுதியை "அப்காசியா தன்னாட்சி குடியரசு" என்று குறிப்பிடுகிறது.

**ரஷ்ய அமைதி காக்கும் படை:**

1994 யுத்த நிறுத்த உடன்படிக்கையும், மற்றும் பல ஆண்டு பேச்சுவார்த்தைகள் நடந்த போதிலும், இன்னமும் சர்ச்சை தீர்க்கப்படாமல் உள்ளது. ஐக்கிய நாடுகளின் பார்வையாளர் பணி மற்றும் ரஷ்ய தலைமையிலான காமன்வெல்த் சுதந்திர நாடுகளின் (சிஐஎஸ்) அமைதி காக்கும் படையின் நீண்டகால இருப்பும், பல சந்தர்ப்பங்களில் வன்முறை வெடிப்பதைத் தடுக்க தவறிவிட்டது என்றும் கருதப்படுகிறது.

**2008 ரஷ்ய - ஜோர்ஜியா போர்**

ஆகஸ்ட் 2008 இல், ரஷ்ய- ஜோர்ஜியப் போரின்போது ஜோர்ஜியப் படைகளுக்கு எதிராக அப்காஸிய படைகள் போராடின. இது ரஷ்யாவால் அப்காசியாவை முறையாக அங்கீகரிப்பதற்கு ஒப்பானதாகும். ஆகஸ்ட் 28, 2008 அன்று, ஜோர்ஜியாவின் பாராளுமன்றம் அப்காசியாவை ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு பிரதேசமாக அறிவித்தது. இந்த நிலைப்பாடு மேற்குலக சர்வதேச சமூகத்தின் பெரும்பான்மையினரால் ஆதரிக்கப்பட்டது.

கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்து, சுதந்திரத்தை மேற்குலகு அங்கீகரித்த போது, அப்காசியா மற்றும் தெற்கு ஒசேத்தியாவை அங்கீகரிக்கலாம் என்று ரஷ்யா சுட்டிக்காட்டியது.

கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்து, ரஷ்ய நாடாளுமன்றம் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டது: "இப்போது கொசோவோவின் நிலைமை ஒரு சர்வதேச முன்னுதாரணமாகிவிட்டது, ரஷ்யா கொசோவோ சூழ்நிலையை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால், நடந்து கொண்டிருக்கும் மற்றய பிராந்திய மோதல்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் இந்த இரண்டு குடியரசுகளையும் அங்கீகரிப்பதில் ரஷ்யா தொடர்ந்து தாமதம் செய்து வந்தது. இருப்பினும், 16 ஏப்ரல் 2008 அன்று, வெளியேறும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், தெற்கு ஒசேத்தியா மற்றும் அப்காசியாவுடன் அங்கீகரித்து உத்தியோகபூர்வ உறவுகளை ஏற்படுத்துமாறு தனது அரசாங்கத்திற்கு அறிவுறுத்தினார்.

இதனை உண்மையான ரஷ்ய இணைப்பு முயற்சி என்று ஜோர்ஜியாவின் கண்டனத்திற்கும் வழிவகுத்தது. அத்துடன் ஐரோப்பிய ஒன்றியம், நேட்டோ மற்றும் பல மேற்கத்திய அரசாங்கங்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ரஷ்யாவின் பெடரல் அசெம்பிளி 25 ஆகஸ்ட் 2008 அன்று அப்காசியா மற்றும் தெற்கு ஒசேத்தியாவை அங்கீகரிப்பது பற்றி விவாதிக்க ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தது.

பிரிந்த குடியரசுகளின் சுதந்திரத்தை அங்கீகரிக்க ரஷ்ய ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கும் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, அன்றைய ரஷ்ய அதிபர் டிமிட்ரி மெட்வெடேவ், 26 ஆகஸ்ட் 2008 அன்று இரண்டையும் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தார்.

இதனை பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சர்வதேச சட்டத்தின் மீறல் காரணமாக நேட்டோ நாடுகள், ஐரோப்பிய கவுன்சில் நாடுகள் கண்டனம் செய்தன.

ஆயினும் ஐநா பொதுச் செயலாளர் பான் கி-மூன், சர்ச்சைக்குரிய பகுதிகளின் சுதந்திரத்தை அங்கீகரிக்க வேண்டுமா என்பதை இறையாண்மை கொண்ட நாடுகள் தாங்களாகவே தீர்மானிக்க வேண்டும் என்று கூறினார்.

அப்காசியாவில் ரஷ்ய செல்வாக்கின் அளவு அதிகரித்துள்ளதுடன், அப்காசியா தற்போது முழு ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ளது என்பதே உண்மை. அத்துடன் பொதுசன வாக்கெடுப்பில், அப்காசிய உள்ளூர்வாசிகள் ஜோர்ஜிய ஆதிக்கத்தை விட ரஷ்யாவுடன் இணைந்து வாழ விரும்புகிறார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F

24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 

வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 

பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

கல்வி tv CHANNEL-1

**11.09.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**11.09.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# போராட்டக்காரர்களையும் கட்சிக்குள் உள்வாங்குங்கள்

## மகிந்த ராஜபக்ஷ யோசனை

கொழும்பு, செப். 11

இலங்கை பொதுஜன பெரமுன அரசியல் சீர்திருத்தத்தை இலக்காகக்கொண்ட போராட்டக்காரர்களை உள்வாங்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன்படி, போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி, முடிந்தால் அந்த போராட்டக்காரர்களை தமது கட்சியுடன் அழைத்து வருவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கட்சியின் உயர்மட்ட தலைவர்களுக்கு மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை வலுப்படுத்தும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அடிப்படை விடயமாக போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான அமைப்பு ஒன்றை தயாரிக்கவேண்டும் எனவும் மகிந்த அறிவுறுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்டத் தலைவர்களுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே முன்னாள் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பூரண மேற்பார்வையின் கீழ், கட்சியின் வலுவூட்டல் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் விசேட அமைப்பு வேலைத்திட்டம்



ஆரம்பிக்கப்படவேண்டுமென மகிந்த ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக கட்சியின் உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கிராம மட்டத்தில் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளில் விசேட கவனம் செலுத்தி கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, தேசிய அமைப்பாளர், முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# இலங்கையில் குருதிச்சோகை நோயால் பாதிக்கப்படும் கர்ப்பிணி தாய்மார்கள்!

## தீர்வு வழங்கப்படவேண்டும் என்கிறார் இம்ரான் மஹ்ரூப் எம்.பி.

கொழும்பு, செப். 11

போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறுவர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

சிறுவர் மற்றும் தாய்மார்களுடைய குறைபோசனை பிரேரணை தொடர்பிலான பாராளுமன்ற விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போசாக்கு குறைப்பாட்டின் காரணமாக தாய்மார்கள் குருதிச்சோகையினால் பாதிக்கப்படும் நிலை

உருவாகியுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் தேவையான திரிபோஷா உணவு இடைநிறுத்தப்படுள்ளது.

ஆகவே திரிபோஷா வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும், கர்ப்பிணித் தாய்மார்கள், பிள்ளைகள் போசனைக் குறைபாட்டினால் பாதிக்கப்படுகின்றமைக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும்.

தற்போது பொருளாதார நெருக்கடியினால் கர்ப்பிணித் தாய்மார்கள் குருதிச்சோகை நோயினால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். இதனால் பிள்ளைகளின் வளர்ச்சி வீதம் குறைவடைகிறது. இந்த நிலை குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் அதிகளவில் காணப்படுகிறது.

அதேபோன்று கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இலவசமாக செய்யப்பட்ட குருதிப் பரிசோதனை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் தனியார் வைத்திய சாலைக்குச் செல்லவேண்டிய நிலை உள்ளது.

அத்துடன் குடும்பநல உத்தியோகத்தர்கள் பல பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்ற னர்.

ஆகவே மேற்குறிப்பிட்ட அனைத்து பிரச்னைகளுக்கும் உடனடி தீர்வு வழக்கப்படவேண்டும் - என்றார். (அ)

# பொதுமக்களின் பணத்தை மிகவும் சிக்கனமாக பயன்படுத்தவேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு

கொழும்பு, செப். 11

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு, பொதுமக்களின் பணத்தை மிகவும் சிக்கனமாகவும், அதிகபட்ச வினைத்திறனுடனும் பயன்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

அரச செலவினங்களை நிர்வகிப்பதற்கென விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர்கள் தமது கடமைகளை மேற்கொள்ளும்போது புதிய விதிமுறைகளுக்கு அமைய செயற்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சுக்களுக்கு தனியாக நிதி ஒதுக்கப்படமாட்டாது எனவும், இராஜாங்க அமைச்சுக்களுக்குச் செயலாளர் நியமிக்கப்படமாட்டார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

துறைசார் இராஜாங்க அமைச்சர்கள், பணிகளை இலகுபடுத்த, தனது அமைச்சுக்களில் உள்ள மேலதிக செயலாளர்களில் சிரேஷ்ட அதிகாரியின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும்.

நியமிக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்கள் தமது அமைச்சில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாளர்களைப் பயன்படுத்தியே தமது பணிகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

பதவிகளில் புதியவர்களை அமர்த்துவதற்கான கோரிக்கைகளை நிர்வாக சேவைகள் திணைக்களத்திடம் முன்வைக்ககூடாது.

அமைச்சரவை அமைச்சர்கள் தற்போது பணி செய்துவரும் அலுவலக வளாகத்துக்குள்ளேயே இராஜாங்க அமைச்சர்களின் பணிகளையும் முன்னெடுக்க வேண்டும்.

இராஜாங்க அமைச்சர்களுடைய பணியாளர் குழாமில் பிரத்தியேக செயலாளருக்கு மட்டுமே உத்தியோகபூர்வ வாகன வசதி வழங்கப்படும்.

பிரத்தியேக செயலாளரின் உத்தியோகபூர்வ சாரதியின் மேலதிக நேரம் மற்றும் இதர கொடுப்பனவுகள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின்படி கையாளப்படவேண்டும்.

பணியாளர் குழாமின் ஏனைய உறுப்பினர்களுக்காக 2 வாகனங்கள் மட்டுமே ஒதுக்க வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக அமைச்சுக்கு சொந்தமான ஏனைய வாகனங்களை அதிகாரிகள் பயன்படுத்தக்கூடாது.

நிர்வாக உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், அலுவலக உதவியாளர், சாரதி ஆகியோர் நிரந்தர அரச ஊழியர்களாகவே இருத்தல் வேண்டும். அந்த சாரதிகள் மாதாந்தம் மேலதிக நேரக் கொடுப்பனவாக அதிகபட்சம் 150 மணி நேரத்துக்கான கொடுப்பனவை மட்டுமே பெறமுடியும்.

பிரத்தியேக செயலாளர், ஒருங்கிணைப்பு செயலாளர், ஊடகச் செயலாளர், மக்கள் தொடர்பு அதிகாரி ஆகியோருக்கு குறைந்தபட்ச தொலைத் தொடர்பு கொடுப்பனவு வழங்க முடியும்.

இதில் இணையப் பயன்பாடு, சர்வதேச தொலைபேசிக் கட்டணம், மாதாந்த நிலையான கட்டணம், வரிகள் உட்பட ஏனைய கட்டணங்களும் இவற்றில் உள்ளடங்கும்.

உதவி ஊழியர்களுக்கு அரச செலவில் தொலைபேசிக் கட்டணங்கள் வழங்கப்படமாட்டாது போன்ற விதிமுறைகள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதி செயலாளரால் இந்தப் பரிந்துரைகள் வெளியிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

# பிரபல ஓவியர் தவம் மறைவு



யாழ்ப்பாணம்,செப்.11

பிரபல ஓவியரும் அச்சுத்துறை நிபுணருமான தவம் (வீ. சுப்பிரமணியம் சிறிது கால சுகவீனத்துக்கு பிறகு கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் தனது 74வது வயதில் காலமானார்.

வடமராட்சி கரவெட்டியை சேர்ந்த தவம் 1960 களில் தொடங்கி பத்திரிகைத்துறை ஓவியராக பணியாற்றத் தொடங்கிய தமிழ் ஓவியர்கள் வரிசையில் முக்கியமான ஒருவர். கொழும்பில் கே.ஜி. இண்டஸ்ட்ரீஸ், சினிமாஸ் தியேட்டர்ஸ் நிறுவனங்களில் பணியாற்றுவதற்கு முன்னர் வீரகேசரி ஆசிரியபீட ஓவியர்களில் ஒருவராக இருந்தவர். இளவயதில் இந்தியா சென்று ஓவியக் கலையின் நுட்பங்களை பயின்றவர்.

நவீன அச்சுத்துறையில் ஆர்வம் கொண்ட அவர் கொழும்பில் லக்சு கிரபிக்ஸ் என்ற அச்சு நிறுவனத்தையும் நிறுவியவர்.

கரவெட்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தவத்தின் இறுதிக்கிரியைகளில் சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் பெருமளவில் கலந்துகொண்டு அவருக்கு அஞ்சலி செலுத்தினர். அவரின் மறைவு தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஓவியத் துறைக்கு பெரும் இழப்பு என்று இறுதி நிகழ்வில் அஞ்சலி உரைாநிகழ்த்திய பலரும் தெரிவித்தனர். சுகவீனமுற்றிருந்த நிலையிலும் இறுதி நாட்களிலும் அவர் ஓவியங்களை வரைவதைக் கைவிடவில்லை.

# டலஸ் அணியைச் சந்திக்க மறுத்த மல்வத்த பீடாதிபதி

கொழும்பு, செப். 11

மல்வத்தை பீடத்தின் மகா நாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் நேற்று முன்தினம் கண்டிக்கு விஜயம் செய்த டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க மறுத்துள்ளார்.

பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்து சுயேச்சை பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபட்டதன் பின்னர் மகாநாயக்க தேரரை சந்திப்பதற்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரரைச் சந்தித்து ஆசி பெற்றனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் மூன்று பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்தத் தவறியதால், மறு அறிவித்தல் வரை எந்தவொரு அரசியல்வாதியையும் சந்திப்பதில்லை என மல்வத்தை மகாநாயக்கர் தீர்மானித்துள்ளதாகக் கூறப்பட்டது.

எனினும், இந்த தீர்மானத்தின் பின்னர் - கோட்டாபய தரப்பின் தொடர்ச்சியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை அவர் சந்தித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன் தினம் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர். (அ)

# தமிழகத்தில்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமந்திரன் மிதிவண்டியில் மாவை அண்ணனைப் பின்னால் அமர வைத்துக்கொண்டு, தேசிய சபைக் கூட்டத்துக்குச் செல்கிறார். செல்வம் அடைக்கலநாதன் அங்கு தன் வீர உரையை ஆற்றி வருகிறார். கொழும்பில் உள்ள அமைச்சர்களும் மற்ற உயரதிகாரிகளும் தம்முடைய சம்பாத்தியத்தைக் குறைத்துக்கொள்ளவும், கமிஷன், லஞ்சம் ஆகியவற்றைத் தியாகம் செய்யவும் நாட்டுக்கு வாக்களித்துள்ளார்கள். அதற்கு நன்றி என்று தீர்மானம் போடுவோம் என்கிறார். குளிர்ந்த இரவின் கனவு மேலும் நீண்டது. நல்லூர்க் கந்தன் முன், மேல் சட்டையில்லாத க்வி நிற்பதையும், தனது பிரார்த்தனையில் சீனா இல்லாமல், உண்மையான பக்தியுடன் நிற்பதையும் காண்கிறேன். அவருக்கு அருகில் கண்களை மூடி, 'ஓம் முருகா, ஓம் சரவணபவ சரணம்' என்று ஓதும் கோபால் பாக்லே. தானும் க்வியும் இறைவனுக்கு அணிவிக்க இரண்டு மாலைகள் அவர் கைகளில். நானும் என் உறக்கத்தில் பிரார்த்தனைகளைச் செய்தேன். 'கந்தா, என்னை இதே கனவில் மூழ்கடித்துவிடு, எழுப்பாதே அய்யனே'. என் உடோபியன் கனவின் உரையால் உங்களின் காலை உணவைத் தாமதமாக்கிவிட்டேன், மன்னிக்கவும். உங்களின் இந்த நாளும், வரும் எதிர்காலமும் இனிமையாக அமைய கந்தனை வேண்டுகிறேன்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

## போர்க்குற்றச்...

போர்க்குற்றச்சாட்டை முன்வைத்தால் அதை ஏற்க நாம் தயாரில்லை" - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஜெனிவாவில் வைத்து தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வு எதிர்வரும் 12ஆம் திகதி ஜெனிவாவில் தொடங்கவுள்ளது. இந்த நிலையில், இலங்கையில் போர்க் குற்றம் புரிந்தோரை உலக நாடுகள் இலக்கு வைக்கவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட்டின் இலங்கை தொடர்பான அவதானிப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெனிவா சென்றுள்ள இலங்கை அரச குழுவிலுள்ள முக்கியஸ்தரான நீதி அமைச் சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் இது தொடர்பில், சர்வதேச ஊடகம் ஒன்று வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு இலங்கை அரசின் உத்தியோக பூர்வ பதில் கூட்ட அமர்வில் தெரிவிக்கப்படும்.

எனினும், உங்கள் (சர்வதேச செய்தியாளர்) கேள்விக்கான பதிலாக, இலங்கை மீது எந்தவொரு தரப்பினரும் போர்க் குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

இதை மீறி எமது நாடு மீது போர்க் குற்றச்சாட்டை எவரும் முன்வைத்தால் அதை ஏற்க நாம் தயாரில்லை.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த போர் முடிவுக்கு வந்ததே பெரிய விடயம்.

போரின்போது படையினரில் ஒரு சிலர் தவறுகளை இழைத்திருக்கக்கலாம். அதற்காக ஒட்டுமொத்த படையினர் மீதோ அல்லது நாடு மீதோ போர்க்குற்றச்சாட்டை எந்தத் தரப்பும் முன்வைக்க முடியாது.

இலங்கை இறைமையுள்ள நாடு. தவறிழைத்த படையினருக்கு எதிரான விசாரணை உள்ளகப் பொறிமுறையூடாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதைவிடுத்து சர்வதேசப் பொறிமுறையூடான விசாரணையை இலங்கை அரசு ஒருபோதும் ஏற்கமுடியாது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் இலங்கை ஒன்றிணைந்து செயற்படவே விரும்புகின்றது. போர்க்குற்றச்சாட்டு என்ற விவகாரம் இலங்கையில் இனங்களுக்கிடையில் திரும்பவும் பிளவை ஏற்படுத்தவே வழிவகுக்கும்.

இந்த விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும், அதன் உறுப்பு நாடுகளும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும்-என்றார். (அ)

## ஊர்திவழி...

நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலிலிருந்து சிதறு தேங்காய் உடைக்கப்பட்டு ஆரம்பமான ஊர்தி வழிப் போராட்டம் காங்கேசன்துறை தொடக்கம் 25 மாவட்டங்களுக்கும் சென்று இறுதியில் அம்பாந்தோட்டை நகரைச் சென்றடையவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பும் இணைந்து முன்னெடுக்கும் இந்தக் கையெழுத்துத் திரட்டும் பிரசார நடவடிக்கையின் ஆரம்ப நிகழ்வில் பலர் கலந்துகொண்டனர்.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட காலிமுகத்திடல் போராட்டச் செயற்பாட்டாளர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் தலைவர் கி. சேயோன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த ஊர்தி வழிப் போராட்டம் மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று கையெழுத்தைச் சேகரிக்கவுள்ளதுடன் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ-03)

## இலங்கையில்...

இந்தப் புதிய நிதியானது, அடுத்த அறுவடைப் பருவத்தில் விவசாயிகளுக்குத் தேவையான விவசாயத் தேவைகள் மற்றும் உரங்களை உரிய நேரத்தில் பெறுவதற்கும், அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு வழங்குவதற்கும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க அதிகாரிகள், தனியார் துறைப் பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் சிக்கலான அவசரநிலையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களைச் சந்தித்து, தற்போதைய நெருக்கடியால் அவர்களின் வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதைப் பற்றி அவர் விவாதிக்க உள்ளார். நேற்று ஜா-எலவில் உள்ள விவசாயிகளை சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் குறித்து கலந்துரையாடினார்.

இலங்கையர்களின் பின்னடைவுக்கு ஆதரவளிக்கும் வகையில் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு இலங்கை மக்களுடன் இணைந்து செயற்பட்ட வரலாற்றை அமெரிக்கா கொண்டுள்ளது என சுட்டிக்காட்டிய சமந்தா பவர், விவசாயிகள் தமது வாழ்வாதாரத்தை தொடர்வதற்கு கடினமான காலமாக மாறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் உணவுப் பாதுகாப்பின்மை குறித்த உலக உணவுத் திட்ட அறிக்கையை மேற்கோள்காட்டி, இது நாட்டின் பொருளாதார நெருக்கடியின் விளைவாகும் என பவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்படக்கூடிய இந்த நேரத்தில் இலங்கையர்களுக்கு அமெரிக்கா துணை நிற்கிறது என்றும், இரண்டு நாள் பயணத்துக்குள் மேலும் பல பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது குறித்து அவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக பல்வேறு கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற தலைவர்களையும் பவர் சந்திக்க உள்ளார்.

அவர் தனது விஜயத்தின் போது, இலங்கை மக்களுக்கு அமெரிக்காவின் நீடித்த ஆதரவை முன்னிலைப்படுத்துவதோடு, உணவுப் பாதுகாப்பு, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் பிராந்தியத்தில் உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போரின் தாக்கம் தொடர்பான பிரச்னைகள் குறித்தும் விவாதிப்பார். (அ)

## மொட்டு கட்சி...

எண்ணிக்கையிலான செயலமர்வுகளை நடத்தவும் கட்சி முடிவு செய்துள்ளது.

அந்த செயலமர்வுகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற உள்ளன. (அ)

## இலங்கை மீதான...

நெருக்கடிக்கு மத்தியில் மனித உரிமைகள் தொடர்பான கவலைகளை கண்காணிப்பதற்கும், அறிக்கையிடுவதற்கும், பரிந்துரைகளை வழங்குவதற்கும் இலங்கை தொடர்பான நிபுணர் பொறிமுறையை அமைக்கவேண்டும் என்றும் அது கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த பொறிமுறைகளின் அவசியத்தை உணர்ந்து, இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளை சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது. (அ)

# ரணிலின் பெயரளவு பதவிகளால் மொட்டுக் கட்சி கடும் அதிருப்தி!

கொழும்பு, செப். 11

இராஜாங்க அமைச்சர்களுக்குரிய பல்வேறு வரப்பிரசாதங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நிறுத்தப்பட்டுள்ளமை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று அறியமுடிகின்றது.

பதவியேற்றுள்ள 37 இராஜாங்க அமைச்சர்களில் அதிகளவானோர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்களே. இவர்களை விடவும் பெரமுனவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்துள்ளனர்.

இந்நிலையில் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக இராஜாங்க அமைச்சர்களுக்குரிய வரப்பிரசாதங்கள் பல நிறுத்தப்படுகின்றன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். அது பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று அறிய முடிகின்றது.

இராஜாங்க அமைச்சர்களாகப் பொறுப்பேற்றவர்கள், தமது இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்படவேண்டிய மேலதிக கொடுப்பனவு தேவையில்லை என்று தெரி வித்திருந்தபோதும், ஏனைய வரப்பிரசாதங் கள் தொடர்பில் எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்தநிலையில், அவர்கள் பலர் ஏற்கனவே அந்தந்த அமைச்சுக்களிடம் வாகனங்களைக் கோரியிருந்ததுடன், இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளை காண்பித்து தமது வாகன உரிமைகள் மற்றும் அவற்றின் தேவைகள் தொடர்பாக அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

அவர்களின் கோரிக்கைக்கு அமைய புதிதாக பதவியேற்றுள்ள 37 இராஜாங்க அமைச்சர்களுக்கு 296 அரசாங்க வாகனங்கள், அதற்கான எரிபொருள் மற்றும் சாரதிகளை ஒதுக்கவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இந்தநிலையில், ஜனாதிபதியின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை பெரமுன இராஜாங்க அமைச்சர்களை அதிருப்தியடைய வைத்துள்ளது. (அ)

## ஐ.நா. மனித...

பொறுப்பை வகித்து வந்த, சிலியைச் சேர்ந்த மிச்செல் பச்சலெட் பதவிக் காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, அந்தப் பொறுப்புக்கு வோல்கர் டர்க்கின் பெயரை ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டரெஸ் பரிந்துரைத்தார்.

இந்த நியமனத்துக்கு 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொது சபை ஒப்புதல் அளித்தது. அதையடுத்து, ஐ.நா. மனித உரிமை ஆணையாளராகப் அவர் பொறுப்பேற்கிறார்.

மனித உரிமைகள் பேரவை ஆணையாளராக நியமிக்கப்பட்டது எனக்கு கிடைத்த கௌரவம். எனக்குரிய பொறுப்பை பெரும் பொறுப்புணர்வுடன் ஏற்று திறம்படச் செயற்படுவேன் என வோல்கர் டர்க் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைக் கடப்பாடுகளை உலகின் அனைத்து இடங்களிலும் பேண முடிந்த அனைத்தையும் செய்வேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வோல்கர் டர்க் முன்பு மலேசியா, கொசோவோ மற்றும் போஸ்னியா ஹெர்சகோவினா, கொங்கோ ஜனநாயகக் குடியரசு மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் ஐ.நா அகதிகள் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றினார். (அ)

## அரசியல் தீர்வு...

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது: -

சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் நல்ல தீர்வு முன்வைக்கப்படும். அந்தக் கைதிகளில் ஒரு தொகுதியினர் விரைவில் விடுவிக்கப்படவுள்ளனர்.

காணி விடயம் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கும் தீர்வுகள் முன்வைக்கப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி நடத்திய பேச்சின்போது இதற்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகளைக் காணாமல் புலம்பெயர் தமிழ் மக்களுடன் இலங்கை அரசு நெருக்கமாகச் செயற்பட முடியாது என்று தெரிவிக்கப்படும் கருத்துடன் நான் உடன்படுகின்றேன்.

இலங்கை மீண்டெழ புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிகளும், ஒத்துழைப்புக்களும் கட்டாயம் தேவை-என்றார். (அ)

## புதிதாக...

முன்மொழிந்துள்ளது.

ஆயினும் நாமலை அமைச்சராக நியமிக்க ஜனாதிபதி ரணில் மறுத்துவிட்டார் எனக் கூறப்படுகின்றது.

ஏனைய கட்சிகளில் இருந்து ஜீவன் தொண்டமான் மற்றும் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோர் முன்மொழியப்பட்டுள்ளனர். (அ)

## கூட்டமைப்பு,...

டான் தொலைக்காட்சியில் ஞாயிறு தோறும் இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகி வரும் ஸ்பொட்லைட் நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மீதான விமர்சனங்கள், தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள்ளக முரண்பாடுகள் தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மீதான விமர்சனங்கள் உண்மையே. அதில் ஒளிவு மறைவு எதுவும் இல்லை. இனிமேலும் எல்லாவற்றையும் மூடி மறைத்து மக்கள் மத்தியில் குற்றவாளிகளாக வலம் வர நான் தயாரில்லை. சில விடயங்களைப் பொதுவெளியில் இனிமேல் நான் பேசவுள்ளேன். மக்களுக்கும் அவை தெரியவேண்டும். எல்லாவற்றையும் மூடிமறைத்துக்கொண்டு கட்சியை முன்கொண்டு செல்லமுடியாது. சில வற்றை வெளிப்படுத்தினால்தான் மாற்றங்கள் ஏற்படும்.

தமிழரசுக் கட்சியின் தலைமை சில விடயங்களில் சரியான-பொருத்தமான முடிவை எடுக்காமல் மென்போக்கைக் கடைப்பிடிப்பது அல்லது பின் தள்ளிப் போடுவது கட்சியின் வீழ்ச்சிக்கும் உள் முரண்பாடுகளுக்கும் காரணமாக அமைந்துவிடுகின்றது. தலைமை ஒரு உறுதியான தீர்மானத்தை எடுத்தால் அதில் இருந்து விலகக்கூடாது. ஆகவே தலைமை மாற்றங்கள் செய்யப்படவேண்டியது அவசியம்-என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவிக்கு பொருத்தமானவர் யார் என அவரிடம் எழுப்பிய கேள்விக்கு-

கூட்டமைப்பின் தலைமைப் பதவிக்கு பொருத்தமானவர்கள் எனத் தனி நபர்கள் எவரையும் குறிப்பிட முடியாது. அவ்வாறு தலைமைப் பதவி வகிக்கக்கூடிய எவரும் இப்போது கூட்டமைப்புக்குள் இல்லை. கூட்டமைப்புக்கு இனிமேல் கூட்டுத் தலைமையே வேண்டும். அதுவே பொருத்தமானது. கூட்டுத் தலைமை மூலமே கூட்டமைப்பை இனி முன்கொண்டு செல்லமுடியும்-என்றார்.

கூட்டமைப்புக்குள் ரெலோவின் செயற்பாடுகள் குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்- சில விடயங்களில் ரெலோ தன்னிச்சையாக நடந்து கொள்கின்றது. ஜனாதிபதியை ரெலோ சந்திப்பதில் தவறில்லை. ஆனால் அது குறித்து முன்னரே பங்காளிகளுக்கு தெரியப்படுத்தவேண்டும்-என்றார். (அ)

(மேலதிக தகவல்கள் இன்று இரவு 7 மணிக்கு டான் தொலைக்காட்சியின் ஸ்பொட்லைட் நிகச்சியில்)

ஈழநாடு
Eelanadu

# ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார் ரணில்!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 11

**ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாப்பதற்காக ஜனாதிபதி, மக்கள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.**

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி மக்களுடன் இணைந்து போராடும் எனவும் அவர் தெரிவித்தார்.

அரச பயங்கரவாதத்தின் ஊடாக நாட்டின் மாணவர்கள் மற்றும் இளம் தலைமுறையினரை நசுக்கும் கோழைத்தனமான முயற்சியை அரசாங்கம் எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

37 இராஜாங்க அமைச்சர்களை நியமிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையை கடுமையாக சாடிய சஜித் பிரேமதாஸ, அமைச்சர்களின் செலவுகளுக்காக மக்களின் வரிப்பணம் செலவிடப்படுகிறது என்றும் குற்றம் சாட்டினார்.(அ)

# நாமலுக்கு அமைச்சு பதவி தற்போது வழங்கமுடியாது!

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்



கொழும்பு, செப். 11

தற்போதைய சூழ்நிலையில் நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சுப் பதவி வழங்கமுடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷ உட்பட மொட்டு கட்சியின் பிரமுகர்கள் சிலர், நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சுப் பதவியை வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர். எனினும், தற்போதைய சூழ்நிலையில் அதனைச் செய்ய முடியாது என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தியுள்ளார். ரணிலின் கருத்துடன் மகிந்தவுடன் உடன்பட்டுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (அ)

# கோணேஸ்வர ஆக்கிரமிப்பு குறித்து ஆராயவுள்ளன சைவ அமைப்புக்கள்

யாழ்ப்பாணம், செப். 11

திருக்கோணேஸ்வரத்தை ஆக்கிரமிப்பதற்கு எதிராக சைவசமய அமைப்புக்கள் ஒன்று கூடி தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் விசேட கூட்டம் இன்று முற்பகல் 10.00 மணிக்கு கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ல அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிராந்திய அலுவலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழர்களின் பூர்வீகச் சொத்தாக விளங்கும் திருக்கோணமலை திருக்கோணேஸ்வர ஆலயம் அமைந்துள்ள பகுதியில் திட்டமிட்டு சிங்கள வாணிப நிலையங்களை நிரந்தரமாக அமைப்பதற்கு அவசர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இது குறித்து பலரும் அரசாங்கத்திடம் தமது எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும், திட்டமிட்டு அரசின் ஆதரவோடு திருக்கோணேஸ்வரச் சூழல் பறிக்கப்பட்டு வருகிறது. ஆலயத்துக்கு உரித்தான 18 ஏக்கர் நிலப்பரப்புக் காணிக்குள் தொல்லியல் திணைக்களமும், கிழக்கு மாகாண ஆளுநரும் கோவில் நிலத்தை அபகரிக்கும் செயற்பாட்டில் இறங்கியிருப்பதைத் தடுக்க அனைவரும் ஒன்றுபட்டு எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்காக இந்த கண்டனக் கூட்டம் கூட்டப்படுகின்றது.

சைவசமய அமைப்புக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் தலைமையில் திருக்கோணமலை கோணேஸ்வர ஆலய நிர்வாக சபையினர் உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு அங்குள்ள இன்றைய சூழலை தெரியப்படுத்தவுள்ளனர். (அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு அவசர கடன்!

கொழும்பு, செப். 11

ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உணவு கிடைப்பதை உறுதி செய்யவும் அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 203 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவசர உதவிக் கடனை வழங்குகிறது.

இதற்கான ஒப்பந்தம் நேற்று முன் தினம் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து அவசரகால கடன் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும்போது, ஆசியா மற்றும் பசிபிக் நிதியம், திட்ட நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்காக 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குகிறது.

இந்த நிதி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாகவே வழங்கப்படவுள்ளது. (அ)

# ஹாட்லிக் கல்லூரி மாணவர்களால் 2 இலட்சம் பணம் விதைகள் நடுகை

யாழ்ப்பாணம், செப். 11

வடமராட்சி ஹாட்லிக் கல்லூரியின் 1998 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர அணியினரினால் இரண்டு இலட்சம் பனை விதைகள் நடும் திட்டம் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புலம் பெயர் மற்றும் உள்ளூர் பழைய மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, பனை அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் ச. லோகநாதன், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை முகாமையாளர் பொறியியலாளர் எஸ்.ஜெகதீசன் ஆகியோர் கலந்துகொண்டு பனம் விதைகளை நடுகை செய்து தொடக்கி வைத்தனர்.



காலை 8 மணி முதல் ஆரம்பமான குறித்த நிகழ்வு நேற்று மாலை 4 மணிவரை இடம்பெற்றது.

குறித்த இரண்டு இலட்சம் பனம் விதைகள் நடுகை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையும் இடம்பெறவுள்ளது. (அ)

# புதிய வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்கும் சுகாதார அமைச்சு!

கொழும்பு, செப். 11



நாட்டில் சுகாதார துறைக்கு அவசியமான தேவைகளை பெற்றுக் கொள்வதற்காக புதிய வங்கிக் கணக் கொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்புடன் இணைந்ததாக இந்த கணக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இதனூடாக, சர்வதேச நாடுகளிலிருந்து சுகாதார துறைக்கு அவசியமான உதவிகளை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு இக்கட்டான நிலையை எதிர்நோக்கியுள்ள நிலையில், உலக நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் உதவியின் அவசியம் குறித்தும் சுகாதார அமைச்சர் இதன்போது வலியுறுத்தினார். (அ)

# இந்தியாவின் முதலீடுகளுக்கு சுற்றறிக்கைகள் இடையூறா?

## உடன் மீளாய்வுக்கு பணித்தார் ரணில்

கொழும்பு, செப். 11

இந்திய முதலீடுகள் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இடையூறான சுற்றறிக்கைகளை உடனடியாக மீளாய்வு செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்திய முதலீட்டு ஒத்துழைப்பின் அடிப்படையில் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஜனாதிபதி தலைமையில் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இந்திய பிரதி தூதுவர் வினோத் கே.ஜேக்கப்பும் பிரசன்னமாகியிருந்தார்.

இதன்போதே இந்திய முதலீடுகளின் கீழ் இலங்கையில் பல திட்டங்களை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள தடைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சு செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

முன்னைய அரசாங்கங்களினால் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளில் உள்ள ஏற்பாடுகள் அபிவிருத்திக்கு இடையூறாக இருப்பின் அவற்றைத் திருத்தவேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி விக்கிரமசிங்க விளக்கினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கொழும்பு, செப். 11

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-வேதம்
4.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்

**இரவு**
7.00 மணி : SPOTLIGHT- சிவிகே. சிவஞானம்-இலங்கை தமிழரசுக்கட்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : டான் பட்டிமன்றம்



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை



## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சக்தி / ஐ ரிவி

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரீஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு